


தமிழ்நாடு
இ பேப்பர்.காம்
www. tamilnaduepaper.com




CHENNAI | Vo ume- 2 | Issue: 260 | 02-04-2025 | புதன்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி

# இந்தியாவின் விவசாய பொருட்கள் மீது 100% வரி

## அமெரிக்கா திட்டம்

**அமெரிக்கா, ஏப்.2:**

அமெரிக்க பரஸ்பர வரிகளில் இந்தியா உள்ளிட்ட நாடுகள் பாதிக்கப்படும் என்று கூறப்படுகிறது. மேலும், இந்தியாவின் விவசாயப் பொருட்கள் மீது 100% வரை வரிகளை விதிக்க அமெரிக்கா திட்டமிட்டுள்ளதாக அஞ்சப்படுகிறது.

அமெரிக்காவின் அதிபராக 2-வது முறையாக பொறுப்பேற்ற டொனால்டு ட்ரம்ப், தங்கள் நாட்டின் பொருட்களுக்கு இந்தியா உள்ளிட்ட பல நாடுகள் அதிக வரி விதிப்பதாக குற்றம் சாட்டினார். இதற்கு பதிலடியாக, அமெரிக்காவில் இறக்குமதியாகும் பிற நாடுகளின் பொருட்களுக்கு, சம்பந்தப்பட்ட நாடுகள் விதிக்கும் அதே அளவுக்கு (பரஸ்பர வரி) ஏப்ரல் 2-ம் தேதி முதல் வரி விதிக்கப்படும் என அறிவித்தார். தற்போது, அமெரிக்கா வர்த்தக ஏற்றத்தாழ்வுகளை உன்னிப்பாகக் கண்காணித்து வருகிறது.

இதையடுத்து, இது தொடர்பாக உலக நாடுகள் அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றன. இந்நிலையில், அதிபர் ட்ரம்ப் செய்தியாளர்களிடம் நேற்று கூறும்போது, “அனைத்து உலக நாடுகளின் பொருட்கள் மீதும் கூடுதல் வரி விதிக்கப்படும். என்ன நடக்கிறது என்று பார்ப்போம்” என்றார். இதனால் உலக நாடுகள் கலக்கத்தில் உள்ளன.



இந்நிலையில், வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் கரோலின் லீவிட், “ஒவ்வொரு நாடும் அமெரிக்காவுக்கு விதிக்கக் கூடிய வரி குறித்த தகவலை வெளியிட்டுள்ளார். அதன்படி, அமெரிக்க பால் பொருட்கள் மீது ஐரோப்பிய யூனியன் 50 சதவீத வரியும், அமெரிக்க அரிசி மீது ஜப்பான் 700 சதவீத வரியும், அமெரிக்க விவசாய பொருட்களுக்கு மீது இந்தியா 100 சதவீத வரியும், அமெரிக்க வெண்ணெய் மற்றும் சீஸ் மீது கனடா 300 சதவீத வரியும் விதிப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்து பேசிய அவர், துரதிர்ஷ்டவசமாக, நீண்ட காலமாக இந்த நாடுகள் அமெரிக்காவிற்கு அதிக வரி விதித்து, அமெரிக்க தொழிலாளர்களை ஏளனம் செய்கிறது.

இதனால், அமெரிக்க பொருட்களை அந்தச் சந்தைகளில் இறக்குமதி செய்வது சாத்தியமற்ற ஒன்று.

இதனால், ஏராளமான அமெரிக்கர்கள் தங்கள் வர்த்தகத்தை இழந்துள்ளனர் என தெரிவித்துள்ளார். இதனால், வியட்நாம், ஐரோப்பிய ஒன்றியம், மெக்சிகோ, அயர்லாந்து, ஜெர்மனி, தைவான், ஜப்பான், தென் கொரியா, கனடா, இந்தியா, தாய்லாந்து, இத்தாலி, சுவிட்சர்லாந்து மற்றும் மலேசியா ஆகிய நாடுகள் பாதிக்கப்படும் என சொல்லப்படுகிறது. மேலும், இந்தியாவின் விவசாய பொருட்கள் மீது 100% வரை வரிகளை விதிக்க அமெரிக்கா திட்டமிட்டுள்ளதாகவும் தெரிகிறது.

# பிரதமர் மோடி, சிலி ஜனாதிபதி சந்திப்பு



**சிலி, ஏப்.2:**

5 நாட்கள் அரசு முறை பயணமாக சிலி நாட்டு ஜனாதிபதி கேப்ரியல் போரிக் பிரண்ட் இந்தியா வந்துள்ளார்.

அவர் இன்று ஜனாதிபதி மாளிகையில் பிரதமர் மோடியை சந்தித்தார்.

பிரதமர் மோடி, கேப்ரியல் போரிக் பிரண்ட் இடையேயான இந்த சந்திப்பின்போது இருநாட்டு உறவு, வர்த்தகம், பொருளாதாரம் உள்பட பல்வேறு விவகாரங்கள் குறித்து இருநாட்டு தலைவர்களும் ஆலோசனை நடத்தினர்.

இந்த சந்திப்பு தொடர்பாக பிரதமர் மோடி வெளியிட்டுள்ள அறிக்கையில், இரு தரப்பு பலன்பெறும் வகையில் பொருளாதார கூட்டமைப்பு ஒப்பந்தம் குறித்து பேச்சுவார்த்தை தொடங்கி உள்ளது. லத்தீன் அமெரிக்காவில் இந்தியாவின் முக்கிய கூட்டாளியாக சிலி விளங்குகிறது. டிஜிட்டல் பொது உள்கட்டமைப்பு, புதுப்பிக்கப்பட்ட ஆற்றல், ரெயில்வே, விண்வெளி மற்ற துறைகளில் சிலியுடன் இணைந்து செயல்பட இந்தியா தயாராக உள்ளது’ என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# திருச்சியில் கட்டப்பட்டு வரும் நூலகத்துக்கு ‘காமராஜர்’ பெயர்

## பேரவையில் முதல்வர் ஸ்டாலின் அறிவிப்பு

**சென்னை, ஏப்.2:**

திருச்சியில் கட்டப்பட்டு வரும் நூலகத்துக்கு காமராஜரின் பெயர் சூட்டுவதற்கான அரசாணையை பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் வெளியிட வேண்டுமென்று சட்டப்பேரவையில் முதல்வர் ஸ்டாலின் கூறியுள்ளார்.

சட்டப்பேரவையில், இன்று (ஏப்.1) கும்பகோணம் சட்டமன்ற உறுப்பினர் க.அன்பழகன் நூலகங்கள் பற்றிப் பேசும்போது, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அளித்த பதில்: “திராவிட மாடல் ஆட்சியில் உருவாக்கப்பட்டிருக்கிற நூலகங்களுக்கு மாபெரும் தலைவர்களின் பெயர்கள் சூட்டப்பட்டிருக்கிறது என்ற கருத்தினை வெளிப்படுத்திக் காட்டியிருக்கிறார்.

அதிலே குறிப்பாக, பொதுப் பணித் துறை சார்ந்த நான்கு ஆண்டு சாதனைகள் தொடர்பான புத்தகத்தில், ஏற்கெனவே இந்த அவையில் அறிவிக்கப்பட்டவாறு, திருச்சியில் 290 கோடி ரூபாய் செலவில் என்னால் அடிக்கல் நாட்டப்பட்ட மாபெரும் நூலகத்துக்கு மறைந்த முதல்வர் கருணாநிதி பெயர் சூட்டப்பட்டிருப்பதாக நான் பார்த்தேன்.

திராவிட மாடல் அரசைப் பொறுத்தவரையில், கருணாநிதியின் கரங்களால் கோட்டூர்புரத்தில் திறந்து வைக்கப்பட்ட நூலகத்துக்கு அண்ணா நூற்றாண்டு நூலகம் என்று பெயர் சூட்டப்பட்டது. மதுரையில் கலைஞர் நூற்றாண்டு நூலகம் கட்டப்படும் என அறிவிக்கப்பட்டு, ஒரே ஆண்டில் அதன் கட்டுமானப் பணிகள் முடிவுற்று, மாபெரும் சாதனை செய்யப்பட்டு, மக்களின் பயன்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டது.



இதுவரை சுமார் 16 லட்சம் பொது மக்களும், மாணவர்களும் இந்த நூலகத்தால் பயனடைந்திருக்கிறார்கள். அதனைத் தொடர்ந்து, அண்மையில் கோவையில் நடைபெற்ற அரசு நிகழ்ச்சியில் நான் கலந்துகொண்ட போது, கோவையில் ஒரு மாபெரும் நூலகம் அமைக்கப்படும் என்று என்னால் அறிவிக்கப்பட்டு, கடந்த நவம்பர் மாதம் அதற்கு அடிக்கல் நாட்டப்பட்டு, அதற்கான பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன.

அதேபோன்று, திருச்சியில் அறிவிக்கப்பட்டிருக்கிற நூலகத்துக்கு கடந்த மாதத்தில் நான் அடிக்கல் நாட்டியிருக்கிறேன். இந்தப் பணிகளும் முடுக்கிவிடப்பட்டுள்ளன. கோவையில் பெரியார், சென்னையில் அண்ணா, மதுரையில் கலைஞர் ஆகியோர்களின் பெயர்களைத் தாங்கி நூலகங்கள் நிறுவப்பட்டுள்ளதோ, அதனைத் தொடர்ந்து, திருச்சியில் அமையவிருக்கும் நூலகத்துக்கு காமராஜரின் பெயரைச் சூட்டுவது பொருத்தமாக இருக்கும் என நான் கருதுகிறேன்.எனவே, தமிழகத்தில் கிராமங்கள்தோறும் பள்ளிகளைத் தொடங்கி, மதிய உணவு அளித்து, லட்சக்கணக்கான குடும்பங்களின் கல்விக் கண்களைத் திறந்து, தமிழகதின் கல்விப் புரட்சிக்கும், எதிர்கால வளர்ச்சிக்கும் வித்திட்ட பெருந்தலைவர் காமராஜரின் பெயரைச் சூட்டுவது பொருத்தமாக இருக்கும் என்று கருதி, திருச்சியில் கட்டப்பட்டு வரும் நூலகத்துக்கு காமராஜரின் பெயர் சூட்டுவதற்கான அரசாணையை பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் வெளியிட வேண்டுமென்று முதல்வர் என்ற முறையில் கேட்டுக் கொள்கிறேன்.” என்று பேசினார்.

## இன்றைய பஞ்சாங்கம்

02.04.2025 (பங்குனி 19)
புதன்கிழமை

திதி:
இன்று காலை 7.45 வரை சதுர்த்தி பின்பு பஞ்சமி.

நட்சத்திரம்:
இன்று பிற்பகல் 01.51 வரை கார்த்திகை பின்பு ரோகிணி.

யோகம்:
இன்று காலை 10.36 வரை ப்ரீதி பின்பு ஆயுஷ்மான்.

கரணம்:
இன்று காலை 7.45 வரை பத்திரை பின்பு மாலை 5.53 வரை பவம் பின்பு பாலவம்.

அமிர்தாதி யோகம்:
இன்று காலை 6.10 வரை சித்த யோகம் பின்பு பிற்பகல் 1.51 வரை அமிர்த யோகம் பின்பு சித்த யோகம்.

சூரிய உதயம் : 6.11

சந்திராஷ்டமம் :
இன்று பிற்பகல் 1.51 வரை சித்திரை பின்பு சுவாதி

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

# கும்பகோணம் வெற்றிலை, தோவாளை மாணிக்க மாலைக்கு மத்திய அரசு புவிசார் குறியீடு

**கன்னியாகுமரி, ஏப்.2:**

ஒரு குறிப்பிட்ட இடத்தை சேர்ந்த தனித்தன்மை வாய்ந்த பொருட்களுக்கு மத்திய அரசால் புவிசார் குறியீடு வழங்கப்படுகிறது. புவிசார் பெற்ற பொருட்களை வியாபார நோக்கத்தோடும், போலியாக வேறு பெயர்களில் பயன்படுத்துவதையும் தடுக்க முடியும்.

அந்த வகையில் தமிழகத்தில் திண்டுக்கல் பூட்டு, ஸ்ரீவில்லிபுத்தூர் பால்கோவா, சேலம் சுங்குடி சேலை, காஞ்சி பட்டு, கொடைக்கானல் மலைப்பூண்டு, மதுரை மல்லிகை, தஞ்சாவூர் கலைத்தட்டு, கோவில்பட்டி கடலை மிட்டாய், பழனி பஞ்சாமிர்தம் உட்பட பல்வேறு உணவு, வேளாண் மற்றும் பாரம்பரிய உற்பத்தி பொருட்கள் புவிசார் குறியீடு பெற்றுள்ளன.

சமீபத்தில், மதுரை மரிக்கொழுந்து மற்றும் விளாச்சேரி களிமண் பொம்மைகளுக்கு புவிசார் குறியீடு அறிவிக்கப்பட்டு இருந்தது. இந்நிலையில், இன்று கும்பகோணம் வெற்றிலை, தோவாளை மாணிக்க மாலைக்கு புவிசார் குறியீடு அறிவிக்கப்பட்டுள்ளது.





### கும்பகோணம் வெற்றிலை

காவிரி டெல்டா மாவட்டங்களின் பெருமை மிக்க அடையாளங்களில் ஒன்றாகத் திகழ்ந்து வருகிறது கும்பகோணம் வெற்றிலை. கும்பகோணம் வெற்றிலை என அழைக்கப்பட்டாலும் கூட, திருவையாறு, திருப்பந்துருத்தி, கண்டியூர், நடுக்கடை, பாபநாசம் மற்றும் இதன் சுற்றுவட்டார கிராமங்களில்தான் கும்பகோணம் வெற்றிலை அதிகளவில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

தொடர்ந்து வெத்தலை போடும் பழக்கம் உடையவர்கள் கும்பகோணம் வெத்தலையைதான் விரும்புவார்கள். இதற்கு காரணம் இதோட சுவைதான். பார்க்குறதுக்கு சின்னதா இருந்தாலும், நல்ல மென்மையாவும், கூடுதல் சுவையோடும் இருக்கும். காரத்தன்மை, அதிகமாகவும் இல்லாம, குறைவாகவும் இல்லாம நடுத்தரமாக இருக்கும்.

### மாணிக்க மாலை

தோவாளையில் தயாரிக்கப்படும் "மாணிக்க மாலை’ உலகில் வேறு எங்கும் கிடைக்காத ஒன்றாகும். இந்த மாலை வெள்ளை, சிவப்பு வண்ண அரளிப் பூக்கள், நொச்சி இலைகளைக் கொண்டு தயாரிக்கப்படுகிறது.

மற்ற மாலைகள் போல் அல்லாமல் சம்பா வாழை நாரைக் கொண்டு இதை கட்டுகின்றனர். இந்த மாலை கேரளத்தை ஆண்ட திருவிதாங்கூர் மன்னர்கள் காலத்திலிருந்தே கட்டப்பட்டு வருகிறது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள தோவாளை பூச்சந்தை தமிழகத்தில் உள்ள பூச்சந்தைகளில் மிகவும் பிரபலமான சந்தையாகும். தமிழகம் மட்டுமல்லாது, கேரள மாநிலத்துக்கும் தோவாளை பூச்சந்தையில் இருந்து பூக்கள் கொண்டு செல்லப்படுகின்றன.

மாணிக்க மாலையில் 1 வரிசை என்பதை 1 பகளம் என்று கூறுவார்கள். அவ்வாறு 3, 5, 7 பகளம் கொண்ட மாணிக்கமாலைகள் தயாரிக்கப்படும்.தோவாளை பகுதியில் கிடைக்கும் அரளிப்பூக்கள் நன்கு வளையும் தன்மை கொண்டது. இதனால் மாணிக்கமாலைக்கு அரளிப்பூக்கள் பயன்படுத்தப்படுகின்றன.ஒரு மாணிக்கமாலை தயாரிக்க, சுமார் 4 மணி நேரமாகும். சுமார் 160 குடும்பங்கள் மட்டுமே இந்த மாலை தயாரிக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றன.

சுசீந்திரம் தாணுமாலயசுவாமி கோயில், நாகர்கோவிலில் உள்ள கிருஷ்ணசாமி கோயில், திருநெல்வேலி நம்பிகோயில் உள்ளிட்ட கோயில்களில் திருவிழாக்களின் போது இந்த மாணிக்கமாலை அணிவிக்கப்படுகிறது.

மாணிக்க மாலையின் வடிவம், நுட்பமான வேலைப்பாடின் அடிப்படையில் விலையும் இருக்கும். சிவன் கோயிலுக்கு, சிவலிங்கம், நந்தி திருமேனிகளை மாலையில் சேர்க்கப்படும். பெருமாள் கோயிலுக்கு சங்கு, சக்கரம் கொண்டு தயாரிக்கப்படும்.

## கேள்வியை நாங்கள் கேட்கிறோம் பதிலை நீங்கள் சொல்லுங்கள்

தமிழ்நாடு இ பேப்பர்.காம் வழங்கும் சூப்பரான பரிசை வெல்லுங்கள்...!

**இன்றைய கேள்வி**

ஏப்ரல் 7-ம் தேதி திருவாரூர் ஆழித் தேரோட்டம்

இந்த செய்தி எந்த பக்கத்தில் இடம்பெற்றுள்ளது என கண்டுபிடிப்பவர்களுக்கு குலுக்கல் முறையில் தேர்ந்தெடுத்து தக்க சன்மானம் வழங்கப்படும்.
நீங்கள் பதில் அனுப்ப வேண்டிய WhatsApp no.8122664699



நேற்றைய இதழில் கேட்கப்பட்ட கேள்விக்கு சரியான விடை அளித்த வாசகர்
C Visalakshi
Chennai

# திருக்குறள் குறள்-216

பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயனுடை யான்கண் படின்



ஒப்புரவாகிய நற்பண்பு உடையவனிடம் செல்வம் சேர்ந்தால் அஃது ஊரின் நடுவே உள்ள பயன் மிகுந்த மரம் பழங்கள் பழுத்தாற் போன்றது.

## சிந்திக்க ஒரு நொடி



தூக்கம்
விசித்திரமானது.
அது வரும்போது
எல்லாவற்றையும்
மறக்க செய்கிறது.
வராதபோது
எல்லாவற்றையும்
நினைவு படுத்துகிறது.

**ராஜகோபாலன்.J**
சென்னை 18

## மகாமாரியம்மன் ஆலயத்தில் புஷ்பப் பல்லக்கு விழா கோலாகலம்





வலங்கைமான் வரதராஜன் பேட்டை தெரு மகாமாரியம்மன் ஆலயத்தில் புஷ்பப் பல்லக்கு விழா கோலாகலம், ஏராளமானோர் நேர்த்திக்கடன் செலுத்தினர்.

## பச்சையப்பன் கல்லூரி நிறுவனர் கல்வி வள்ளல் பச்சையப்பர் 231ஆம் ஆண்டு நினைவு நாள்



பச்சையப்பன் கல்லூரி நிறுவனர் கல்வி வள்ளல் பச்சையப்பர் அவர்களின் 231ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு பச்சையப்பன் கல்லூரி மாணவர் திமுக முன்னாள் செயலாளர் மு.ப. சரவணன் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்வில் வள்ளல் பச்சையப்பர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினேன். இதில் பல்வேறு துறைகளில் பணியாற்றும் பணியாற்றிய கல்லூரி முன்னாள் மாணவர்கள் பெருமளவில் திரண்டு வள்ளல் பச்சையப்பர் அவர்களுக்கு மலர் தூவி புகழ் வணக்கம் செலுத்தினர்.RGIRIRAJANMP

# தோவாளை மாணிக்க மாலை, கும்பகோணம் வெற்றிலைக்கு புவிசார் குறியீடு

**தஞ்சாவூர், ஏப். 2:**
கும்பகோணம் வெற்றிலை, குமரி தோவாளை மாணிக்க மாலைக்கு புவிசார் குறியீடு கிடைக்க பெற்றுள்ளதாக, அறிவு சார் சொத்துரிமை சிறப்பு வழக்கறிஞர் சஞ்சய் காந்தி தெரிவித்தார்.

தமிழகத்தில், 62 பொருட்களுக்கு புவிசார் குறியீடு பெறப்பட்டு, நாட்டில் இரண்டாவது இடத்தில் உள்ளது. தற்போது, தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வெற்றிலை, குமரி மாவட்டம், தோவாளை மாணிக்க மாலைக்கு புவிசார் குறியீடு கிடைக்க பெற்றுள்ளது. இது குறித்து, தஞ்சாவூரில் நேற்று அறிவு சார் சொத்துரிமை சிறப்பு வழக்கறிஞர் சஞ்சய் காந்தி கூறியதாவது: கடந்த 2022 ஜன., 13ம் தேதி, தமிழ்நாடு வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தின் வாயிலாக, கும்பகோணம் வெற்றிலை



உற்பத்தியாளர்கள் நலச்சங்கம் சார்பில், கும்பகோணம் வெற்றிலைக்கும், தமிழ்நாடு கைவினைப்பொருட்கள் மேம்பாட்டு கழகம் மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் அமைச்சகத்தின் மூலம், தோவாளை மாணிக்க மாலை கைவினை கலைஞர்கள் நலசங்கம் சார்பில் தோவாளை மாணிக்க மாலைக்கும் புவிசார் குறியீடு கேட்டு



விண்ணப்பிக்கப்பட்டது.

நவம்பரில் மத்திய அரசு அரசிதழில் வெளியிட்டு, சட்ட விதிப்படி நான்கு மாதங்கள் முடிவடைந்த நிலையில், புவிசார் குறியீடு கிடைக்க பெற்றுள்ளது. தமிழகத்தில் இதுவரை 62 பொருட்களுக்கும், தஞ்சாவூர் மாவட்டத்தில் 11 பொருட்களுக்கும் புவிசார் குறியீடு கிடைத்துள்ளது. இவ்வாறு அவர் கூறினார். தோவாளை மாணிக்க மாலைக்கு புவிசார் குறியீடு கிடைத்துள்ள நிலையில், இந்தியாவில் பூ மாலைக்கு புவிசார் குறியீடு இதுதான் முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது.

## மணக்குள விநாயகர் தொழில்நுட்ப கல்லூரியில் மகளிர்தின விழா



புதுவை மணக்குள விநாயகர் தொழில்நுட்ப கல்லூரியில் முதல்வர் மலர்க்கண் தலைமையில் மகளிர்தின விழா நடந்தது.

## 1000 ஹெக்டருக்கு விவசாயிகள் மஞ்சள் சாகுபடி



தருமபுரி மாவட்டம் முழுவதும் 1000 ஹெக்டருக்கு மேல் விவசாயிகள் மஞ்சள் சாகுபடி செய்துள்ளனர். தற்போது அரூர், பொம்மிடி உள்பட பல இடங்களில் மஞ்சள் அறுவடை நடக்கிறது.

## யுகேஜி குழந்தைகளுக்கு பட்டமளிப்பு விழா



ஈரோடு மாவட்டம் பெருந்துறை சாகர் சர்வதேச பள்ளியில் யுகேஜி குழந்தைகளுக்கு பட்டமளிப்பு விழா நடந்தது. பள்ளிதாளாளர் சவுந்திரராஜன் பட்டங்களை வழங்கினார்.

## ஆழித்தேர் கட்டுமானப் பணிகளை எம்.எல்.ஏ.ஆய்வு



திருவாரூர் தியாகராஜர் கோவில் ஆழித்தேரோட்டம் வருகிற 7ம் தேதி நடக்கிறது. ஆழித்தேர் கட்டுமானப் பணிகளை 36 அடி உயரத் தேரில் ஏறி கலெக்டர் மோகனசந்திரன், பூண்டிகலைவாணன் எம்.எல்.ஏ.ஆய்வு செய்தனர்.

## பங்குனி திருவிழா கொடியேற்றத்துடன் தொடங்கியது



நாகர்கோவில் அருகே உள்ள பறக்கை மதுசூதன பெருமாள் கோவில் பங்குனி திருவிழா நேற்று கொடியேற்றத்துடன் தொடங்கியது. மாநகராட்சி மேயர் மகேஷ், குமரி மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் பிரபா ராமகிருஷ்ணன் உள்பட பக்தர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

## ஸ்ரீவாசவி அம்மன் ஆலயத்தில் 41வதுநாள் மண்டல பூஜை



சேத்தியாத்தோப்பு ஸ்ரீவாசவி அம்மன் ஆலயத்தில் 41வதுநாள் மண்டல பூஜையில் பொங்கல்வைத்து, 102 கோத்திர ரிஷிகள்பூஜை, குத்துவிளக்கு பூஜை,லலிதாதேவி பூஜை, கன்னி பூஜை, பஞ்சாங்கம் வாசித்தல் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. அனைவரும் வாசவி அம்மனை தரிசனம் செய்தனர்.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர்
திருவண்ணாமலை**

# ஆபரண தங்கம் விலை சவரன் ரூ.68 ஆயிரத்தை தாண்டியது

**சென்னை, ஏப். 2 :**
சர்வதேச நிலவரங்களால் பாதுகாப்பு கருதி, பெரிய முதலீட்டாளர்கள் தங்கத்தில் அதிகளவில் முதலீடு செய்து வருகின்றனர். இதனால், சர்வதேச சந்தையில் தங்கம் விலை அதிகரித்துள்ளதால், நம் நாட்டிலும் அதன் விலை எப்போதும் இல்லாத வகையில் தொடர்ந்து உயர்ந்து வருகிறது.

தமிழகத்தில் நேற்று முன்தினம் காலை, 22 காரட் ஆபரண தங்கம் கிராம், 8,425 ரூபாய்க்கும், சவரன், 67,400 ரூபாய்க்கும் விற்பனையானது. மாலையில் கிராம், 8,450 ரூபாய்க்கும், சவரன், 67,600 ரூபாய்க்கும் விற்கப்பட்டது. வெள்ளி கிராம்,



113 ரூபாய்க்கு விற்பனையானது. நேற்று தங்கம் விலை கிராமுக்கு, 60 ரூபாய் உயர்ந்து, 8,510 ரூபாய்க்கு விற்கப்பட்டது.

சவரனுக்கு, 480 ரூபாய் அதிகரித்து, எப்போதும் இல்லாத வகையில், 68,080 ரூபாய்க்கு விற்பனையானது. வெள்ளி கிராமுக்கு, ஒரு ரூபாய் உயர்ந்து, 114 ரூபாய்க்கு விற்கப்பட்டது. கடந்த இரு தினங்களில் மட்டும் தங்கம் விலை சவரனுக்கு, 1,200 ரூபாய் அதிகரித்துள்ளது.

# கோவில்பட்டி கோட்டத்தில் அஞ்சலகங்களில் ஆதார் சேவைகள்

**கோட்ட கண்காணிப்பாளர் தகவல்**

**தென்காசி, ஏப்.2:**
கோவில்பட்டி கோட்டத்தில் அஞ்சலகங்களில் ஆதார் சேவை மையம் செயல்பட்டு வருவதாக கோட்ட கண்காணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து இது பற்றி கோவில்பட்டி கோட்ட அஞ்சல் கண்காணிப்பாளர் சுரேஷ் குமார் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது:-

பொதுமக்களின் அடிப் படைத் தேவைகளில் ஒன்றான ஆதார் சேவைகளை பெற பொதுமக்கள் அஞ்சலகங்களை அணுகலாம். மத்திய மற்றும்





மாநில அரசின் பல்வேறு சேவைகளை பெற ஆதார் எண் கட்டாயமாக்கப் பட்டுள்ளது.

பொதுமக்கள் பலர் ஆதார் சேர்க்கை மற்றும் ஆதாரில் முகவரி மாற்றம், பெயர் மாற்றம், திருத்தம் போன்ற சேவைகளை சிரமமின்றி பெறும் வகையில் கோவில்பட்டி அஞ்சல் கோட்டத்திற்குட்பட்ட, கோவில்பட்டி, சங்கரன்கோவில் மற்றும் தென்காசி தலைமை அஞ்சலகங்கள் மற்றும் 29 அடையாளபடுத்தப்பட்ட துணை அஞ்சலகங்களில் ஆதார் சேவை மையங்கள் செயல்பட்டு வருகின்றன. பொதுமக்கள், தங்கள் ஆதார் விவரங்களை (பயோ மெட்ரிக் ஃ டெமோகிராபிக்) 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை புதுப்பிக்க பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

ஆதார் சேவையை பொதுமக்கள் பெறுவதிலுள்ள சிரமங்களை தவிர்க்கும் விதமாக அனைத்து அடையாளபடுத்தப்பட்ட அஞ்சலகங்களிலும் ஆதார் சேவை வழங்கப்பட்டு வருகிறது. அஞ்சல் துறையின் இந்த சேவையை பொதுமக்கள் பயன்படுத்தி கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

## பெண்கள் உள் நோயாளிகள் வார்டு திறப்பு



குன்னூர் லாலி அரசு மருத்துவமனையில் ரூபாய் 70 லட்ச ரூபாய் செலவில் பெண்கள் உள் நோயாளிகள் வார்டை நீலகிரி மாவட்ட ஆட்சியர் திறந்து வைத்தார்.

## பத்திர காளியம்மன் கோவிலில் தூக்கத் திருவிழா



குமரி மாவட்டத்தில் பிரசித்தி பெற்ற கொல்லங்கோடு பத்திர காளியம்மன் கோவிலில் தூக்கத் திருவிழா கடந்த மாதம் 23ம் தேதி துவங்கியது. பத்தாம்நாளான நேற்று பங்குனி பரணி நட்சத்திரத்தில் நடந்த தூக்கநேர்ச்சை திருவிழாவில், பச்சிளம் குழந்தைகளுக்காகான தூக்கநேர்ச்சை அதிகாலை துவங்கி நள்ளிரவு வரை நடந்தது.

# அதிமுக நடத்திய மகளிர் தின விழா



சென்னை அயப்பாக்கத்தில் அதிமுக நடத்திய மகளிர் தின விழாவில் கலை நிகழ்ச்சிகளில் வென்ற ஐந்து பெண்களுக்கு தலா ஒரு கிராம் தங்க நாணயத்தை முன்னாள் அமைச்சர் பெஞ்சமின் வழங்கினார்.

# ‘நடந்தாய் வாழி காவிரி’ திட்டத்துக்கான நிதியைப் பெற நடவடிக்கை - அமைச்சர் துரைமுருகன்



**சென்னை, ஏப்.2:**

“காவிரி மற்றும் அதன் துணை ஆறுகளை சுத்தப்படுத்தும் ‘நடந்தாய் வாழி காவிரி’ திட்டத்துக்கான நிதியைப் பெறுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது என்றும், விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது”, என்று தமிழக நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் கூறியுள்ளார்.

பேரவையில் இன்று (ஏப்.1) கேள்வி நேரத்தின்போது,திருச்செங்கோடு உறுப்பினர் ஈஸ்வரன், “கழிவு நீரால் மாசுபட்டுள்ள காவிரி மற்றும் அதன் துணை ஆறுகளை சுத்தப்படுத்துவதற்காக, சில ஆண்டுகளுக்கு முன்பு ‘நடந்தாய் வாழி காவிரி திட்டம்’ தீட்டப்பட்டது. மத்திய,மாநில அரசுகளின் பங்களிப்புடன் தீட்டப்பட்ட இந்த திட்டத்தில்,மாநில அரசின் நிலை என்ன?” என்று கேள்வி எழுப்பினார்.

அதற்கு நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் பதிலளித்து பேசுகையில், ‘நடந்தாய் வாழி காவிரி திட்டம்’ காவிரி மற்றும் அதன் ஐந்து கிளை ஆறுகளான, திருமணிமுத்தாறு, தரபங்கா, அமராவதி, பவானி மற்றும் நொய்யல் மாசுபடுவதில் இருந்து பாதுகாத்தல்,புத்துயிர் பெறச் செய்தல், நீர் ஆதாரங்களை மேம்படுத்துதல், ஆகியவையே இந்த திட்டத்தின் நோக்கம்.

இந்த திட்டத்தினை இரண்டு கட்டங்களாக, கட்டம் ஒன்று காவிரி ஆறு மேட்டூரில் இருந்து திருச்சி வரையிலும், மற்றும் அதன் ஐந்து கிளை ஆறுகள். இரண்டாவது கட்டம் திருச்சியில் இருந்து கடல் முகத்துவாரம் வரை எனவும் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டது.

கட்டம் ஒன்று மொத்த திட்ட மதிப்பீடு ரூ.934.30 கோடி. இதில் மத்திய அரசின் பங்கு 60 சதவீதம். அதாவது ரூ.560.58 கோடி. மாநில அரசின் பங்கு 40 சதவீதம். அதாவது ரூ.321.72 கோடி. இதற்கான நிதியினைப் பெறுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன, என்று கூறினார்.

## விதிமீறி கனிம வளம் கடத்திய 81 வாகனங்கள் பறிமுதல்: கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் தகவல்

**கிருஷ்ணகிரி, ஏப்.2:**

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கடந்த பிப்.7 முதல் மார்ச் 27 வரை கனிம வளம் கடத்தல் தொடர்பாக நடந்த ஆய்வில், விதிமீறி கனிம வளம் கடத்திய 81 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது என ஆட்சியர் தெரிவித்தார்.


கிருஷ்ணகிரி ஆட்சியர் அலுவலகத்தில் சாலை பாதுகாப்பு, சட்டம்-ஒழுங்கு மற்றும் கனிம வளம் மற்றும் மணல் கடத்தல் தடுப்பு தொடர்பான மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடந்தது. கூட்டத்தில், காவல் கண்காணிப்பாளர் தங்கதுரை முன்னிலை வகித்தார். கூட்டத்துக்கு, ஆட்சியர் ச.தினேஷ் குமார் தலைமை வகித்துப் பேசியதாவது: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உரிய நடைச்சீட்டு மற்றும் 50 சதவீத பசுமை வரி செலுத்தாமல் கர்நாடகாவுக்குக் கனிமங்கள் எடுத்து செல்லும் வாகனங்கள் மீது நடவடிக்கை எடுக்க உத்தரவிடப்பட்டது. மேலும், திடீர் ஆய்வு செய்து விதிமீறும் வாகனங்களைப் பறிமுதல் செய்யவும், அனுமதியின்றி இயங்கும் குவாரிகள் மீது குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ளவும், அபராதம் விதிக்கவும் உத்தரவிடப்பட்டது.

இதுதொடர்பாக ஆய்வு செய்ய வருவாய், காவல், கனிம வளத் துறை அலுவலர்கள் அடங்கிய 8 குழுக்கள் அமைக்கப்பட்டன. மேலும், ஓசூர் துணை ஆட்சியர், வருவாய் ஆய்வாளர் ஆகியோர் தலைமையில் 11 குழுக்கள் அமைக்கப்பட்டன. இக்குழுவினர் கடந்த பிப்.4-ம் தேதி முதல் மார்ச் 27-ம் தேதி வரை திடீர் தணிக்கை மேற்கொண்டனர். இதில் விதிமீறிய 81 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. மேலும், 7 இடங்களில் உரிய அனுமதியின்றி கருப்பு கிரானைட் வெட்டி எடுப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இதுதொடர்பாக அபராதம் மற்றும் குற்றவியல் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இவை தவிர, மாசுக் கட்டுப்பாட்டு வாரிய அனுமதி பெறாமல், சேமிப்பு கிடங்கு அனுமதி பெறாமல் இயங்கிய 2 கிரஷர்களுக்கு, ‘சீல்’ வைக்கப்பட்டன. அரசு அனுமதி பெறாமல் இயங்கும் குவாரிகள், குத்தகை காலம் முடிந்த பின்னர் இயங்கும் குவாரிகள், சுற்றுச்சூழல் அனுமதி பெறாமல் இயங்கும் குவாரிகள், சேமிப்புக் கிடங்கு, மாசுக் கட்டுப்பாட்டு வாரிய அனுமதி பெறாத கிரஷர்கள் கண்டுபிடிக்கப்பட்டு உரிய அபராதம் மற்றும் குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு அவர் பேசினார்.

## ஏப்ரல் 7-ம் தேதி திருவாரூர் ஆழித் தேரோட்டம்: ஏற்பாடுகள் குறித்து ஆட்சியர் ஆய்வு



**திருவாரூர், ஏப்.2:**

திருவாரூரில் ஏப்.7-ம் தேதி நடைபெற உள்ள ஆழித் தேரோட் டத்துக்கு ஏற்பாடுகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன.


சைவ சமயத்தின் தலைமை பீடமாக விளங்கும், திருவாரூர் தியாகராஜர் கோயில் பங்குனி உத்திரப் பெருவிழா, கடந்த மார்ச் 15-ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கி டங்கி நடைபெற்று வருகிறது. முக்கிய நிகழ்வான பிரசித்திபெற்ற ஆழித்தேரோட்டம் வரும் ஏப்ரல் 7-ம் தேதி பங்குனி ஆயில்ய நட்சத்திரத்தில் நடைபெறவுள்ளது.

ஆசியாவிலேயே பெரிய தேர்: அலங்கரிக்கப்பட்ட நிலையில் 350 டன் எடை கொண்டதாகவும், 96 அடி உயரம் கொண்டதாகவும் உள்ள இந்த ஆழித்தேர் ஆசியாவிலேயே மிகப்பெரிய தேராக விளங்குகிறது. இந்த தேரோட்டத்துக்காக தேர் கட்டுமான பணிகள் தற்போது மும்முரமாக நடைபெற்று வருகின்றன. மேலும், தேரில் பொருத்தப்பட உள்ள பொம்மைகள், போர்த்தப் படவுள்ள திரைச்சீலைகள் ஆகியவற்றை சீரமைக்கும் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

ஆழித் தேரோட்டத்தை யொட்டி, ஏப்.6-ம் தேதி இரவு 8 மணிக்கு மேல் தியாகராஜ சுவாமி. அஜபா நடனத்துடன் ஆழித் தேரில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள் பாலிக்க உள்ளார். தொடர்ந்து 7-ம் தேதி அதிகாலை 5.30 மணி அளவில் விநாயகர், சுப்பிரமணியர் தேர் வடம் பிடிக்கும் நிகழ்வு நடைபெறும். அதைத்தொடர்ந்து, காலை 9 மணி அளவில் ஆழித்தேர் வடம் பிடிக்கும் நிகழ்ச்சி நடைபெறும். இந்த தேரோட்ட நிகழ்வில் லட்சக்கணக்கான பக்தர்கள் கலந்து கொள்வார்கள் என்பதால், மாவட்ட நிர்வாகம் மற்றும் காவல் துறை சார்பில் விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

உள்ளூர் விடுமுறை: இந்நிலையில், மாவட்ட ஆட்சியர் மோகன சந்திரன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கருண் கரட் ஆகியோர் ஆழித் தேரோட்டம் நடைபெறும் நான்கு வீதிகளையும், ஆழித்தேர் கட்டுமான பணிகளையும் நேற்று பார்வையிட்டு ஆலோசனைகள் வழங்கினர். தேரோட்டத்தையொட்டி ஏப்.7-ம் தேதி திருவாரூர் மாவட்டத்துக்கு உள்ளூர் விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.

# தமிழக - கேரள வனப்பகுதியில் 27 மாதமாக யானைகள் மீது ரயில் மோதி உயிரிழப்பு இல்லை: தெற்கு ரயில்வே தகவல்



**சென்னை, ஏப்.2:**

தமிழக - கேரள வனப்பகுதிகளில் கடந்த 27 மாதங்களாகதண்டவாளத்தை கடக்க முற்படும் யானைகள் மீது ரயில் மோதி எந்த உயிரிழப்பு சம்பவமும் நடைபெறவில்லை என உயர் நீதிமன்றத்தில் தெற்கு ரயில்வே நிர்வாகம் தகவல் தெரிவித்துள்ளது.

தமிழக - கேரள வனப்பகுதிகளில் தண்டவாளங்களை கடக்க முற்படும்போது ரயில் மோதி யானைகள் உயிரிழப்பதைத் தடுக்க உரிய பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கோரி திண்டுக்கல்லைச் சேர்ந்த மனோஜ் இமானுவேல் சென்னைஉயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார். இந்த வழக்கு நீதிபதிகள் என்.சதீஷ்குமார், டி,பரத சக்ரவர்த்தி ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது.

அப்போது தெற்கு ரயில்வே தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் ராம்குமார், “யானைகள் உயிரிழப்பை தடுக்கும் வகையில் சென்னை உயர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவின் அடிப்படையில் தமிழக மற்றும் கேரள வனத்துறையுடன் இணைந்து தெற்கு ரயில்வே நிர்வாகம் கோவை, பாலக்காடு ஒட்டிய வனப்பகுதிகளில் ஆய்வு மேற்கொண்டு யானைகள் ரயில் தண்டவாளங்களை கடக்கும் 11 இடங்களை அடையாளம் கண்டுள்ளது.

இதில் 9 இடங்களில் சுரங்க வழித்தடங்கள் அமைக்கப்பட்டு தண்டவாளங்களுக்கு அடியில் யானைகள் கடந்து செல்லும் வகையில் வழி அமைக்கப்பட்டுள்ளது. 2 இடங்களில் சுரங்கப்பாதைகள் அமைக்கப்பட்டு வருகிறது. இதேபோல போத்தனூர் - மதுக்கரை பகுதிகளில் தண்டவாளத்தை ஒட்டிய பகுதிகளில் யானை நடமாட்டத்தைக் கண்டறியும் வகையில் சென்சார் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளது.

அப்பகுதிகளில் 12 உயர் கோபுரங்கள் அமைக்கப்பட்டு ஒவ்வொன்றிலும் 2 அதிநவீன கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளது. இந்த நவீனகேமராக்கள்யானைகள் ரயில் தண்டவாளங்களுக்கு அருகில் உள்ள 150 மீட்டர் தூர சுற்றளவுக்குள் வந்தால் உடனடியாக அருகில் உள்ள ரயில் நிலைய மேலாளர் மற்றும் ரயில் ஓட்டுநர்களுக்கு தகவல்களை அனுப்பும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

தெற்கு ரயில்வே நிர்வாகத்தின் இதுபோன்ற பாதுகாப்பு நடவடிக்கைகள் காரணமாக பாலக்காடு - போத்தனூர் வழித்தடம் உள்ளிட்ட தமிழக - கேரள வனப்பகுதிகளில் தண்டவாளத்தைக் கடக்க முற்படும்யானைகள்மீதுரயில் மோதி கடந்த 27 மாதங்களாக எந்த உயிரிழப்பு சம்பவமும் நடைபெறவில்லை”, என்றார்.

இதையேற்ற நீதிபதிகள், இது தொடர்பாக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து தெற்கு ரயில்வே நிர்வாகம் அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிட்டு விசாரணையை தள்ளிவைத்துள்ளனர்.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com
இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.
"welcome Tamilnadu” என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்
8122664699



## நலம் தரும் மருத்துவம்

## சாத்துக்குடி பழத்தின் மருத்துவ குணங்கள்!



சாத்துக்குடி எல்லா நாட்களிலும் பழக்கடைகளில் தாராளமாய் கிடைக்கும் ஒரு அற்புதமான பழம்.

**உடலுக்கு புத்துணர்ச்சி அளிக்கும்:** நோயால் பாதிக்கப்பட்டு உடல் இளைத்தவர்கள் சாத்துக்குடியை சாற்றைப் பருகி வந்தால் உடலுக்கு புத்துணர்ச்சி கிடைக்கும். உடல் வலு பெறும். சாத்துக்குடியானது இரத்தத்தில் எளிதில் கலப்பதால் உடல் வெகு விரைவில் தேறும்.

**மலச்சிக்கல் தீரும்:** மலச்சிக்கல்தான் அனைத்து நோய்களுக்கும் மூலகாரணம். மலச்சிக்கல் வராமல் தடுப்பதற்கு பழங்களே சிறந்த மருந்தாகும். மலச்சிக்கல் உள்ளவர்கள் தினமும் ஒரு சாத்துக்குடி பழம் சாப்பிட்டு வந்தால் மலச்சிக்கல் பிரச்சனை நீங்கும்.

**நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும்:** சாத்துக்குடி காய்ச்சல், அம்மை, பேதி, சளி, இருமல் என எல்லா நோய்க்கும் நல்ல பலத்தை கொடுக்கும். சாத்துக்குடியில் வைட்டமின் சி அதிகம் உள்ளதால் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும். எலும்புகளுக்கு பலம் தருவதுடன் இரத்தத்தை உறைய வைக்கும்.

**குழந்தைகளின் வளர்ச்சியை அதிகரிக்கும்:** சிறு குழந்தைகளுக்கு கால்சியம் சத்து அதிகம் தேவை. குழந்தைகளின் வளர்ச்சிக்கு மிகவும் முக்கியமானது கல்சியம் சத்து ஆகும். சாத்துக்குடி பழத்தில் கால்சியம் சத்து அதிகம் இருப்பதால் குழந்தைகளுக்கு சாத்துக்குடியை பழமாகவோ, சாறாகவோ கொடுப்பது மிகவும் நல்லது.

**ஜீரண சக்தியை அதிகரிக்கும்:** சாத்துக்குடி பசியின்மை, வாந்தி, குமட்டலை விரட்டும். ஒரு டம்ளர் நீரில் இஞ்சி துண்டுகளை தட்டி போடவும். அதனுடன் சாத்துக்குடி சாற்றை சேர்த்து கொதிக்க வைக்க வேண்டும். அதன்பின் அதை வடிகட்டி எடுத்து தேன் சேர்த்து குடித்து வர வேண்டும். இது வயிற்று புண்களை அகற்றும். செரிமானத்தை சீராக்கும். பசியை தூண்டி, வாந்தியை தடுக்கும். ருசியின்மையை போக்கும். வயிற்று வலியை குணமாகும்.


**உடலுக்கு பலத்தை கொடுக்கும்:** சாத்துக்குடியில் பொட்டாசியம் சத்து அதிகம் உள்ளதால் சிறுநீரக கோளாறுக்கு மருந்தாகிறது. குறைவான எரிசக்தி கொண்டதால், உடல் எடை கூடுவதை தடுக்கும். உடலுக்கு பலத்தை கொடுக்கும். ஈறுகளில் ஏற்படும் வீக்கம், பற்கள் ஆடுவது, வாய்ப்புண் போன்றவற்றிருக்கு சிறந்த மருந்து சாத்துக்குடியாகும்.

**நினைவாற்றலை அதிகரிக்கும்:**

ஒவ்வொருவருடைய வளர்ச்சிக்கும் அவர்களுடைய நினைவாற்றலே முக்கிய பங்கு வகிக்கிறது. எனவே நினைவாற்றலை அதிகரிக்க சாத்துக்குடி பழம் சாப்பிடுவது நல்லது.

**எலும்புகள் வலுவடையும்:** ஒரு சிலருக்கு இலேசான அடிபட்டாலும் எலும்புகள் உடைந்துவிடும். மேலும் எலும்புகள் வலுவில்லாமல் காணப்படும். இதற்குக் காரணம் கால்சிய சத்து குறைவாக இருப்பதே காரணம் ஆகும். இவர்கள் சாத்துக்குடி அதிகளவு சாப்பிட்டு வந்தால் எலும்புகள் வலுவாகும். சாத்துக்குடி சாறு சாப்பிட்டு வர மூட்டுவாதம், எலும்பு பலவீனம் நீங்கும்.

## தங்கம் விலை ஒரு பவுன் ரூ.68,000-ஐ கடந்தது: புதிய உச்சத்துக்கு காரணம் என்ன?



சென்னை: தங்கம் விலை ஒரு பவுன் ரூ.68 ஆயிரத்தை கடந்து மற்றொரு புதிய உச்சத்தை எட்டியுள்ளது. அதன்படி சென்னையில் (செவ்வாய்க்கிழமை) 22 கேரட் ஆபரணத் தங்கம் கிராமுக்கு ரூ.85 உயர்ந்து ஒரு கிராம் ரூ.8510-க்கும், பவுனுக்கு ரூ.680 உயர்ந்து ஒரு பவுன் ரூ.68,080-க்கும் விற்பனையாகிறது. அதேபோல் வெள்ளி விலை கிராமுக்கு ரூ.1 உயர்ந்து ஒரு கிராம் ரூ.113-க்கு விற்பனையாகிறது.

பவுன் ரூ.80 ஆயிரம் வரை உயரலாம்... - தங்கம் விலை அன்றாடம் பல புதிய உச்சங்களைத் தொட்டு வரும் நிலையில், “நாளை முதல் (ஏப்.2) அமெரிக்க அதிபர் ட்ரம்ப் விதித்த இறக்குமதி வரி அமலுக்கு வருவதால் வர்த்தகப் போர் வலுத்துள்ளது. அதனால் தங்கத்தின் மீது முதலீடு அதிகரித்துள்ளது. இதுவே தங்கம் விலை உயரக் காரணம் என்று சென்னை தங்க நகை மற்றும் வைர வியாபாரிகள் சங்கத்தின் தலைவர் ஜெயந்திலால் சலானி தெரிவித்துள்ளார்.

மேலும், இந்த வர்த்தகப் போரின் காரணமாக சீனா, ரஷ்யா ஆகிய நாடுகளுக்கு ஆதரவாக உள்ள நாடுகள் தங்கள் கையிருப்பில் உள்ள அமெரிக்க டாலர்களை விற்றுவிட்டு, தங்கத்தை வாங்கி குவித்து வருகின்றன. இதனால், சர்வதேச அளவில் தங்கத்தின் தேவை அதிகரித்துள்ளது. அத்துடன் அமெரிக்க டாலரின் மதிப்பும் குறைந்து வருகிறது.

இத்தகைய காரணங்களால் தங்கம் விலை இன்னும் பெரிய உச்சத்தை காணும் சூழல் உள்ளது. பவுன் ரூ.80,000 வரை அதிகரிக்க வாய்ப்புள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

## வணிக பயன்பாட்டுக்கான சமையல் காஸ் சிலிண்டர் விலை குறைந்தது



சென்னை: வணிக பயன்பாட்டுக்கான சமையல் காஸ் சிலிண்டர் விலை ரூ.41 குறைந்து. புதிய விலை இன்று (ஏப்ரல் 1) முதலே அமலுக்கு வந்துள்ளது.

இண்டேன், பாரத், ஹிந்துஸ்தான் பெட்ரோலியம் (ஹெச்பி) போன்ற பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்கள் வீடுகளுக்கு 14.20 கிலோ எடையிலும், வணிக பயன்பாட்டுக்கு 19 கிலோ எடையிலும் சமையல் காஸ் சிலிண்டர்களை விநியோகம் செய்கின்றன.

இவற்றுக்கான விலை சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை நிலவரத்துக்கு ஏற்ப மாதந்தோறும் முதல் தேதியில் மாற்றம் செய்யப்படுகிறது. இந்நிலையில், இன்று (ஏப்ரல் 1) வணிக பயன்பாட்டுக்கான சமையல் காஸ் சிலிண்டர் விலை ரூ.41 குறைந்தது.

புதிய விலையின்படி 19 கிலோ எடையிலும் சமையல் காஸ் சிலிண்டர்சென்னையில் ரூ.1,924.50க்கு விற்பனை செய்யப்படுகிறது. டெல்லியில் ரூ.1,762-க்கும், மும்பையில் ரூ.1,714.50-க்கும், கொல்கத்தாவில் ரூ.1,872-க்கும்.

வீட்டு உபயோக காஸ் சிலிண்டர் விலை எந்த மாற்றமும் இன்றி விற்பனையாகிறது. டெல்லியில் ரூ.803, கொல்கத்தாவில் ரூ.829, மும்பையில் ரூ.802.50 மற்றும் சென்னையில் ரூ.818.50 என்றளவில் விற்பனையாகிறது.

## ஆதிதிராவிடர், பழங்குடியின மாணவர்களுக்கு உயிர் கல்வி வழிகாட்டு நிகழ்ச்சி: வேலூர் கலெக்டர் தொடங்கி வைத்தார்

**வேலூர், ஏப்.2:**




வேலூர் மாவட்டத்தில் உள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவிகளுக்கு என் கல்லூரி கனவு எனும் உயர் கல்வி வழிகாட்டும் நிகழ்ச்சியை மாவட்ட கலெக்டர் வே.இரா. சுப்புலெட்சுமி தொடங்கி வைத்து ஆலோசனை வழங்கினார்.

இந்த உயர்கல்வி வழிகாட்டி நிகழ்ச்சியில் வேலூர் மாவட்டத்தில் உள்ள 5 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல மேல்நிலைப் பள்ளிகளை சார்ந்த 258 மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர். இன்றையநிகழ்வில்பன்னிரெண்டாம் முடிக்கவுள்ள மாணவ, மாணவிகளுக்கு உயர்கல்வியில் உள்ள வாய்ப்புகள் குறித்து விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. தமிழ்நாடு அரசின் நான் முதல்வன் திட்டத்தின் கீழ் மாணவ, மாணவிகளுக்கு வழங்கப்படும் திறன் மேம்பாட்டு பயிற்சிகள் குறித்தும், வேலைவாய்ப்புகள் குறித்தும் விரிவாக விளக்கப்பட்டது. இந்நிகழ்வில் சிறந்த வல்லுநர்கள் கலந்துகொண்டு உயர் கல்வி மற்றும் வேலை வாய்ப்பு குறித்த பல்வேறு ஆலோசனைகளை மாணவ, மாணவிகளுக்கு வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில் கலெக்டர் கூறியதாவது: அரசு பள்ளிகளில் பயலும் அனைத்து மாணவ, மாணவியர்களும் உயர் கல்வி பயில வேண்டும் என்பதற்காக முதலமைச்சர் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள். அரசின் சார்பில் என் கல்லூரி கனவு என்ற இந்த மிகப்பெரிய உயர் கல்வி வழிகாட்டி நிகழ்ச்சி நடத்தப்படுகிறது. இந்த உயர்கல்வி வழிகாட்டி நிகழ்ச்சிகளில் வழங்கப்படும்பல்வேறு அறிவுரைகள் மற்றும் ஆலோசனைகளை மாணவ, மாணவிகள் தவறாமல் அறிந்துகொண்டு உயர் கல்வியிலே இணைந்து தங்களுடைய வாழ்க்கையை செம்மைப்படுத்திக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அலுவலர் எஸ் ஆர் என் மதுச் செழியன், உதவி இயக்குனர் (திறன் மேம்பாடு) காயத்ரி, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

## நத்தம்பட்டியில் புதிதாக ‘முளைக்கும்’ சுங்கச்சாவடி: மதுரை செல்ல 5 இடங்களில் கட்டணம்?

**ஸ்ரீவில்லிபுத்தூர், ஏப்.2:**

தென்காசி, ராஜபாளை யத்தில் இருந்து மதுரை செல்வதற்கு 4 சுங்கச்சாவடிகள் உள்ள நிலையில் மதுரை - கொல்லம் நான்கு வழிச் சாலையில் நத்தம்பட்டியில் புதிதாக சுங்கச்சாவடி அமைக்கப்பட்டு வருவது வாகன ஓட்டுநர்கள் இடையே அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளது.

தமிழ்நாடு - கேரளாவை இணைக்கும் பிரதானச் சாலை வழித்தடமான 206 கி.மீ. தூரமுள்ள மதுரை-கொல்லம் தேசிய நெடுஞ்சாலையை (என்.ஹெச்.208) ‘பாரத்மாலா பரியோஜனா’ திட்டத்தின் கீழ் நான்கு வழிச் சாலையாக (என். ஹெச் 744) விரிவாக்கம் செய்ய 2021-ம் ஆண்டு அரசாணை வெளியிடப்பட்டது.

இதில் முதற்கட்டமாக மதுரை மாவட்டம் திருமங்கலம் முதல் வடுகபட்டி வரையிலான36கி.மீ. தூரத்துக்கு ரூ.541 கோடியும்,வடுகபட்டி முதல் ராஜபாளையம் தெற்கு வெங்காநல்லூர் வரை 36 கி.மீ. தூரத்துக்கு ரூ.723 கோடி என ரூ.1,264 கோடி மதிப்பில் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதில் எம். சுப்புலாபுரம் முதல் கிருஷ்ணன்கோவில் வரை தற்போது உள்ள சாலையே நான்கு வழிச் சாலையாக விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில், திருமங்கலம் - ஸ்ரீவில்லிபுத்தூர் இடையே நத்தம்பட்டியில் சுங்கச்சாவடி அமைக்கும் பணி நடந்து வருகிறது. ஏற்கெனவே தென்காசி, ராஜபாளையத்தில் இருந்து மதுரை மாட்டுத்தாவணி செல்வதற்கு 4 சுங்கச்சாவடிகள் உள்ள நிலையில் தற்போது ஸ்ரீவில்லிபுத்தூர் அருகே புதிதாக சுங்கச்சாவடி அமைக்கப்பட்டு வருவது வாகன ஓட்டுநர்கள் இடையே அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளது. இதுகுறித்து வாகன ஓட்டுநர்கள் கூறியதாவது: ராஜபாளையத்தில் இருந்து மதுரை செல்வதற்கு 4 சுங்கச்சாவடிகளைக் கடந்து செல்ல வேண்டி உள்ளது. இதில் கப்பலூர் சுங்கச்சாவடியில் கார்களுக்கு ஒரே நாளில் சென்று திரும்பி வர ரூ.155, மதுரை ரிங் ரோட்டில் வேலம்மாள் கல்லூரி, சிந்தாமணி, விரகனூர் ஆகிய 3 சுங்கச்சாவடிகளிலும் ஒரே நாளில் சென்று திரும்பி வருவதற்கு ரூ.80 சுங்கக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

கொல்லம், தென்காசி, ராஜபாளையம் செல்வோர் கப்பலூர் சுங்கச்சாவடி உள்ள தேசிய நெடுஞ்சாலையில் (என். ஹெச் 44) 5 கி.மீ. தூரம் மட்டுமே பயன்படுத்தும் நிலையில், சுங்கக் கட்டணம் செலுத்தி வருகின்றனர். இதுகுறித்து பலமுறை போராட்டம் நடத்தியும், எந்த நடவடிக்கையும் இல்லை. கனரக வாகனங்கள் ஏற்றிச் செல்லும் சரக்கின் அடிப்படையில் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. 60 கிலோ மீட்டருக்கு இடையில் சுங்கச் சாவடி அமைக்கக் கூடாது என விதி உள்ள நிலையில் அடுத்தடுத்து உள்ள சுங்கச்சாவடிகளால் சிரமம் ஏற்படுகிறது. இந்நிலையில் ஸ்ரீவில்லிபுத்தூர் - திருமங்கலம் இடையே நத்தம்பட்டியில் புதிதாக சுங்கச்சாவடி அமைக்கப்பட்டு வருவது அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. இதனால் வாடகை கார் மற்றும் சரக்குப் போக்குவரத்துக் கட்டணம் உயரும், என்றனர்.

இதுகுறித்து மதுரை - கொல்லம் நான்கு வழிச் சாலை திட்ட இயக்குநர் வேல்ராஜ் கூறுகையில்: கப்பலூர் சுங்கச்சாவடி தேசிய நெடுஞ்சாலை 44-ல் உள்ளது. நத்தம்பட்டி டோல்கேட் தேசிய நெடுஞ்சாலை 744-ல் அமைக்கப்பட்டு வருகிறது. ஒரே சாலையில் 60 கிலோ மீட்டருக்குள் சுங்கச்சாவடி இருக்கக் கூடாது என்பதுதான் விதி. கப்பலூர் சுங்கச்சாவடிக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. இந்தச் சாலையில் அடுத்த சுங்கச்சாவடி கேரள எல்லையான புளியரை அருகே அமைய உள்ளது, என்றார்.

### தமிழ்நாடு மத்திய பல்கலைக்கழகத்தில்
## தேசிய கண்டுபிடிப்பு இயக்கம் நடத்திய பயிலரங்கம்

**திருவாரூர், ஏப்.2:**

திருவாரூர் மாவட்டம் நீலக்குடியில் அமைந்துள்ள தமிழ்நாடு மத்திய பல்கலைக்கழகத்தில் தேசிய கண்டுபிடிப்பு இயக்கம் என்ற திட்டத்தின்கீழ், 12 ஆம் வகுப்பு முடிக்கும் மாணவர்களுக்காக ஒரு சிறப்பு பயிலரங்கம் நடைபெற்று வருகிறது. இந்த பயிலரங்கம், அறிவியல், கணிதம் மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த பாடங்களில் போட்டித் தேர்வுகளை மாணவர்கள் எவ்வாறுஎதிர்கொள்ளவேண்டும். அத்தகைய தேர்வுகளுக்கு தங்களை எப்படி தயார்படுத்திக் கொள்ள வேண்டும் என்பது குறித்து பயிற்சி அளிக்கும் நோக்கத்துடன் நடத்தப்படுகிறது.

முன்னதாக, கடந்த மார்ச் 26 முதல் 28 ஆம் தேதி வரை மூன்று நாட்கள், பிளஸ் 2 தேர்வு எழுதியமாணவிகளுக்காக இந்த பயிலரங்கம்நடைபெற்றது. இதில் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவிகள்பங்கேற்றுபயன்பெற்றனர். இதன் தொடர்ச்சியாக, ஏப்ரல் 1 முதல்ஏப்ரல்3வரை,பிளஸ்2தேர்வு எழுதிய மாணவர்களுக்காக இப்பயிலரங்கம் நடைபெற உள்ளது. இதனை மாணவர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என தமிழ்நாடு மத்திய பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் மு. கிருஷ்ணன், மாணவிகளுக்காக நடைபெற்ற பயிலரங்கத்தில் வாழ்த்துக்கள் தெரிவித்தார்.

## ரயிலில் பெண் பயணிகளின் பாதுகாப்புக்கு ‘வாட்ஸ் அப்’ குழு

**சென்னை, ஏப்.2:**




ரயில் பயணத்தின் போது பெண்களுக்கு எதிரான குற்றச் செயல்களை தடுக்கவும், அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும் தமிழ்நாடு ரயில்வே போலீசார் சார்பில் “ரயில் பெண் பயணி கள் பாதுகாப்பு” என்ற ‘வாட்ஸ்அப் குழு’ அமைக்கப்பட்டுள்ளது. இதை ரயில்வே டி.ஜி.பி. வன்னியபெருமாள் தொடங்கி வைத்தார். இதில் தினந்தோறும் ரயிலில் பய ணிக்கும் பெண்கள் காய்கறி வியாபாரி கள், பள்ளி மற்றும் கல்லூரி மாணவிகள், அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் பணியாற்றும் பெண்களுடன் அந்தந்த பகுதியில் உள்ள ரயில்வே பெண் போலீ சார் இடம் பெற்றுள்ளனர். குறிப்பாக, இவர்கள் குழந்தை பருவம் முதல் ரயில் பயணம் செய்வதால் ரயில் பயணத்தில் பெண்களிடம் தொந்தரவு செய்பவர்கள், குற்றம் செய்பவர்கள் குறித்த விவரங்களை அறிந்திருக்க வாய்ப்பு இருக்கிறது. இந்த குழுவில் சந்தே கப்படும் மற்றும் குற்றச் செயல்களில் ஈடு படுபவர்கள் குறித்த தகவலை தெரிவித் தால், போலீசாருக்கு நடவடிக்கை எடுக்க எளிதாக இருக்கும். ரயில்வே டி.ஜி.பி. அறிவுறுத்தல்படி, தமிழகம் முழுவதும் உள்ள ரயில்வே காவல் நிலையத்தில் இதுபோன்ற குழு அமைக்க அறிவுறுத்தப்பட்டு உள்ளது. ரயில் பயணத்தின் போது தாங்கள் பார்க்கும் வழிப்பறி, குற்றச் சம்பவங்களில் ஈடுபடுபவர்கள் குறித்த தகவல்களையும் இந்த வாட்ஸ்அப் குழுவில் ரகசியமாக பகிர்ந்து கொள்கிறார்கள். சென்னையில் 23 ரயில் நிலையங்களில் உள்ள ரயில்வே போலீசில் இந்த குழு அமைக்கப்பட்டு உள்ளது. இதற்கு பெண்கள் மத்தியில் நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது.

## வீடு தீப்பிடித்து சேதம்: அரசு நிவாரணம் வழங்கல்

**சூலமங்கலம், ஏப்.2:**

அய்யம்பேட்டையை அடுத்த சூலமங்கலம் இரண்டாம்சேத்தி பாக்குத்தோப்பு பகுதியைச் சேர்ந்த கூலித்தொழிலாளி அப்துல்லா, கொலுசம்பீவி வசித்த குடிசை வீடு தீப்பற்றி முழுவதும் எரிந்து சேதமானது. இதையடுத்து அரசு நிவாரணமாக ரூ 8,000, அரிசி, வேட்டி, சேலை உள்ளிட்டவற்றை பாபநாசம் தாசில்தார் பழனிவேல் வழங்கினார். இதில் அய்யம்பேட்டை பேரூர் திமுக செயலர் வழக்கறிஞர் துளசிஅய்யா, அஞ்சுமன் பள்ளித் தாளாளர் இப்ராஹிம், அய்யம்பேட்டை பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் அழகேசன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.



# மறதியின் சௌகரியம்

அம்மா, என்னைக் கையசைத்துக் கூப்பிட்டாள். ' நீ யார்? இங்கே என்ன செய்கிறாய்?' நான் பக்கத்தில் போய் ஆதரவாய் கையைப் பற்றினேன்.' உன் பெயர் எனக்கு மறந்து விட்டது. எனக்கு ஒரு மகள் உண்டு. அவள் பெயர் கூட நினைவில்லை.' என்றதும்; எனக்கு மிகுந்த வருத்தம் மாயிற்று. 'நான்தான் அம்மா உங்கள் புவனி. ' அட! ஆமாம்! நீ வேலைக்கு போகலையா? உன் ஜீப் இன்று வராதா?'. நான் என் அம்மாவின் உடல்நிலை காரணமாக பணி ஓய்வு பெற்று மூன்று வருடங்கள் ஆகிறது. அம்மாவுக்கு எல்லாம் மறந்து போய்விட்டது போல் இருக்கிறது.' அம்மா நேரமாகி விட்டது. காஃபி கொண்டு வரவா?' என்று நான் வினவ ' இருக்கட்டும்! அவன் வந்ததும் சேர்ந்தே சாப்பிடலாம். அவன் காலேஜில் இருந்து வரும் நேரம் தானே?' அவன் என்று அம்மா குறிப்பிட்டது ' பத்து வருடத்திற்கு முன் மேல் படிப்புக்காக அமெரிக்கா போன என் அண்ணன் மகன் நந்தனைத் தான்.



வாழ்க்கையின் விட்டுப் போன பாவு நூல்களை முடிந்து வைக்க எந்த ஒரு முயற்சியும் அவள் மனம் எடுத்துக் கொள்ளவில்லை. அதற்காக மனம் உறைந்த நிலையில் இருப்பதாக எவரும் தவறாக எண்ண வேண்டாம். பாவு நூல் அறுந்து அங்கங்கே தொங்கி கொண்டிருப்பதை அவள் உணர்ந்தவளாக இல்லை. நினைவுகள் முன்னும் பின்னும் அவளை அலைக்கழிக்கிறது.

வாயிலில் அழைப்பு மணி யோசை கேட்டு கதவைத் திறந்தவள், திடுக்கிட்டு நின்றுவிட்டேன். வந்தவன்; வேறு யாருமில்லை; என் அண்ணன், ஜெகதீசன் தான். ' அம்மா, எப்படி இருக்கா? என்னால்தான் உனக்கு எத்தனை தொந்தரவு! அம்மாவைப் பார்க்கும் பொறுப்பை உன்னிடம் சாட்டி விட்டேன். ரொம்பவும் வருத்தமாயிருக்கிறது. இவளைப் பார்ப்பேனா; கமலினியை கவனிப்பேனா? கம்பெனி வேலைகளைப் பார்ப்பேனா? முதியோர் நிலையத்தில் விட்டதில், ஏகப்பட்ட பிரச்சினைகள். எல்லோரையும் துருவித் துருவி கேள்விகள் கேட்டு, கேட்காத ஆலோசனைகளை சொல்லிச் சொல்லி ஒரே தொந்தரவு. ஃபோன் பண்ணி தயவு செய்து கூட்டிப் போய் விடுங்கள்; என்று கேட்டுக் கொண்டதில் பேரில் உன்னிடம் கொண்டு விடும்படி நேர்ந்து விட்டது." என்று தழைவுடன் சொன்னவனை,"வா! அண்ணா! நான் ஃபோன் பண்ணாமல் திடுமென உன்னைப் பார்த்ததும் திடுக்கிட்டு விட்டேன். அம்மாவின் பொறுப்பு இருவருக்கும் பொதுவானது தானே! அண்ணி தற்போது நலமா? சிகிச்சை தொடர்ந்து நடக்கிறதா' என்று கேட்டவளுக்கு 'ம்' என்று ஒற்றை வார்த்தையில் பதில் சொன்ன அண்ணனைக் கண் டதும், அம்மாவின் முகத்தில் ஒரு மலர்வு. ' வா! குழந்தே! எனக்குத் தெரியும். நீ என்னைக் கூட்டிண்டு போக வருவேன்னு சித்த முன்னாடி கூட புவனி கிட்ட சொல்லிண்டுதான் இருந்தேன். அப்பா எப்படி இருக்கிறார்? அவர் ஏன் எனக்கு ஃபோன் பண்ணவே இல்லை? அவருக்கு என் நினைப்பே இல்லையா? அவரைப் பிரிந்து இருப்பது எனக்கு அனல் மேல் இருப்பது போல் இருக்கிறது. என்னை அவர் கிட்ட கூட்டிட்டு போயிடு.ஃபேனைப் போடு; புவனி! அவ நன்றாக இருக்கிறாளா? அவ ஏன் என்னைப் பார்க்க வரவில்லை.? 'என்று படபடவென அம்மா பேசிக்கொண்டே போனாள். இப்போது, 'அவள்' என்பது என் அண்ணியை. இரண்டு வருடமாக புற்று நோயுடன் போராடிக் கொண்டிருக்கும் என் அண்ணி,கமலினியால் எப்படி ரயில் ஏறி பயணம் பண்ண வர இயலும்? மனத் தறியில் இன்னொரு சிக்கல்; முடிச்சுடன். அதை நேர் செய்யும் நினைப்போ, முனைப்போ இல்லாத மனம்.

' புவனி! நாளை மறுநாள் அப்பாவின் திதி வருகிறது; இல்லையா! அதற்காகத்தான் நான் இங்கு நான் வந்திருக்கிறேன். அம்மாவுக்கு ஞாபகமே இல்லையா? என்று கேட்டான்." "அண்ணா! வேண்டாம்! அப்பாவுக்கு திதி கொடுக்க வேண்டாம்.அம்மா நினைவுகளின் கூட்டில் இருக்கிறாள். அவளை அப்படியே விட்டு விடேன். ஒருநாள், இந்த உயிர் கூட்டிலிருந்து வண்ணத்துப்பூச்சியாய், அது பறந்து விடும். அது வரை காத்திருப்போம். பாவம்! அவள் இருக்கும் மட்டும் இப்படியே இருந்துவிட்டு போகட்டுமே!' என்றதும், யதார்த்தத்தை புரிந்து கொண்ட அண்ணன் ஜகதீசனின் நெஞ்சு விம்மி அடங்கியது; கண்ணீர் நிறைந்த கண்களுடன்.



சசிகலா விஸ்வநாதன்

# நிலம்

எப்போதும் மகிழ்ச்சியாக இருக்கும் செல்வம் இன்று ஏதோ குழப்பத்தில் இருப்பது போல் தோன்றியதால் ஆதவன் அவன் தோளை பற்றி "என்ன? "என கேட்டான் ஆதவனை பார்த்த செல்வம்

"நான் வேலைய ரிசைன் பண்ண போறேன் "என்றான்

" ஏன் என்ன ஆச்சு" என்ற போது செல்வம் சொன்ன காரணம் ஆச்சரியமாக இருந்தது

கிராமத்தில் உள்ள விவசாய நிலத்தை சென்று பராமரிக்க போவதாகவும் இனி விவசாயம்தான் தனது தொழில் வாழ்வாதாரம் தனக்கும் அதில் ஆர்வம் இருப்பதாகவும் தன் தந்தையின் ஆசையும் அதுதான் எனவும் சொன்னான் செல்வம்.

ஆதவன் அவனுக்கு எவ்வளவோ அறிவுரைகள்எடுத்து வைத்தான் ஓரிரு ஆண்டு காத்திருந்தால் பிளாட் போடலாம் மிகப்பெரிய தொகை வரும் விவசாயம் செய்து என்ன வரப்போகிறது என ஆனால் செல்வம் கேட்கவில்லை. அடுத்த நாள் கிராமத்திற்கு செல்ல போவதாகவும் சொல்லி கிளம்பிவிட்டான்.

யோசனையோடு வீட்டிற்கு வந்த ஆதவன் வீட்டு வாசலில் புது செருப்பை பார்த்ததும் அது சிதம்பரத்தின் செருப்பு என்பதை உணர்ந்து உள்ளே நுழைந்தான் .சிதம்பரம் எழுந்து நின்றார் ஆதவனின் மனைவி " வாங்க "என சொல்லி காபி கொடுத்தாள்.

" என்ன "என்பது போல ஆதவன் காபியை வாங்கிக் கொண்டு சிதம்பரத்தை பார்த்தபோது சிதம்பரம் சொல்ல தொடங்கினார்

"தம்பி நான் உங்க அப்பா காலத்திலிருந்து உங்க கிராமத்து நிலத்துல விவசாயம் பார்க்கிறேன் ஆனா அப்பா போனதுக்கப்புறம் இங்க டவுன்ல ஊருக்கு ஒதுக்குப்புறமா இருக்கிற உங்களோட பிளாட்டில் சில கீரை வெண்டை கத்திரி மல்லி தக்காளின்னு சில பயிர்களை பார்த்துக்கிட்டு பொழப்பை ஓட்டிக்கிட்டு இருக்கேன் என்னை நல்லாவே பாத்துக்குறிங்க நான் ஒத்த ஆளு ஒண்டிக்கட்ட விவசாயம் தான் உலகம் னு வாழ்ந்துட்டேன்ஆனா இப்ப அந்த இடத்துலயும் எதோ கட்டடம் கட்டப் போறதா நேத்து ஆட்கள் எல்லாம் வந்தாங்க தம்பி அதான் சொல்லிட்டு போலாம்னு வந்தேன் "என்றார் சிதம்பரம்.

" அதை வித்தோம்னா நமக்கு ஒரு பெரிய அமௌன்ட் வரும் சிதம்பரம் அதுக்கு தான் நாமலே ஒரு பெரிய அப்பார்ட்மெண்ட் கட்டிட்டா அது பாட்டுக்கு ஒரு வருமானம் மாசம் மாசம் வரும் அதுக்கும் நீங்க தான் இன்சார்ஜ் வாடகை வசூல் பண்ணி கொடுங்க இப்ப இருக்குற மாதிரியே ஹாப்பியா இருங்க வேற என்ன வேணும்னாலும் கேளுங்க உங்க சொந்த வீடு மாதிரி தான்.. அது மட்டும் இல்லாம இதுவரைக்கும் அதுல இருந்து நமக்கு என்ன பெருசா ஒன்னும் வருமானம் இல்லையே ஏதோ வீட்டுக்கு நாலு கத்தரிக்காய் தக்காளி வருது அது சந்தையிலே வாங்கிக்கலாமே " செல்வம் சொன்ன போது சிதம்பரத்தின் முகத்தில் மகிழ்ச்சி வரவில்லை

"தம்பி எதுவா இருந்தாலும் மண்ணுல கைய வைக்காம என்னால இருக்க முடியாது நான் அப்படியே வாழ்ந்துட்டேன் உங்களுக்கே தெரியும் நான் என்ன பண்றது "என சிதம்பரம் சொல்லி ஆதவனை உற்றுப் பார்த்தார்.

உடனே ஆதவனுக்கு ஒரு யோசனை வந்தது செல்வத்திற்கு தொலைபேசி போட்டான். அவன் எடுத்ததும்

" செல்வம் கிராமத்தில் விவசாயம் தானே பார்க்க போற நமக்கு தெரிஞ்சவர் இன்னும் சொல்லப்போனா எங்க அப்பாவுக்கு ரொம்ப வேண்டியவர் என் குடும்பத்துல ஒருத்தர் சிதம்பரம் அவர கூட வச்சுக்கோ விவசாயம் நல்லா பார்ப்பார்" என அவன் சொல்லும்போது இடைமறித்தான் செல்வம் .

"இல்ல ஆதவா என் முடிவை மாத்திக்கிட்டேன் வீட்டுக்கு வந்து நீ சொன்னதை என் மனைவி கிட்ட சொன்னேன் அவளும் விவசாயம் பண்ணி ஒரு மூணு முட்டை நெல்லு அரிசி வரப்போகுது அதுக்காக ஏன் அவ்வளவு கஷ்டப்பட்டு விற்று விடுங்கள் என சொல்லிட்டா அதை விக்கலான்னு இருக்கேன் "என அவன் முடிவு மாற்றிக் கொண்டதை சொன்னவுடன் ஆதவன் மனம் சுருங்கியது.

சிதம்பரத்தை பார்த்தபோது அவரும் விஷயத்தை கிரகித்து முகம் வாடினார். செல்வம் விவசாயம் பார்க்கப்போவதாக சொன்னபோது கொஞ்சம் வருத்தமாக இருந்தாலும் ஆதவன் மனதுக்குள் அது ஒரு மகிழ்ச்சியான செய்தியாக தான் இருந்தது எனவே செல்வம் இப்போது முடிவை மாற்றிக் கொண்டதும் ஆதவனுக்கு ஒரு யோசனை தோன்றியது உடனே அதை செல்வத்திடம் சொன்னான் செல்வம் அந்த இடத்தை விக்கிறதா சொன்னேன்ல அதை நானே வாங்கிக்கிறேன் என சொல்லி டோக்கன் அட்வான்ஸ் தொகையையும் உடனே அனுப்புவதாக சொன்னதும் செல்வம் ஒத்துக் கொண்டான் மகிழ்ச்சியாக.

கைபேசியை வைத்த ஆதவன் சிதம்பரத்தை பார்த்து" ஐயா அந்த நிலத்தை விக்கப்போவதில்லை உங்களுக்காக தான் அந்த நிலம் வாங்குறேன் எனக்கு சில விஷயங்கள் மனசுக்குள்ள இருக்கு ஆனா புரியல இப்ப புரியுது என சொன்ன போது சிதம்பரம்

"தம்பி கொஞ்ச நாள் கழிச்சு வாங்குன நிலத்தை வித்திட மாட்டீங்களே மறுபடியும்" என சந்தேகமாக கேட்டபோது

"கண்டிப்பா விக்க மாட்டேன் சிதம்பரம் நான் ரிட்டயர் ஆனதுக்கு அப்புறம் கிராமத்துக்கு தான் வரப்போறேன் அங்கதான் செட்டில் ஆகப் போறேன் இடையிலையும் விடுமுறை ஓய்வுல வருவேன் எனக்கு கொஞ்சம் கொஞ்சமா விவசாயத்தை காத்துக் கொடுங்கள் சொந்த மண்ணை பார்த்துகிட்டு விவசாயத்தையும் பாத்துட்டு நிம்மதியா சொந்த ஊர்ல உக்காந்தா தான் அதுல ஒரு நிம்மதி கிடைக்கும் நிச்சயமாக விக்க மாட்டேன் நீங்க இன்னைக்கு வந்தது நல்ல விஷயம் தான் சிதம்பரம் சாப்பிட்டு காலையில் நீங்க முன்னாடி போங்க நான் பின்னாடி வரேன் கிராமத்துக்கு"

என சொல்லி சிதம்பரத்தை சாப்பிட வைத்தான் . ஆதவன் சாப்பிட்டுவிட்டு அன்று இரவு நிம்மதியாக தூங்கினான்.




-ஜனனி அந்தோணி ராஜ்
திருச்சிராப்பள்ளி



# அவதாரம் எங்க கூட்டாளி



■கே.ஆனந்தன்

நல்ல வெயிலடிச்சா ஒரு மஞ்ச கலரு மத்தியான நேரத்துல வருமே.. பாத்திருக்கீங்களா?..அந்த கலரு அவென்..அதனாலதேன் அவென அப்புடி கூப்புடறது.. அவென் கணேசனுக்கு நெருங்கிய கூட்டாளி.. நெகம் கூட வெரல வுட்டு கொஞ்ச தூரம் வெலகி வளந்து வந்துடும்..ஆனா இவுங்க ரண்டு பேரும் பிரிஞ்சி யாராலும் பாக்கவே முடியாது..

இன்னிக்கு அவனில்லாம இவன தனியா பாத்த சென்னையனுக்கு ஆச்சரியம் தாங்கல..

"என்னா செவத்தான்..எங்கடா உங் கூட்டாளி?..கணேசன் வர்லயா?.."சென்னையன் கேட்டான் கொமரேசங்கிட்ட..

"வர்லடா..அவஞ் சொந்தம் யாரோ செத்துட்டானாம் இன்னிக்கி காத்தால.. எழவுக்கு பொறதா சொன்னான்.."

"அடப்பாவி..ஆடுங்க அத்தினியும் பட்டினியா இல்லடா நிக்கிம்.."



கணேசங்கிட்ட கொறஞ்சது அம்பது உருப்புடிங்களாச்சும் இருக்கும்.அவங் கொல தொழிலே ஆடு மேய்க்கறதுதா..ஊருக்கு முன்னால ஆடுகள பத்திக்கிட்டு கெளம்பிடுவான் மேச்சலுக்கு.இன்னிக்கி அத்தினியும் பட்டினியா இருக்குமேங்கற கவலதா சென்னையனுக்கு.

'எல்லாமே உசுருதான?.வவுறு எல்லா உசுருக்கும் கீதுதான?. பசியு எல்லா உசுருக்கும் இருக்கும்தான.ஒரு ஜான் வவுறு நமுக்கு.நம்மாலயே பசி தாங்க முடியறதில்ல.பாவம் அதுகளுக்கு ஒடம்பெல்லாம் வவுறு.'னு சிந்தன ஓடுது அவென் மனசுக்குள்ள..



"அதுக்கென்னா பண்றது சென்னயா?..ஒரு நல்லது, கெட்டதுனு நாம நாலு பேருக்கு போனாத்தனப்பா நாளக்கி நமக்கு நாலு பேரு வந்து நிப்பான்..அதும்போக செத்தவன் கணேசனுக்கு நெருங்கிய ஒறவு மொறயாம்.. போயிட்டு மதியானமெல்லாம் வந்துடுவான்..வந்து ஆடுங்கள பத்திட்டு வருவான்.."

"அப்ப செரி..நீ எந்த பக்கம் போற?.."

"இந்தா.கரடிக்குட்ட பக்கம் போறன்.நீயி?.."

"நா நரி மேடு பக்கமா போறன்.."

அந்த காட்டுலயே கரடிகுட்ட,நரிமேடுனு ரண்டு பக்கம் இருக்குது..செல பேரு கரடிக்குட்ட பக்கம் போவாக.. செல பேரு நரி மேடு பக்கம் போவாக.

அந்த காலத்துல கரடிக்குட்ட பக்கம் நெறய கரடிகளும்,நரிமேடு பக்கம் நெறய நரிங்களும் பொழச்சி கெடந்துச்சாம்..தேக்கங் கெழவன்தான் அம்புட்டயும் கத, கதயா சொல்லும்..

"டே மாப்ள..நாங்க எளந்தாரியா இருக்கற காலங்கள்ல இங்க எல்லாம் கரடியும்,நரியுமா இருக்குமுடா.இங்க எல்லாம் உருப்புடிகள ஓட்டிட்டு வரவே பயப்புடுவோமுடா.. மேய வர்ற ஆடுங்கள நரியும்,கரடியும் தின்னது போவத்தான்டா நமுக்கு.. உசுர கையில புடிச்சிட்டுதான் வருவோம்.." னு சொல்லி இருக்கு.

இப்பல்லாம் அந்த காட்டுல நாயுமில்ல.நரியுமில்ல. கரடியுமில்ல.'நம்மள வுட ஆபத்தானவங்க இந்த மனுச பயக'னு நெனச்சிட்டு போயிடுச்சோ என்னமோ.யாரு கண்டா?

தொடரும்...

தமிழ்நாடு இ பேப்பர்.காம்

# நம்பிக்கை. நம்பிக்கை.. நம்பிக்கை...

"யானையின் பலமெதிலே தும்பிக்கையெலே மனுஷனோட பலம் எதிலே நம்பிக்கையெலே" யானையின் தும்பிக்கையையும் மனிதனின் நம்பிக்கையையும் ஒப்பிட்டு பாட்டு எழுதப் படுகின்றதென்றால் மனிதனுக்கு நம்பிக்கை எத்தனை முக்கியம் என்பதை இது சுட்டிக் காட்டுகிறது.

ஒரு குழந்தை ஜனித்தவுடனேயே அதன் தாய் தனது மதத்தின் விதிகளின்படி ஜெபிக்க வேண்டிய மத போதனைகளை அந்த கருவிற்கு நித்தம் போதித்து அதை கருவிலேயே நல் வழி படுத்த முயல்கிறாள்.

1.அந்த நிமிடத்திலிருந்தே அக்கரு நம்பிக்கையின் முதல் பாடத்தை கற்கிறது.

2.குழந்தை பிறந்த நிமிடத்திலிருந்து ஒரு தாய் அதன் பசிக்கு தன் உதிரத்தை பாலாக்கி தருகிறாள். அதன் பசி, தாகம், உறக்கமறிந்து அதனை பாசத்திலும் நேசத்திலும் பிணைத்து வளர்கிறாள். அடுத்ததாக அதன் தந்தையை அறிமுகப் படுத்துகிறாள். அக்குழந்தையின் வலது கரமாக இருந்த நம்பிக்கையின் இரண்டாம் பாடத்தை பயிற்றுவிக்கிறாள்.

3.தந்தை அக்குழந்தையை தூக்கியும், கொஞ்சியும், நேசித்தும் தான் அதனின் இடது கரமென்பதை உறுதி படுத்துகிறார். இது நம்பிக்கையின் மூன்றாவது பாடம்.

4.குழந்தை வளர்ந்து வெளியுலகை பார்க்கும்போது அண்ணா, அக்கா உறவுகளை அறிமுகப் படுத்தி குடும்ப உறவுகளின் முக்கியத்துவத்தை புரிய வைக்கும் நான்காவது பாடத்திற்கு அடித்தளமிடுகின்றனர்.

5.பள்ளி பருவத்தில் ஆசிரியர் என்ற ஒருவரும் அக்குழந்தையின் உலகிற்குள் நுழைகிறார். ஒரு மாணவன் பிற மாணவர்களுடன் எப்படி பழக வேண்டும், நல்லது, கெட்டது யாவற்றையும் கற்று தர வருகிறார் அந்த ஆசிரியர். மேலும் நல்லவர் யார், கெட்டவர் யார், பாதுகாப்பான தொடுதல், பாதுகாப்பான சூழல் எது என்பதையும் புரிய வைக்கிறார். அந்த ஆசிரியரும் மற்ற பிள்ளைகளும் தனது நண்பர்கள்தான் என்ற ஐந்தாவது பாடத்தை புகட்டுகிறார்.

6.அந்த பிள்ளை கல்லூரி பருவத்தை தொடுகிறது. இது அந்த பிள்ளை தனது வாழ்நாள் நட்பை தேர்ந்தெடுக்கும் நேரம். இந்நேரத்தில் அந்த பிள்ளையை முழுமையாக கண்காணித்து நல்ல நட்புக்களை தேர்ந்தெடுக்க உதவி நம்பிக்கையின் ஆறாவது படியாகிறார்கள்.

7. வேலைக்கு செல்லும் பருவத்தில் அனுபவம், இணக்கமாக பழகுவதன் மூலம் பிறரையும் நம்பிக்கைக்கு பாத்திரமாக்கி ஏழாவது படிக்கல்லை எட்டுகிறது.

8. நிரந்தர வேலை கிடைத்த பின் வாழ்க்கை துணையை தேடி தேர்ந்தெடுக்கிறான். திருமண பந்தத்தில் நுழைந்து தனது கணவனுடனோ மனைவியுடனோ இணைந்து அவர்களின் உற்றாரின் நம்பிக்கைக்கு பாத்திரமாகிறான். இது மிக கடினமான எட்டாவது நம்பிக்கை பாடம்.

9.தாம்பத்தியத்தில் ஈடுபட்டு குழந்தை பெற்றவர்கள் ஆகின்றனர். அக்குழந்தையை நன்றாக வளர்த்து அதன் நம்பிக்கையை பெறும்போது ஒன்பதாவது படிக்கல்லை தொடுகின்றனர்.

10.அந்த பிள்ளை நல்ல வேலையில் அமர்ந்து தனது உழைப்பால் முன்னேறி அவர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தும்போது பெற்றோர் நம்பிக்கையின் பத்தாவது படிக்கல்லை எட்டி பிடிக்கின்றனர். இதுவே வாழ்க்கையில் நம்பிக்கை கற்று தரும் மிக உன்னதமான பாடம்.



-ரமா ஸ்ரீனிவாசன்



# தினம் ஒரு தலைவர்கள்
# டி.என்.தீர்த்தகிரி முதலியார் வரலாறு

தீர்த்தகிரியார் தர்மபுரியை அடுத்த அன்னசாகரத்தில் நவம்பர் 4, 1880 (அரசு குறிப்பு: 1886) அன்று தர்மராஜா கோவில் பரம்பரை தர்மகர்த்தாவான நாராயண முதலியாரின் மகனாகப் பிறந்தார் தீர்த்தகிரியார் அதிகம் படித்தவர் அல்லர் ஆனாலும் அவர் ஒரு சித்த வைத்தியர் மற்றும் இலக்கியவாதி.

சுதந்திர போராட்டம் ஆரம்பகாலம்

இந்திய சுதந்திரப் போராட்டம் மகாத்மா காந்தியின் செல்வாக்கு காரணமாக அகிம்சை வழியில் செல்வதற்கு முற்பட்ட காலத்தில் துப்பாக்கியும், குண்டும் ஏந்தி வன்முறையால் ஆங்கிலேயரை விரட்ட வேண்டுமென்ற கருத்து கொண்டவர்களின் ஆதிக்கத்தில் இருந்தது. தீர்த்தகிரியார் 20ம் நூற்றாண்டில் துவக்கத்தில் புரட்சி வழியில் செயல்பட்ட தலைவர்களான வ.உ.சிதம்பரம் பிள்ளை, சுப்பிரமணிய சிவா, மகாகவி சுப்பிரமணிய பாரதியார், வாஞ்சிநாதன் ஆகியோரது அணியில் அவர்களின் தோழராக இருந்தார். ஆஷ் துரையின் படுகொலையாளியைத் தேர்வு செய்ய சீட்டு குலுக்கிப் போடப்பட்ட பெயர்களில் தீர்த்தாகிரியாரின் பெயரும் ஒன்று. ஆனால் அதில் வாஞ்சிநாதன் தேர்வாகி ஆஷைச் சுட்டுக் கொன்றார். தீர்த்தகிரியார் ஒரு இடதுசாரி சிந்தனையாளர். அதனால் முதலில் சுதந்திரம் நமது பிறப்புரிமையென்று குரல்கொடுத்த பாலகங்காதர திலகரைப் பின்பற்றினார். ஆயினும் மகாத்மா காந்தியின் அகிம்சை நெறியே அரசியல் வழக்கானபோது அதனை ஏற்று காங்கிரசு தொண்டராக சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்றார். சேலம் விஜயராகவ ஆச்சாரியாரால் விடுதலை இயக்கத்துக்கு ஈர்க்கப்பட்டவர்களுள் ஒருவரான டி. என். கந்தசாமி குப்தாவினைத் தனது அரசியல் குருவாக தீர்த்தகிரியார் குறிப்பிட்டுள்ளார்.

நீல் சிலை அகற்றம்

முதன்மைக் கட்டுரை: நீல் சிலை சத்தியாகிரகம்

ஊரெங்கும் பிளேக் நோய் பரவியதால் தீர்த்தகிரி அன்னசாகரத்தை விட்டு குடியாத்தம் சென்று ஓராண்டு தங்கினார். அப்போது அவர் சென்னையில் மருத்துவ சாலை (கருணை பிரவாக நிதிவைத்திய சாலை, லிங்கி செட்டித் தெரு) நடத்தினார். அக்காலகட்டத்தில், சென்னை மவுண்ட் ரோட்டில் (அண்ணா சாலை) இருந்த கர்னல் நீல் சிலையை 1927-1928ல் எஸ். என். சோமையாஜுலு தலைமையில் அகற்ற காங்கிரசார் முடிவு செய்தனர். அதன்படி, நாலைந்து நாட்கள் அச்சிலையை உளியால் சிறுகச், சிறுக உடைத்து வந்தனர். அதிகாரிகளும் சிலை பழுது பார்க்கும் வேலை நடக்கிறதென்று போய்விட்டனர். ஒரு நாள், மகாத்மா காந்தி வாழ்கவென கோஷமிட்ட பிறகு சிலை சேதமடைந்திருப்பதைக் கவனித்த பிரித்தானிய அதிகாரிகள் காங்கிரசு தொண்டர்களைக் கைது செய்தனர். அவர்களுள் தீர்த்தகிரியும் ஒருவர்.

பொது வாழ்க்கை

காமராசர், வ. உ. சிதம்பரனார், திரு. வி.க., கிருபானந்த வாரியார், சுப்ரமணிய சிவா, முத்துராமலிங்கத் தேவர், என். ஜி. ரங்கா, சாது சீனிவாசமூர்த்தி போன்றவர்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார்.





1930-1931-ல் கள்ளுக்கடை மறியலை தருமபுரியில் தலைமையேற்று நடத்தினார்.

1936-ல் திரிபுரா காங்கிரஸில் அகில இந்திய காங்கிரஸ் தலைமை தேர்தலில் காந்தியடிகளின் ஆதரவு பெற்ற பட்டாபி சீதாராமையாவுக்கு எதிராக ராஜாஜியிடம் சொல்லிவிட்டே சுபாஸ் சந்திரபோஸுக்கு ஓட்டளித்தார்.

தீர்த்தகிரியார் அவர்கள் சிலகாலம் பாரதியாருடன் தலைமறைவாகவும், சிலகாலம் நாடு கடத்தப்பட்டும் பாண்டிச்சேரியில் இருந்தார்.

விடுதலை போராட்டங்கள் பலவற்றிலும் தனக்கு வாய்த்த மெய்த்தொண்டராக அருஞ்சகாவாக, தியாகச்சுடராக தீர்த்தகிரியார் திகழ்ந்தாரென தமிழ்நாடு சுதந்திரப்போராட்ட வீரர்கள் சங்கத்தலைவர் டாக்டர் எம். சோமயாஜிலு கூறியுள்ளார்.

விவேகானந்தர், காந்தி, நேரு மக்களின் விடுதலை போராட்டத்தை ஊக்குவிக்க தீர்த்தகிரியார் 1901-ல் சுவாமி விவேகானந்தரையும், 1921-ல் காந்தியையும், 1937-ல் நேருவையும் தர்மபுரிக்கு வரவழைத்தார்.

செங்குந்தர் பள்ளி

எல்லோரும் கல்வியறிவு பெற வேண்டுமென்ற ஆர்வமே இவரை தர்மபுரி குமாரசாமிபேட்டையிலுள்ள செங்குந்தர் பள்ளியின் வளர்ச்சியில் மிகுந்த அக்கறை காட்டச் செய்தது. அப்பள்ளிக்குக் கட்டிடம் கட்டித் தந்ததில் தீர்த்தகிரியாரின் பங்கு மிகவும் குறிப்பிடத்தக்கது.

பாரதிபுரம்

1946-ஆம் ஆண்டு தர்மபுரி பகுதியில் ஏற்பட்ட பெருமழை காரணமாக அன்னசாகரம் ஏரி உடைந்து பெருவாரியான மக்கள் வீடிழந்து தவித்தனர். அந்த சமயத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக தீர்த்தகிரியாரின் பெருமுயற்சியால் உருவானதுதான் தர்மபுரியை அடுத்துள்ள பாரதிபுரம்.

சித்த வைத்தியம்

தன் குடும்ப வாழ்விற்குத் தேவையான பணத்தை தான் அறிந்த நாட்டு மருத்துவத்தின் மூலமே ஈட்டினார். பற்பொடி, தலைவலி மருந்து, லேகியங்கள் தயாரித்தார். தான் தயாரித்த சித்த பல்பொடிக்கு தேச பக்தர் சித்ரஞ்சன் பெயரில் சித்ரஞ்சன் பல்பொடி என்றும், தலைவலி மருந்துக்கு சித்ரஞ்சன் பாம் என்றும் பெயரிட்டார். ஆயுர்வேத மருத்துவத்தில் இருந்த திறமையை சுப்பிரமணிய சிவாவின் அறிவுரையால் விரிவுபடுத்திக் கொண்டார். சிறை வாழ்க்கையின் போது நூற்றுக்கணக்கான போராட்ட வீரர்களின் வயிற்றுக்கடுப்பு நோயை ஆங்கில மருத்துவம் பலன் தராததால் சிறை அதிகாரியின் வேண்டுகோளின்படி குணமாக்கினார். 1942-ல் அலிபுரம் சிறையில் இருந்த போது சிறை கண்காணிப்பாளர் குடும்பத்திற்குக் கூட மருத்துவம் செய்து குணமாக்கினார்.

நெசவுத் தொழில்

நெசவுத்தொழிலில் ஆரம்பம் முதல் ஈடுபாடும், அனுபவமும் கொண்ட இவர் தர்மபுரியில் உள்ள நெசவாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த ஒரு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தை 12.01.1938-ல் நிறுவினார்.

பொறுப்பு/பதவி

சேலம் மாவட்ட காங்கிரஸ் கட்சி தலைவராகவும்,

தர்மபுரி தாலுக்கா காங்கிரஸ் கமிட்டி தலைவராகவும் ,

தமிழ்நாடு கைத்தறி சங்க துணைத் தலைவராகவும்,

ஊராட்சி ஒன்றிய துணைத் தலைவராகவும்,

1947-ல் தர்மபுரியில் மாவட்ட சித்த வைத்திய சங்கம் நிறுவி அதன் தலைவராகவும்,

சென்னை மாநில சித்த வைத்திய சங்கத்தின் கமிட்டி உறுப்பினராகவும்விளங்கினார்.

தியாகம், மறைவு

1928-ம் ஆண்டு டாக்டர் அன்சாரி தலைமையில் நடந்த காங்கிரஸ் மாநாட்டிற்கு கயிற்றுக் கட்டில்கள் வாங்கி அனுப்பியதில் இவருக்கு பெருத்த பொருள் இழப்பு ஏற்பட்டது. ஆயினும் அதற்காக வருந்தவில்லை . தருமபுரியின் வளர்ச்சிக்காக பாடுப்பட்டது மட்டுமல்லாமல் தன்னுடைய சொந்த நிலத்தை பேருந்து நிலையம் மற்றும் பூங்கா அமைக்க தானம் கொடுத்தார். நாட்டின் விடுதலைக்காகவே தமது உடல், உழைப்பு, உயிர் அனைத்தையும் அளித்து தான் பெரிய நிலச்சுவான்தாராய் இருந்தும் தன் சொத்துகளை எல்லாம் நாட்டின் விடுதலை சேவைக்காக செலவு செய்து இவர் 03.03.1953-ல் ஏழ்மையிலேயே இறந்தார்.

நினைவுச் சின்னங்கள்

தர்மபுரி நெசவாளர் காலனியிலும், தர்மபுரியை அடுத்த அன்னசாகரத்திலும் இவரது சிலை நிறுவப்பட்டுள்ளது.

தர்மபுரியையடுத்த அன்னசாகரத்தில் ஒரு தெருவுக்கும், சேலம் அம்மாபேட்டையிலும், தர்மபுரி குமாரசாமிபேட்டையிலும் தலா ஒரு சாலைக்கு தியாகி தீர்த்தகிரியார் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

தர்மபுரி நகரின் தற்போதைய நகர பேருந்து நிலையம் தியாகி தீர்த்தகிரியார் திடலாக விளங்கியது. இந்நிலையில் நகர பேருந்து நிலையத்திற்கு தியாகி தீர்த்தகிரியார் பெயர் வைக்க நகர மன்றம் முடிவு செய்துள்ளது. மேலும், தருமபுரி பேருந்து நிலையத்தில் தீர்த்தகிரியார் சிலை அமைக்க 02.07.2017-ன்று தருமபுரி மாவட்ட பாட்டாளி மக்கள் கட்சியின் (பா.ம.க) செயற்குழுவில் வலியுறுத்தி தர்மபுரி கலெக்டர் அலுவலகத்தில் மனு கொடுக்கப்பட்டது

தர்மபுரியை அடுத்த அன்னசாகரத்தில் தியாகி தீர்த்தகிரியாரின் நினைவகம் உள்ளது.

1977-ல் தர்மபுரி பாரதிபுரத்தில் 'தியாகி தீர்த்தகிரியார் தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம்' தொடங்கப் பட்டது.



# தமிழ் நடிகர் தகூஷின் விஜய் மலையாளத்தில் வில்லனாக அறிமுகமாகும் 'இத்திக்கர கொம்பன்'




திரைப்படங்களில் விலங்குகள் பங்கேற்கும் கதைகள், விலங்குகளை மையப்படுத்திய கதைகள் குழந்தைகளைக் கவரும் வகையில் அமைந்து பெரிய வெற்றிப் படங்களாக மாறி இருக்கின்றன.அவை மொழியைக் கடந்து மனங்களைக் கவரும்.

அந்த வகையில்'இத்திக்கர கொம்பன்' என்கிற மலையாளப்படம் உருவாகி வருகிறது. தமிழில் மொழிமாற்றம் செய்து வெளியாக உள்ளது.

இப்படத்தில் சாது என்கிற ஒரு யானை பிரதான பாத்திரத்தில் நடித்துள்ளது.அந்த யானைக்குக் கதையில் உள்ள இடமும் காட்சிகளும் குழந்தைகள் மனதைக் கவரும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன. இப்படத்தை ஸ்ரீலட்சுமி சினி புரொடக்ஷன்ஸ் சார்பில் ராஜன் பாப்பன், ஸ்ரீலா வடகரா தயாரித்துள்ளனர்

மலையாளத்தில் அறிமுகமான நடிகர்களான டினி டோம், டோனி, கரீனா குறுப்பு, கேசு , சுமேஷ், ஸ்ரீஜா போன்ற நடிப்புக் கலைஞர்கள் முக்கியமான கதாபாத்திரங்களை ஏற்று நடித்துள்ளனர்.

இப்படத்தில் வில்லனாக தமிழ் நடிகர் தகூஷின் விஜய் மலையாளத்தில் அறிமுகமாகிறார்.அவர் தூத்துக்குடி செல்வம் என்கிற கதாபாத்திரத்தில் மிரட்டும் தோற்றத்தில் வருகிறார். அசர வைக்கும் நடிப்பிலும் மிரள வைக்கும் சண்டைக் காட்சிகளிலும் முத்திரை பதித்திருக்கிறார்.

படத்திற்குத் திரைக்கதை எழுதி இயக்கியுள்ளார் கே. ராஜு. இவர் பிரபல இயக்குநர் கிருஷ்ணசுவாமியிடம் துணை இயக்குநராகப் பணியாற்றியவர். இந்தப் படத்தின் மூலம் இயக்குநராக அறிமுகமாகிறார்.

இப்படத்திற்கு பினீஷ் பாலகிருஷ்ணன் – சீனு வயநாடு ஆகியோர் இசை அமைத்திருக்கிறார்கள்.

வீ.கே . பிரதீப் ஒளிப்பதிவு செய்துள்ளார். யானை தோன்றும் காட்சிகளை அற்புதமாகப் படம் பிடித்துள்ளார்.

சாபு இரன்மல கலை இயக்கத்தையும், ஜான்சன் தாமஸ் படத்தொகுப்பையும் கவனித்துள்ளனர்.சண்டைக் காட்சிகளை ஆக்சன் அஷ்ரப் குருக்கள் அமைத்துள்ளார்.

படப்பிடிப்பு நிறைவடைந்துள்ள நிலையில் படப்பிடிப்பிற்குப் பிந்தைய மெருகேற்றும் பணிகள் நடந்து வருகின்றன. ஒரு விறுவிறுப்பான கதையுடன், குழந்தைகளைக் கவரும்படியான, குடும்பத்தினருடன் பார்க்கும்படியான ஒரு திரைப்படமாக இந்த 'இத்திக்கர கொம்பன்' படம் உருவாகி வருகிறது.

# மோகன்லால் மூலம் கிடைத்த நல்வாழ்க்கை டப்பிங் டைரக்டர் ஆர்.பி.பாலா மகிழ்ச்சி



"நான் இன்று நல்லதொரு வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருப்பதற்கும் இங்கே உங்கள் முன் பேசுவதற்கும் காரணமாக இருப்பவர் மோகன்லால் சார் தான். அவரது 'புலி முருகன்' படத்தில் தான் நான் முதலில் தமிழில் மொழியாக்கம் பொறுப்பை ஏற்றுப் பணியாற்றினேன்.

அந்தப் படம் மலையாளத்தில் பிரமாதமான வெற்றி பெற்றது. தமிழிலும் பேசப்பட்டது .எனது வாழ்க்கையை புலி முருகனுக்கு முன், புலி முருகனுக்குப் பின் என்று இரண்டாகப் பிரித்துப் பார்க்கும் அளவுக்கு எனது வாழ்க்கையில் பெரிய திருப்பு முனையாக அமைந்தது அந்தப் படம் .

**மோகன்லால் சார் நடிப்பில் இப்போது வந்துள்ள**

'எம்புரான்' படத்தை பிருத்திவிராஜ் சார் இயக்கி உள்ளார். அவர்கள் கூட்டணியில் ஏற்கெனவே உருவான ' லூசிஃபர்' படத்திலும் நான் பணியாற்றினேன். அந்தப் படத்தில் பணியாற்றிய போது எனது தமிழ் மொழியாக்க, டப்பிங் பணிகள் பற்றிக் கருத்து கேட்பதற்காகச் சில காட்சிகளைப் பார்க்க முடியுமா என்று கேட்டேன். பணிகளில் பரபரப்பாக அவர் பிஸியாக இருந்ததால் முதலில் தயங்கினார். சில நிமிடங்கள் மட்டும் பார்ப்பார் என்று நினைத்தேன்.ஆனால் அவரோ பாதி படத்தையே பார்த்துவிட்டார். அவருக்குப் பிடித்து நிறைவாக இருந்தது, பாராட்டினார், லூசிஃபர் பெரிய வெற்றி பெற்றது. அவர் எனக்கு இந்த எம்புரான் படத்தில் வாய்ப்பு அளித்துள்ளார்.அவருக்கு என் நன்றி.

படத்தின் இயக்குநர் பிருத்திவிராஜ் பேசும்போது இந்த படத்தை அந்தந்த மொழிகளில் அந்தந்த மொழிப் படமாகவே பார்த்து ரசியுங்கள் என்று கூறியிருந்தார்.அதற்கு ஏற்ற வகையில் தான் அனைத்து மொழிகளிலும் மொழியாக்கம் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளது. எம்புரான் படத்தைப் பார்த்த மக்கள் இந்தப் படம் மலையாளத்தில் எடுத்து தமிழில் டப் செய்தார்களா அல்லது தமிழிலேயே எடுத்தார்களா என்று வியக்கும் அளவிற்கு படம் அமைந்துள்ளது.

'ஆர்பி பாலாவின் தமிழ் வசனங்கள் அந்தக் கதாபாத்திரங்கள் பேசும் பொழுது மிகவும் கச்சிதமாக அமைக்கப்பட்டிருக்கின்றன'

என்று ஊடகத்துறையினர் பாராட்டியது எனக்குக் கிடைத்த மிகப்பெரிய மகிழ்ச்சி.விருதுகளை விட சிறந்தது மக்களின் பாராட்டுதான்.அது எனக்குக் கிடைத்து வருகிறது.

எம்புரான் படத்தில் தமிழ், ஹிந்தி, தெலுங்கு, கன்னடம் நான்கு மொழிகளிலும் டப்பிங் பணியாற்றி இருப்பது ஒரு பெருமையான அனுபவம். இது ஒரு பிரமாண்டமான படம். நிச்சயமாக பெரிய அளவில் வெற்றி பெறும். என் வாழ்க்கையையே திசை மாற்றிய மோகன்லால் சாருக்கு மீண்டும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்" இவ்வாறு ஆர்.பி .பாலா கூறினார்.

# சிபி சத்யராஜ் நடித்த Ten Hours படத்தின் செகண்ட் டிரெய்லர் வெளியீடு




சிபி சத்யராஜ் தற்பொழுது டென் ஹவர்ஸ் திரைப்படத்தில் நடித்துள்ளார். இப்படத்தை அறிமுக இயக்குநரான இளையராஜா கலியபெருமாள் இயக்கியுள்ளார்.

அண்மையில் வெளியாகி மக்கள் கவனத்தை பெற்றது. இப்படம் ஒரு பஸ்ஸில் நடந்த கொலை சம்பவத்தை மையப்படுத்தி உருவாகியுள்ளது. ஓர் இரவில் அதை கண்டுபிடிக்கும் கதாநாயகன்.

இந்நிலையில் திரைப்படத்தின் இரண்டாம் டிரெய்லரை படக்குழு வெளியிட்டுள்ளது. திரைப்படம் வரும் ஏப்ரல் மாதம் 18 ஆம் தேதி வெளியாக இருக்கிறது. விஜய் சேதுபதியின் குரலில் டிரெய்லர் காட்சிகள் தொடங்குகிறது.

படத்தின் இசையை கே எஸ் சுந்தரமூர்த்தி மேற்கொண்டுள்ளார். ஒளிப்பதிவு -ஜெய் கார்த்திக் செய்துள்ளார். டுவின் ஸ்டுடியோஸ் தயாரித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இப்படத்தின் டிரெய்லர்



நடிகை அதுல்யா ரவியின் ஹோம்லி லுக்கிற்கு அதிகம் ரசிகர்கள் இருக்கிறார்கள். தற்போது அவரது லேட்டஸ்ட் போட்டோஷூட் ஸ்டில்கள் ரசிகர்களை கவர்ந்து வருகிறது.

# ஹரிஷ் கல்யாண் நடித்த 'டீசல்' படக்குழுவை பாராட்டிய வெற்றி மாறன்



'பார்க்கிங்', 'லப்பர் பந்து' என தனது அடுத்தடுத்த ஹிட் படங்களை கொடுத்து வருபவர் நடிகர் ஹரிஷ் கல்யாண். துவக்கம் முதலே வித்தியாசமான கதையம்சம் கொண்ட படங்களில் நடித்து வரும் ஹரிஷ் கல்யாண் தற்போது 'டீசல்' என்ற படத்தில் நடித்துள்ளார்.

இந்தப் படத்தின் முதல் பாடல் 'பீர் சாங்' ரசிகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றது. மேலும், இந்தப் பாடல் படத்தின் மீதான எதிர்பார்ப்பை அதிகப்படுத்தி இருக்கிறது. ஹரிஷ் கல்யாண் திரைப்பயணத்தில் அதிக பட்ஜெட்டில் உருவான படம் 'டீசல்' என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தப் படத்தின் முதல் பாடலை தொடர்ந்து இரண்டாவது பாடலான தில்லுபரு ஆஜா பாடலை சமீபத்தில் படக்குழு வெளியிட்டது. இப்பாடலை நடிகர் சிலம்பரசன் மற்றும் ஸ்வேதா மோகன் பாடியுள்ளனர். இப்பாடல் மிகவும் வைபாகவும் குத்து பாடலாக அமைந்துள்ளது. இப்பாடலின் வரிகளை ரோகேஷ் மற்றும் ஜிகேபி எழுதியுள்ளனர்.

இந்த நிலையில் டீசல் படத்தை இயக்குனர் வெற்றி மாறன் சமீபத்தில் பார்த்து படக்குழுவை பாராட்டியதாக தகவல் வெளியாகியுள்ளது. இதனால் இப்படமும் மிகப்பெரிய வெற்றி திரைப்படமாக அமையும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

டீசல் திரைப்படத்தை சண்முகம் முத்துசாமி இயக்கியுள்ளார். சான் லோகேஷ் படத்தொகுப்பை மேற்கொண்டுள்ளார். திரைப்படம் விரைவில் வெளியாகும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

# விரைவில் வெளியாகும் வடிவேலு - ஃபகத் நடித்த 'மாரீசன்'




மாரிசெல்வராஜ் இயக்கத்தில் வெளியான 'மாமன்னன்' படத்தின் வெற்றிக்கு பிறகு நடிகர் வடிவேலு மாரீசன் படத்தில் நடித்துள்ளார். மலையாளஇயக்குனர் சுதீஷ் சங்கர் இயக்கும் இந்த படத்தில் வடிவேலுவுடன் பகத் பாசில் முக்கிய கதாப்பாத்திரத்தில் நடிக்கிறார்.

தமிழ் திரையுலகில் முன்னணி தயாரிப்பு நிறுவனமான சூப்பர் குட் ஃபிலிம்ஸின் 98-வது படமான இந்த படத்திற்கு யுவன் சங்கர் ராஜா இசையமைக்கிறார். முழுக்க முழுக்க காமெடி காட்சிகளை கொண்டிருக்கும் இப்படத்திற்கு கலைசெல்வன் சிவாஜி ஒளிப்பதிவு செய்ய ஸ்ரீஜித் சாரங் படத்தொகுப்பு பணிகளை கவனிக்கிறார்.

இந்நிலையில் படக்குழு புது போஸ்டர் ஒன்றை வெளியிட்டுள்ளனர். அதில் திரைப்படம் ஜூலை மாதம் திரையரங்கில் வெளியாக இருப்பதாக அறிவித்துள்ளனர். அந்த போஸ்டரில் ஃபகத் ஃபாசில் மற்றும் வடிவேலு முகத்தில் ரத்த காயங்களுடன் ஒருவரை ஒருவர் முறைத்து பார்த்தபடி இருக்கின்றனர்.

# 'கேங்கர்ஸ்' படத்தின் டிரெய்லர் ரிலீஸ்




நீண்ட இடைவேளைக்குப் பிறகு இயக்குனர் சுந்தர் சி மற்றும் காமெடி நடிகர் வடிவேலு கேங்கர்ஸ் என்ற திரைப்படத்தின் மூலம் இணைந்துள்ளனர்.

சுந்தர் சி மற்றும் வடிவேலு கூட்டணி மிகப்பெரிய சக்சஸ் கூட்டணி என்று கோலிவுட் திரையுலகில் கூறப்பட்ட நிலையில் இருவருக்கும் ஏற்பட்ட சில கருத்து வேறுபாடு காரணமாக பல ஆண்டுகளாக இருவரும் திரைப்படத்தில் இணையாமல் இருந்தனர்.

15 வருடங்களுக்குப் பிறகு இணையும் சுந்தர் சி மற்றும் வடிவேலு காமெடி கூட்டணி ரசிகர்கள் ரசிக்கும் வகையில் இருக்கும் என்றும் கைப்புள்ள, வீரபாகு மாதிரி சிங்காரம் என்ற கேரக்டரில் கேங்கர்ஸ் படத்தில் வடிவேலு நடித்து இருப்பதாகவும் செய்திகள் வெளியானது.

இந்நிலையில் கேங்கர்ஸ் திரைப்படம் ஏப்ரல் 24ம் தேதி வெளியாக இருக்கிறது. இந்நிலையில் படத்தின் டிரெய்லரை நாளை வெளியிடப்போவதாக படக்குழு போஸ்டர் வெளியிட்டு அறிவித்துள்ளனர்.



VASTU SHASTRA
CONSULTATION
உங்கள் இருப்பிடத்தின் மூலம் பொருளாதாரம், மன நிம்மதி, வியாபார வளர்ச்சி, ஆரோக்கியம் மேம்பட உங்கள் சொந்த வீடு, வாடகை வீடு, மனை, கடை, அலுவலகம், தொழிற்சாலை மற்றும் புது வீடு கட்டவும், புதுமனை வாங்கவும் அனைத்திற்கும் வாஸ்து சாஸ்த்திரபடி சிறந்த முறையில் ஆலோசனை வழங்கி, எளிய முறையில் அனைத்து வாஸ்து பரிகாரங்களும் செய்யப்படும்.
வாஸ்த்து நிபுனர்
வாஸ்த்து பாலாஜி
-:தொடர்புக்கு:-
80727 28883 / 95433 96637
குடியிருக்க வீடு வாஸ்த்து சாஸ்த்திரப்படி நல்ல படியாக அமைத்தால் அந்த வீடு கோயிலாகும்! அந்த வீட்டில் இறைவனும் குடி கொள்வார்!


எம்.சாஜித்
Cell: 99529 48097
86103 69634
மேக்ஸ்
கால் பராமரிப்பு
தோல் காலணிகள்
தோல் செருப்புகள்
தோல் பொருட்கள்
மொத்த மற்றும் சில்லறை விற்பனை
:044-4323 5591
எண்.150, வேப்பேரி உயர் சாலை,
பெரியமேட், சென்னை - 600 003.


6380139263
9952007563
9940010279
GERMANSILVER.RR
RATNARAJSILVER.COM
RAJ&RAJ
GERMANSILVER /
POOJA ITEMS RETURNGIFTS/
WEDDING GIFTS /HOME NEEDS


VIP Call 9443782573 VIP CITY
DON'T MISS THE GREATEST OF ALL TIME OPPORTUNITY
OWN PREMIUM PLOTS IN COIMBATORE AT AN ATTRACTIVE PRICE!
CITYSCAPE PREMIUM VILLA PLOTS
SULUR, COIMBATORE
1400 SQ.FT TO 2700 SQ.FT
VILLA PLOTS STARTING FROM ₹12 LAKHS ONWARDS
NEW TOWN PREMIUM VILLA PLOTS
APPANAICKENPATTI, COIMBATORE
513 SQ.FT TO 1677 SQ.FT
VILLA PLOTS STARTING FROM ₹12 LAKHS ONWARDS
VIP's FINE ASSETS PREMIUM VILLA PLOTS
KADAMPADI, COIMBATORE
513 SQ.FT TO 1677 SQ.FT
VILLA PLOTS STARTING FROM ₹16 LAKHS ONWARDS
PARK TOWN
CHETTIPALAYAM, COIMBATORE
600 SQ.FT TO 1860 SQ.FT
VILLA PLOTS STARTING FROM ₹16 LAKHS ONWARDS
Star Breeze PREMIUM VILLA PLOTS
KOVILPALAYAM, COIMBATORE
600 SQ.FT TO 2700 SQ.FT
VILLA PLOTS STARTING FROM ₹17 LAKHS ONWARDS
VIP's cosmo square
EACHANARI, COIMBATORE
600 SQ.FT TO 2400 SQ.FT
PRICE STARTING FROM ₹25 LAKHS PER PLOT


Mahipal Jain
+91 89395 74836
+91 44477 60158
fabricstudio4@gmail.com
fabricstudio4
PRESIDENT
THE MENS FABRICS
15/55, Elephant Gate Street,Chennai - 600 079.


ROYAL GARMENTS
044-4210 5041
988430 5041
988458 2270
Wholesale Dealers in :
Banian, Jutty, Mat, Towels, Lungies Etc.,
#6/18 Rajagopal Street, Opp to Police Quarters,
(M.C.Road) Old Washermenpet, Chennai - 21.


Manjal Mart
SOMETHING FOR EVERY FAMILY
எந்தவித கலப்படமும் இல்லாத தரமான மஞ்சள், குங்குமம், விபூதி, சந்தனம், ஜவ்வாது, விற்பனைக்கு உள்ளது
www.manjalmart.com


MODERN HOUSE FOR SALE IN KOVILPATTI
சுபா நகர்
50 லட்சம்
வடக்கு வாசல்
CONTACT US
6380603606


SOFTWARE / WEBSITE
IN USDT
COLOR PREDICTION GAME
Join Violet
Join Red
Join Green
9853719337, 7436914247



M.SAJID
Cell: 99529 48097
86103 69634
Max Feet Care
Leather Shoes
Leather Sandals
Leather Goods
Wholesale & Retail
:044-4323 5591
No. 150, Vepery High Road,
Periyamet, Chennai - 600 003.


MLM PERFECT
MLM SOFTWARE DEVELOPMENT
IN EMI @RS.999
MLM Software in Monthly EMI (EASY INSTALLMENT @ RS.999/- onwards.
•Product Base MLM Software
•Investment Plan MLM Software
•Cryptocurrency Services
•Cryptocurrency MLM Software
PRODUCT BASE
INVESTMENT PLAN
CRYPTOCURRENCY
CONTACT US www.mlmperfect.com
98537 19337
74369 14247


• ஏழாயிரம்பண்ணை ரோடு
• பழைய அப்பனேரி
• 14 பிளாட்
LAND FOR SALE
IN KOVILPATTI
BOOK NOW
6380603606


Wanted
SECRETARY FOR A DOCTOR
Clinic Located at:
MADIPAKKAM
JOB TIMING
WEEKDAYS -4 pm to 9 pm
SUNDAY -10 am to 2 pm.
Contact: 9884447865


UBS BRIDAL STUDIO
7449094713
7358096233
Stitching &Sales
All Ladies Wear Stitching
UBS
BRIDAL STUDIO
u_b_s_bridal_studio
No.8, Rainbow Complex
Chinna Naickam Street,
Sowcarpet Chennai -79


Sanjay
Cell: 90032 64920
Real Choice
Retail & Wholesale Dealers In: Designer Sarees, Chudidhar, Laganga, Choli & Wedding Collection
#361, Mint Street, (Opp. New Jain Temple)
Sowcarpet, Chennai-600 079.
Real Choice Chennai
Real Choice Chennai
Real Choice Chennai


வரி விளம்பரம் பகுதியில் உங்கள் விளம்பரங்களை பிரசுரித்து
உங்கள் வியாபாரத்தை பெருக்குங்கள்
₹299-க்கு
சிறப்பு சலுகையில் உங்கள் விளம்பரங்களை தரமாக வெளியிடுகிறோம்.
மேலும் விபரங்களுக்கு...
cell: 8122664699




### கணக்கும் கணக்கு !!

கணக்கு என்றால்
கணக்கத்தான் செய்யும்
பிணக்கு ஏற்பட கணக்கேக்
காரணம் !!

வீட்டிலும் கணக்கு
விளைத்திடும் கலவரம்
நாட்டிலும் கணக்கால்
நடந்ததே கலவரம் !!

கள்ளக் கணக்கை காட்டாதக்
கணக்கர்
உள்ளக் கணக்கை உள்ளபடி
எழுதுவார் !!

பாதகம் செய்வோர் பெறுவர்
பாவக்கணக்கு
மாதவம் செய்தாலும் தீராக்
கணக்கு !!

பாவக் கணக்கு பலவேதனை
கொடுக்கும்

பாவம் தவிர்த்தால் மனநிறைவு
கிடைக்கும் !!
பாவக் கணக்கைப் " பார்த்தன்
" முடித்தான்
பாரதப் போரின் பாங்கும்
அதுதான் !!

பாவிகள் கொடுமை பாரதம்
சொன்னது
பாவத்தின் சம்பளம் மரணம்
என்றது !!

அறப்பிழைக் கணக்கை
அறமே முடிக்கும்
திறந்த ஆட்சிப்பிழையை
அதுவே உணர்த்தும் !!

இக்கால மனிதரின் பாவத்தின்
கணக்கை
முக்காலம் நிலைக்கும்
கருடபுராணம் உரைக்கும் !!

**சண்முக சுப்பிரமணியன்**
திருநெல்வேலி.

---

அதெப்படியடி?!
உன் புன்னகைகளில் மட்டும்
எப்பொழுதும்
அழகழகான
கவிதைகள்
உட்கார்ந்திருக்கிறது!

**முத்து ஆனந்த்**
வேலூர்

---

### ஒன்றே ஒன்று தான் இலக்கு

"   பிரிந்து இடம்
கொடுத்து அழிந்து சிதறி
கூக்குரல் இடுவதை விட

"  சாதி மதம் இனம் என்று
பிரிந்து கிடந்தது போதும் ...."

புதுப்புது நோய் வைரஸ்
புத்துணர்ச்சிபெற்று திரும்பும்
வேளையில்

பிரிவினை என்பதை
அழிவினை என்று
கருதி வேறுத்து

ஒற்றுமை இணைப்பு
அணைப்பு மனங்களின்
சங்கமம் என்று  கொண்டு ...

மனித உயிர்களை
துச்சமென நினைத்து
இரத்தம் குடித்து

மனம் குளிரும்
தொற்று நோய் கிருமிகளை
சுத்தம் சுகாதாரம்
பாதுகாப்பு என
விழித்து இருந்து ...

விரட்டுவோம் எல்லை
இல்லா இடம் தேடி
அது வரை

மனித இனம் ஒன்று
மனிதநேயம் ஒன்று
மனித சுவாசம் ஒன்று

என்று ஒரு குடையின்
கீழ் மனித இனம்
அணிவகுத்து ....

விழித்து இருந்து விலகி
இருந்து வீட்டில் இருந்து

சாதிப்போம் சாவை
தவிர்ப்போம்  சந்திப்போம்
சிந்திப்போம் ....

**ஆர். சீதாராமன்**, சீர்காழி .

---

### சுற்றுலா!
(நிலைமண்டில ஆசிரியப்பா)

பொழுது போக்குப்
பொலிவாய் விளங்கும்
அழகாய் வரலாற்றை
அன்பா யறியலாம்!

மகிழ்வும் மாண்பும்
மணியாய்க் கிட்டும்
தகவுக் காட்சிகள்
தானாய்க் கிட்டும்!

அருவி யாறு
குளங்க ளெல்லாம்
விரும்பிக் காண
விழைவு ஏற்படும்!

முன்னோர் கட்டிய
மேன்மை அணைகள்
பின்னோர் பார்த்து
மகிழ வுதவும்!

கொள்ளை யின்பம்
குலவுக் கவிதையாய்



உள்ளம்
மகிழும்
உன்னதச்
சுற்றுலாவே!

**முனைவர் இராம. வேதநாயகம்.**

---

### "நாளும் ஒரு குறள்"

அகர முதல எழுத்தெல்லாம்
ஆதி பகவன் முதற்றே
உலகு:

குறள்–1.
ஆதி சிவனும் அகரம்
முதலாகி மேதினியில்
என்றென்றும் மேன்மையில்–
சோதியாய் பாந்தமாய்



நாளும்
பயனை
அளித்திடும்
தீந்தமிழைப்
போற்றிடல்
தேர்:

**கு.கணேசன்**

---

நான் உன் எதிரே
வரும்போதெல்லாம்
வழி விட்டு வழி விட்டு
ஒதுங்குகிறாய்!
உன்னைத் தாண்டிச்



சென்று
விடுமா
என்ன?!
என் கா த ல்!

**முத்து ஆனந்த்**
வேலூர்

---

### துளிப்பாக்கள்

அவசரப் பயணம்
திடீர் பிரசவம்
கவிதைக்குழந்தை

அமைதி அச்சுறுத்தியது
நிலநடுக்கம்
வாய்பிளந்தது பூமி

புதையுண்ட நகரங்கள்
எண்ணற்ற ஏக்கரில்
பாலைமனங்கள்

சுரண்டிகளின்கூடாரம்
அரசியலில் ஆணி
ஆன்மீக சட்டம்

பதவியாசை
நாய்களின் தேடல்
சிம்மாசனமாவது?...

தேசம் கல்லறையில்
கடன்கள் சிலுவையில்
உயிர்ப்பித்தல்எப்போது?

சைவர்கள் மாநாடு
அன்னதானம்
மாமிச குணங்கள்

சண்டைகளில்லை
கணவன் மனைவி
விவாகரத்து

கைகளுக்குள்
விண்மீன்கள்
கவிதை முத்துக்கள்



என்னை
இரண்டாக்கி
னேன்
ஒன்று மனைவி
மற்றொன்று
குழந்தை

**கலியுகன்**
சென்னை

---



### மிதிவண்டித் தடம்...

முருங்கக்கா, மல்லியிலை
என்று கூவி அவற்றை
மட்டுமே மிதிவண்டியில்
விற்றுப் போகும்
அவளின் வயிற்றுப்பசி
எவ்வாறு தீர்ந்திடுமென
அடிக்கடித் தோன்றிடு
மெனக்கு.  கொசுறாக
கிடைக்கும் மல்லியிலையும்
பத்து ரூவாய்க்கு மூன்றுமாய்
விற்கும் முருங்கைக்காயும்
தவிர மனமென்ற ஒன்று



படர்ந்
திருக்கிறது
அவளிடம்
மிதிவண்டித்
தடம் போல..

**தாணப்பன் கதிர்**

---

உயிர் இருக்கும்வரை...
கட்டாந்தறையில்... !.
உயிர் போனபின்...
உயர்தர டைல்ஸ் பதித்து
கல்லறை கட்டி...
தன் அன்பை
வெளிக்காட்டினான்
மகன் !

தரையில் விழுந்த பூ தான்....
ஆனால்.... அது உன்
தலைமுடியில் இருந்து
விழுந்த பூ என்பதால் என்
பாக்கெட்டில்
பத்திரபடுத்தினேன்...



பரவசம்
பரவியது...
என்
உடலெங்கும்...

**எம். பி.தினேஷ்**
கோவை

---

### வினைக் காற்று

நிலவாய் மலர்ந்திட வரம்
கேட்டு நின்றேன்; தேய்வாய்
எனச் சொன்னார்!

நினைவாய் இருந்திட மனம்
கேட்டு நிஜமாய் இருந்திட
எவர் சொன்னார்?

மலராய் மலர்ந்திட நிறம்
கேட்டு மகிழ்ந்தேன்;
உதிர்வாய்
எனச் சொன்னார்!

மணமாய் முகர்ந்திட
மறுதலித்து மயக்கம்
களைந்திட ஏன் சொன்னார்?

அழகாய் பிறந்திடும்
கதிர் பார்த்து
அன்பாய் உருகிய
பனித்துளியாய்....



விலகாதிருந்த
விதிப்பயனாய்
விடியட்டும்; முடியட்டும்
வினைக்  காற்று!

**வெ. தமிழழகன்**
எம்ஏ. பிஎட்
சேலம்

---

### தானம் உன் தலைமுறையை காக்கும்

மண்ணில் மரம் வரும்
கல்லிலும் மரம் வரும்
மனிதன் நடந்த தடத்தில் புல்
கூட வராது...!

இயற்கையை
சேதப்படுத்தாமல் உணவை
சேர்க்கும் விலங்கினம்...!

இயற்கையை
சேதப்படுத்தியே சொத்து
சேர்ப்பவனே மனித இனம்....!

பணத்தை தின்ன முடியுமா...
உணவு உண்ணாமல்  வாழ
முடியுமா...

ஏழையிடம் மதிப்பை காட்டு...
கோழையிடம் அன்பை
காட்டு...
மனிதம் இருப்பதை
வாழ்க்கையில் காட்டு...

உதவி மக்களை காக்கும்...



பதவி உன்னை
காக்கும்...!!

**பொன். கருணா**
நவி மும்பை

---



### என்ன தவம் செய்தனை ..!

என்ன தவம் செய்தனை
கிளியே.. வண்ணமாய்
வடிவாய்ச் சிறகினைக்
கொண்டனை!
பெண்ணாய் நானோ
பறந்திடவழியில்லை!
மண்ணில் மடமைச்
சிறைக்குள் நானே!
உன்னைப் போலே
சுதந்திரம் வேண்டும்!
உலகை நானும் வலம்வர
வேண்டும்!
சிறகுகள் விரித்தே வானில்
பறக்க வரமது வேண்டும்
தவமின்றி எனக்கே!

**மணிமேகலை**, ஒசூர்

---

### சிறகடிக்க ஆசை

பரந்த நீல வானத்தில்
விரிந்து பறக்க ஆசை

பாரமில்லா மனத்தோடு
தூரப் பறக்க ஆசை

இதயத்தில் ஈரத்தோடு
இமயம் தொட ஆசை

காற்றுக்கு வலிக்காது
நீருக்கு வேர்க்காது
நிலவில் பறக்க ஆசை

எல்லையில்லா
நிலத்தில் எல்லோரும்
நேசிக்க எங்கும் இன்ப
ஊற்றாகி சிறகை விரிக்க
ஆசை

வஞ்சமில்லா மானிடரும்
கொஞ்சு தமிழ்
பேசி வர நெருப்புக்கும்
குளிர் வந்து நேசத்தை
உமிழ்ந்து விடும்

சீரான சிந்தனையில்
நேரான பாதை சென்று
யாருக்கும் அஞ்சாமல்
சிறகுக்கு வலிக்காமல்
ஊரெங்கும் போக வேண்டும்



நம்பிக்கை
துணையாகி
நாடெல்லாம்
பறக்க
வேண்டும்.

**தமிழ்நிலா**

---

### பெண்ணடிமைத் தளையுடைப்போம் !

ஆண்டுகள்தாம் ஆயிரங்கள் இரண்டு சென்றும்
அருங்குறளின் பிறப்பொக்கும் என்ற சொல்லோ
ஈண்டின்னும் பொருளின்றி உள்ள திங்கே
இருபாலின் ஏற்றதாழ்வு மறைய வில்லை !
மாண்டுவிட வில்லையின்னும் மனைவி யிங்கே
மணவாளன் கீழ்என்னும் அடிமை யெண்ணம்
ஆண்கள்தம் ஆதிக்க ஆண வத்தின்
ஆட்சிக்குள் வதைப்பட்டே குமைகின் றார்கள் !

அடுப்பறைகள் பெண்களுக்கே பட்டா வாக
அன்றெழுதி வைத்ததின்றும் மாற வில்லை
விடுமுறையே இல்லாமல் செய்ய வைத்த
வீட்டுவேலை விதிகளின்றும் மாற வில்லை !
உடுக்கின்ற உடைகளுக்கும் உரிமை யின்றி
உள்ளத்துள் குமுறுவதில் மாற்ற மில்லை
படுக்கையறைப் பொழுதன்றி வசைகள் பாட்டைப்
பகலெல்லாம் கேட்பதிலும் மாற்ற மில்லை !

படிக்கஅன்று விடவில்லை பழைமை மாறிப்
படிப்பதற்கு வாய்ப்பளித்துப் படித்த பின்பும்
அடிமையென்னும் எண்ணமின்றும் மாற வில்லை
அவள்கருத்தை வீட்டிலாரும் மதிப்ப தில்லை !
படித்துபட்டம் பெற்றுபணி ஆற்றும் போதும்
பலர்வணங்கும் பெரும்பதவி வகித்த போதும்
விடிவதற்குள் எழவேண்டும் கணவன் தூங்க
வீட்டிற்குள் தாதியாக உழைக்க வேண்டும் !

எதுவொன்றைச் சுயமாகச் செய்வ தற்கும்
எவ்வளவு படித்திருந்தும் உரிமை யில்லை
வதுவைக்குத் தட்சணையைக் கொடுப்ப தோடு
வந்தவர்கால் விழுவதிலும் மாற்ற மில்லை !



இதுபோன்ற இழிவுகட்கு முற்றுப் புள்ளி
இடுவதற்கே ஆண்திமிரைக் கொளுத்த
வேண்டும்
புதுமைப்பெண் பாரதியார் துணிவுப்
பெண்ணாய்ப்
பூவையர்கள் மாறினாலே மாறும் எல்லாம்!

**பாவலர் கருமலைத்தமிழாழன்**

---

### சுற்றுலா

கண்ணே..கனியமுதே..
செல்லமே..மணிமுத்தே!

உன் சின்ன வாய் திறந்து
ஒருபிடி சாதத்துடன் வீடு
முழுதும் வலம் வருவாயே!

வாயில் சாதத்துடன்
கண்ணா மூச்சி
விளையாட்டு வேறு!

அறைக்குள்
ஒளிவாய்!
கொல்லைப் பக்கம்
ஓடுவாய்!

மாடிக்கு ஏறி விடுவாய்!

நானும் தெரியாத மாதிரி
உன்னைப் பின் தொடர்ந்து
வருவேன்!

வாயை இறுக மூடிக்



கொண்டு வாசலுக்கும்
தோட்டத்துமாக ஓடி
உன்னை சுற்றிச் சுற்றி
வந்த சுற்றுலாவை எப்படி
மறப்பேன் என் தங்கமே!

**ராதாபாலு**

---

அவளும் மேகியும்
ஒன்று தான்
ஏனெனில்
இரண்டுமே
இனிமையானது தான்
ஆனால்
கையாள்வது தான்
கடினம்!

**லி.நௌஷாத் கான்**

---

### தளராதே தவிக்காதே

அனல் பறக்கும்
விவாதம் பொறி
தெறிக்கும் வேகம்
கடுமையான தாக்குதல் ...."

அரசியல் மேடை
அல்ல நான்கு
பக்கமும் சிதறி
ஓடும் கூட்டம் ...."

எந்த அனுமதியும்
பெற வில்லை யாருக்கும் அடி
பணியவும் இல்லை ..."

பதவியாளர் முதல்
பாமரன் வரை
சிதறி அடித்து
ஓட விடும்
தைரியம் ...."

சூரியனின் கடும் உக்கிரப்
பார்வை  தாகத்தை கூட்டும்
தாக்கம் ....."

வியர்வை நதியில்
குளிக்க வைக்கும்
சூடான தொழில் ...."

நெருப்பு பட்டால்
வெந்து விடும்
அனல் பறக்கும் சூடு பட்டால்
கருகிவிடும்..."

தேகத்தை
குளிர்ச்சியாக்கி
மனதை இதமாக்கி
பதமாக இருங்கள் ..."

கோடை அதனால்
நம் ஆடை தாண்டி ஜாடை
காட்டி வியர்வையால்
மேடை இறக்கும்
சோடையாகி  விட
வேண்டாம் .... "

**ஆர். சீதாராமன்**
சீர்காழி.

---

தோற்றுப் போய்
பல வருடங்கள்
ஆகியிருக்கும்
முப்பதுக்கு மேல்
திருமணமும் நடந்து
முடிந்திருக்கும்
அப்பா என  அழைக்கும்
திருமணத்திற்கு தயாராக
உள்ள மகனோ/மகளோ
கூட இருக்கக்கூடும்
கண்பார்வை குறைந்து
கண்ணாடி கூட
அணிந்திருக்கக்கூடும்
எல்லாம் கடந்த பின்பும்,
எதையும் கண்ட பின்பும்
எப்போதாவது
தினசரி நாளிதழ்களையோ,
பிடித்த கதைகளையோ
சுவாரஸ்யமாய்
புரட்டும் பொழுதுகளில்
உன்னுள்  உன்னை
அசைத்து பார்க்க
அந்த பொல்லாத காதல்
காலை தேநீராய்
அப்பப்ப உன்னை தேடி
வரும் தூய நரையிலும்
தூங்காமல் செய்திடும்



காலாவதி
யாகாத
தோற்றுப்
போன முதல்
காதல்!

**லி.நௌஷாத் கான்-**

---

### ஊருக்கு உழை

பூனைகள் புலியாக
வேண்டின்
எலிகளை மறந்தாக
வேண்டும்.
கனவுகள் நனவாக
வேண்டின்
கடும் உழைப்பு தினம்
வேண்டும்.
விண் மீன் மீதேற
வேண்டின்
விண்ணில் கலந்தாக
வேண்டும்.
ஊர்க் குருவி பருந்தாக
வேண்டின்
உடலை வலுவாக்க
வேண்டும்.
பார் புகழ பேர் வாங்க
வேண்டின்
ஊருக்கு மிக உழைத்திட
வேண்டும்.

**பாலகிருஷ்ணன். ஆர்.**
பொள்ளாச்சி.

---

# நூல் விமர்சனம்




**அறம் செய்யப் பழகு**
**நூல் : அறம் செய்யப் பழகு**
**விலை : 60**
**ஆசிரியர் : பிரியசகி.**

'அறம் செய்ய விரும்பு' என்றதும் நம் நினைவிற்கு வருவது ஔவை பாட்டி தான்.

'அறம் செய்யப் பழகு' என்றவர் நம் பிரியமான தோழி பிரியசகி.

''பிறரைக் காயப்படுத்தாமல் இருப்பதும் அறமே''

சிறுவயதிலிருந்தே நாம் , நம் பிள்ளைகளுக்கு விதைக்க வேண்டியவை சிறந்த சொற்கள் என்பதனை ஓர் உரையாடல் மூலம் எடுத்துக் கூறியுள்ளார். பொதுவாகவே, கூட்டுக்குடும்பமுறை குறைந்துவரும் இக்காலக்கட்டங்களில் ஒரு குடும்பமே உரையாடுவது போல் எழுதியுள்ளார்.

தாத்தா பாட்டிகளின் அறிவுரை கேட்டு வளரும் பிள்ளைகள் அறிவிலும் அன்பிலும் சிறந்து விளங்குவர். தாத்தா, ஓர் உளவியலாளராக இருந்தால் சொல்லவா வேண்டும்.

தன் மகன், மருமகள், பேரப்பிள்ளைகளுடன் உரைக்கும் உரையாடலில் ஒட்டு மொத்த அறத்தையும் கற்பித்துவிட்டார் நம் ஆசிரியர் .

பள்ளியில் படிக்கும், பிள்ளைகளில் எல்லோரும் ஒரே மாதிரியான பிள்ளைகள் அன்று . ஒவ்வொருவரும் படிப்பதில் மாறுபட்டவர்களே!

கற்றலில் சிறந்தவர்கள், பின் தங்கியவர்கள் , ஆட்டிசம், குறைபாடுடையவர்கள் என சொல்லிக்கொண்டே போகலாம் .

கற்றலில் பின் தங்கிய பிள்ளைகளை மற்ற மாணவர்கள் பார்க்கும் விதம் குறித்தும் ,அவர்களை நாம் எப்படி அரவணைக்க வேண்டும் என்பது குறித்தும் தன்ராஜ் தாத்தா அழகாக எடுத்துரைப்பார்.

மூன்றாம் பாலினத்தவர்கள் நம்மில் ஒருவரே ,அவர்களை வெறுத்து ஒதுக்காமல் குரோமோசோமில் ஏற்பட்ட குறைபாடு தான் அவர்களின் மாற்றத்திற்கான காரணம் என்று பிள்ளைகளுக்கு அறிவியல் உண்மைகளைக் கூறிய விதம் அற்புதம்.



பிள்ளைகள் ,பெரியவர்களைப் பார்த்தே வளர்கிறார்கள். பிள்ளைகள் முன் நல்லனவற்றையே பேச வேண்டும். நல்ல செயல்களையே செய்யவேண்டும் என்பதையும் இந்நூலின் மூல அழகாக எடுத்துக்காட்டியுள்ளார்.

பிள்ளைகளின் முன் பிறரைப் பற்றி பேசும் விதமே அவர்கள் மனதிலும் பதிந்துவிடுகிறது என்பதை எடுத்துக்காட்டிய விதம் அருமை .

"பாலின சமத்துவம் பேணுவோம்". இன்று ஆணுக்கு நிகராக பெண்களும் அனைத்து துறைகளிலும் சாதித்து வருகின்றனர். வீட்டில் உள்ள ஆண்கள் அவர்களை சமமாக நடத்தினால் போதுமானது, வேலை சுமைகளைக் குறைக்க வீட்டில் உள்ளவர்கள் உதவலாம் என்ற விதமும், மாதவிலக்கின் போது ஒதுக்கப்படாமல் அதன் அறிவியல் உண்மை அறிந்து உடலாலும் மனதாலும் சோர்வடைந்த பெண்களிடம் அன்பு காட்ட வேண்டும் என்ற விதமும் அனைவரிடத்திலும் மாற்றத்தைக் கொண்டுவரும் .

அன்பும், அரவணைப்பும், உதவும் நோக்கமும் குடும்பத்தில் இருந்தே தொடங்க வேண்டும் என்று அற்புதமாக எழுதியுள்ளார் . பெற்றோர், பிள்ளைகள் என அனைவரும் படிக்கும் வகையில் இந்த நூல் அமைந்துள்ளது .

"செயற்பால தோரும் அறனே ஒருவற்கு
உயற்பால தோரும் பழி"

என்ற வள்ளுவரின் குறளுக்கு ஏற்ப அறச்செயலை செய்து வாழ்வோம்.



# புதுக்கவிதை பகுதிகள்

## துளிர்க்கட்டும் நம்பிக்கை.!

உதைப்பந்தாய் வாழ்க்கை
என மனம் தளர வேண்டாம்..
.விட்டொழியுங்கள்
அவநம்பிக்கையை....
விட்டெறியுங்கள்
அவமானச்சகதியில்
பொதிந்த தனித்திறன்
விதைப்பந்துகளை....
விருட்சங்களாகி எங்கும்
வியாபிக்கட்டும் அனுபவ
அடவி.!

## தேர்ச்சி.!

தனது வலையில்
வீழ்ந்த இரையை
பக்குவப் படுத்துவதில்...
அரியள்ளி ஆக்கையில்
புணைந்து.. கோட்டடிக்கும்
உழவனின் லாவகத்தை
வெளிப்படுத்துகிறது..
சிலந்தி.!

**க.குமாரகுரு,**
மயிலாடுதுறை

---

என் இதழ்களின்
விளிம்பில்
புன்னகைகள் என்னும்
பெயரில்
என்ன அழகாய்
அமர்ந்திருக்கிறது
இந்தக் கவிதைகள்!

**முத்து ஆனந்த்**
வேலூர்

## மற(றை)ந்த விளையாட்டுகள்:

கோலி யாட்டம்
ஆடுவோம் குறிபார்த்தே
சேருகின்ற குழிபார்த்து
அடித்தே செல்லுவோம்
சேருமிடம் கருத்தாக
சிந்தையில் கொண்டாலே
நேருமெந்தன் வெற்றி
நிச்சய மாகவே!!

கோலி யாட்டம் .
ஆடுவோம் கூடவே
சோழி யாட்டம்
ஆடுவோம்.. எல்லாமே
எங்கள் எல்லார்க்கும்
மகிழ்ச்சி தந்திடும்!

ஆடுபுலி ஆட்டம்
அதிலெங்கள் நாட்டம்
கூடுவோம் நாங்கள்....
கொண்டாடி விளையாடும்
கும்மியும் ஆடுவோம்
நொண்டியும்
அடிப்போம்...

மறந்த விளையாட்டுகள்
விஞ்ஞான வளர்ச்சியில்



மறைந்த
விளையாட்டுகள்

ஆகிவிட்டது
துயரம்!

**வைரமணி**
சென்னை

## எப்படி?

உனக்கு ரோஜாப்பூ நிறம்
என்றாலும்உன் மீது
எப்பொழுதும்
மல்லிகை வாசம்தான்!
உன் மனசோ
வெண்முல்லை நிறம்!
இதெல்லாம் தெரிந்த பிறகு
நான் எப்படி உன்னைக்
கா த லி க் கா ம ல்
இருக்க முடியும்?!

**முத்து ஆனந்த்** வேலூர்

## ஒரு எல்கேஜி அழுகை

எல்கேஜீயில் சேர்த்து
பள்ளிக்கு முதல் நாள்
கை பிடித்து
அழைத்துச் செல்கையில்
சீருடை அணிந்து
சிரித்தபடி மகள் என்னவோ
சந்தோஷமாகத்தான்
என்னோடு கூட வந்தாள்.
பொத்திப்பொத்தி வளர்த்த
மூன்று வயது குழந்தையை
மூன்றாம் மனிதர்களிடம்
விட்டுவிட்டு வருகிறோமே
என்று மனம் கனத்து
நான் தான் கண்ணீருடன்
பள்ளியிலிருந்து
திரும்பினேன்.:-)

**சாஸ்தா**

## அன்னை என்றொரு தெய்வம்!

பாலோடு அன்பைக் கலந்து
பரிவோடு ஊட்டியவள்!
பாசம் காட்டுவதில் என்றும்
வேஷம் போடாதவள்!

பெற்றெடுத்த உன்னிடம்
நான் கற்றது ஏராளம்...
ஏராளம்! கற்றதை
பட்டியலிட்டால் அது
'குமரி'வரை நீளும்!

இன்று நான் தொட்ட உயரம்
இமயத்தின் வெற்றிச் சிகரம்!
அத்தனையும் உன்னால்தான்



என்ற
நினைவுகள்
நீங்காது
என்றும்!

**மு. மோகன்,**
வேலூர்.

## தோசை

கோபத்தில்
முறுக்கிக் கொள்ளும்
போதும்(கூட)
முறுகல் தோசையை
என்ன அழகாய்
வார்த்துத் தருகிறாய்
நீ! ரசித்து ருசித்துக்
Iqbal கொஞ்சமாய்
என்னுள் இறங்குகிறது
அழகிய கா த ல்!

என்ன அழகாய்ப் பார்க்கிறாய்
எத்தனை அழகாய்ச்
சிரிக்கிறாய்!
எவ்வளவு ஆசையாய்
முத்தமிடுகிறாய்
கொள்ளை அன்பாய்
அணைக்கிறாய்
இதற்காகவே உனக்கு
நீ அமர்ந்து வர
என் கவிதைகளால்
ஒரு பல்லக்கு செய்ய
வேண்டும் என்று ஆசையாக
இருக்கிறது!

எரிப்பது போல்
முறைக்கிறாய்!
உன் அனல் பார்வையில்
குழம்பி தயாரித்துக்
குடிக்கிறது என் மனம்!

**முத்து ஆனந்த்** வேலூர்

## சிட்டு குருவியே...

பாட்டன் காலத்தில்
படபடவென பறந்து வருவாய்,
பார்ப்பவர் பார்த்தால்
என்னவென்று,
கூரையில் கூடு கட்டி
குதூகலமாய்
வாழ்ந்துவிடுவாய்.

உன் இனம்பெருக்கி
இருந்த இடம் தெரியாமல்
பறந்து செல்வாய்.
ஆனால் இப்போது...
எங்கே போனாய்?

கூரைகளும் இல்லை,
கூவியே வலம் வரும் நீயும்
இல்லை. வேதனையோடு



தேடுகிறேன்,
வந்துவிடு...
மீண்டும்
எழுந்து...
சிட்டுக்குருவியே!

**யோகேஷ் சுப்ரமணியம்**

## மீள் சமயங்கள்

சில சமயங்களில்
ஆரவாரமற்ற அமைதி
தழுவிக்கொள்ளும்
பெரும்பாலும் அவை
எங்கோ முடிந்து போன
நினைவுகளை பிறப்பித்து
மனதின் மேற்பரப்பில்
சுதந்திரமாய்
சுற்றித்திரியவிடும்
பெரும்பாலும் அவை மறந்த
ஆழ்மனதில் எச்சமாய் ஒட்டிய
ஒரு நினைவாகவே
இருக்கும் மூளையின்
சமிக்கைகளை
முழுவதும் சென்றடைய
விடாது
ஒரு தடை நிறுத்தி வைக்க!
அழ நினைத்து கண்ணீர்
நின்று சுற்றி அனைவர்
இருந்தும்
தனித்து விடப்பட
உருகிய நினைவுகள்
ஒன்றாய் ஆழ் மனதில்
உறைந்து உறக்க
நிலைக்கு சென்றிருக்கும்
அடுத்த ஆரவாரமற்ற
அமைதி வர
காத்துக்கொண்டே இருக்க



மீண்டும் மீண்டும் அந்த
சில சமயங்கள் அருகே
நெருங்கிக்கொண்டு
இருக்கும்.

**நா.சதீஸ்குமார்**
தேவகோட்டை

## பேரொளியே..!

அன்பானவனே...!
ஆளுமை நிறைந்தவனே...!
இயற்கையின் உன்னதமே..!
ஈடற்ற அற்புதமே...!
உவமைக்குள்
அடங்காதவனே..!
ஊர்வலமாய் நிதம்
வருபவனே..!
என் மனம் கவர்ந்தவனே..!
ஏகாந்தமானவனே...!
ஐந்திரத்தில் உதிப்பவனே..!
ஒளிமயமானவனே..!
ஓங்குபுகழ் பெற்றவனே..!
ஔதாரியம் நிரம்பியவனே..!
அழகான ஆதவனே..!
இப்பூமி சுழலும் நாள்வரை
உன்மீது நாங்களும்..
எங்கள் மீது நீயும்..
சக உயிர்கள் மீது
அனைவரும் தீராக்
காதலுடன் வாழ அருள் தா!

**விஜி சம்பத்,** சேலம்.

## உயிர் பணயம்

மனுசனுக்குள் பேதம் பார்த்து
மழை யடிக்குதா_ அந்த
மேகம் வந்து சாதி பார்த்து
குடை பிடிக்குதா?

மனுசனோட மனச பார்த்து
காத்தடிக்குதா_ இத
மறந்து வாழும் மனிதனுக் கே
மதம் புடிக்குதா?

சாதி சண்டை போட்டு வாழ
சமயம் பார்ப்பதா! _அதுக்கு
சனங்களோட உயிரை மட்டும்
பணயம் கேட்பதா?

அனுசரிச்சு வாழும் வாழ்வில்
அல்லல் இருக்குதா?_இந்த
அனுபவத்தை கேட்டு வாழ
இதயம் மறுக்குதா!

மனுசனுக்குள் பேதம் பார்த்து
மழை அடிக்குதா _அந்த
மேகம் வந்து சாதி பார்த்து
குடை பிடிக்குதா?

## கீரை விற்கும் பெண்!

ஞாபகசக்தி அதிகரிக்க
வல்லாரை சாப்பிட
வேண்டுமென்று படித்தது
எனக்கு நன்றாக
ஞாபகமிருக்கிறது
ஆனாலும் கொஞ்சநாளா
எனக்கு மறதி அதிகமாகிறது
என்பது மட்டும்
எனக்கு ஞாபகத்தில்
மறக்காமல் இருக்கிறது
நான் வாங்கிங் போகும்போது
ஒரு அழகான பெண்
வல்லாரை கீரை விற்பதை
பார்த்திருக்கிறேன்
அவள் நல்ல திராட்சை
கண்களுடன்
குண்டு கன்னங்களுடன்
மிக அழகாக இருப்பாள்
அவளைப்
பார்த்துக்கொண்டேதான்
போவேன் வருவேன்
ஆனாலும் வல்லாரைக்கீரை
என் கண்ணில் படாது
மறந்துவிடுவேன்.
இன்றும் அப்படிதான்
அவளை நான்
பார்த்துக்கொண்டேதான்
சென்றேன் வந்தேன்
வல்லாரைக் கீரையை மட்டும்
பார்க்கவில்லை
மறந்து விட்டேன்
நாளைக்காவது நான்
வல்லாரைக்கீரையை
மறக்காமல் வாங்கிவர



ஏதாவது
யோசனை
இருந்தால்
சொல்லுங்களேன்!

**சின்னஞ்சிறு கோபு,**
சிகாகோ.

## கவி கிறுக்கல்கள்

**குடும்பம்:**
இருமனம் கலந்தால்
உறவுகள் பிறக்கும்/
இசைவுடன் நடந்தால்
இல்லறம் சிறக்கும்//

**தாய்மை**
உனை ஈன்றதால்
தாயாகி பெருமைய
டைந்தேன்/

அம்மா எனும் அழைப்பிலே
அகிலத்தையே மறந்தேன்//

**புதுப்பிப்பு**
தந்தையும் மகனும்
ஒரே வரிசையில்/
வேலை வாய்ப்பு
பதிவினை புதுப்பிக்க//

**கல்வி தந்தை**

மழைக்குக்கூட
பள்ளியின் பக்கம்
ஒதுங்கவில்லை/

கல்லூரிகளை துவங்கி
கல்வி சேவை புரியும்
கல்விதந்தை//

**முதியோர் இல்லம்**

நாட்டில் முதியோர்
இல்லங்களே இல்லாத
நிலை ஏற்படவேண்டும்,

சமூக சேவை புரியும்
மகனின் ஆதங்க பேச்சை
தொலைக்காட்சியில்
பார்த்து மகிழ்ச்சியுறும்
அன்புத்தாய்/
முதியோர் இல்லத்தில்//

**தற்கொலை**

பத்து மணி ரயிலை
எதிர்நோக்கி
தண்டவாளத்தில் தலை
வைத்து படுத்திருந்தான்/

பாழும் ரயிலும் கடந்து



போனதே
பக்கத்து
தண்ட
வாளத்தில்//

**கோபாலன் நாகநாதன்,**
சென்னை




வாழ்க்கைல ஒருவேளை
சந்தோசமா இருந்திருந்தா,
உன்னை நினைக்காம
மறந்திட்டு
இருந்திருப்பேனோ?
எல்லா
பைத்தியக்காரத்தனங்களும்
எல்லா நேரங்களிலும்
வெற்றியடைவதில்லை.
-இப்படிக்கு-
மானம்னு ஒண்ணு
இருக்கிறதை நம்பி
உண்மையான ஆசைகளை
துறந்து வாழ்கிற
மிஸ்டர் மிடில்கிளாஸ்

சாவுறதுக்குள்ள
பார்க்காத உன் கண்களை
ஒருமுறையாவது
பார்த்திட வேண்டும்
இதுவரை கேட்காத
உன் இன்னிசை குரலை
இந்த ஜென்மம் முடியும்
முன்பாவது
ஒரு முறையாவது
கேட்டிட வேண்டும்!

கல்லூரி காலம்
திரும்ப வேண்டும்?

நினைவுகளில் மட்டும்



காதலித்து
கொண்டிருப்பவன்
மீண்டொருமுறை
நிஜத்தில்
காதலிக்க!

**லி.நௌஷாத் கான்-**

## அன்பு மட்டுமே வெல்லும்

வீரம் வீழ்ந்து போனாலும்
மானம் மண்டியிட்டாலும்
உரிமை ஒரு நாள் இறுதியாய்
வெல்லும்....!

காதல் தோல்வியானாலும்
உறவு தோற்று போனாலும்
அன்பு குறைந்து போனாலும்
ஆசை நிலைகுலைந்து
போனாலும்
அன்பு ஒரு நாள் வெல்லும்



அதை
என் நிலை
ஒரு நாள்
சொல்லும்...!!

**பொன். கருணா**
நவி மும்பை

---

நீ தந்த ஒற்றை மயிலிறகு
என்னிடம் இன்னும்
பத்திரமாகத்தான்
இருக்கிறது....
உன் கை நுணுக்க
வேலைப்பாடுகள்
நிறைந்த கைக்குட்டையும்
பத்திரமாகத்தான் உள்ளது....
நாம் நடந்த பூங்காவில்
உனக்கு நடக்க இடைவெளி
விட்டே இன்றும்
நடக்கின்றேன்....
இளநீரில்...
இரண்டு ஸ்ட்ரா போட்டு
ஒன்றை உனக்கு விட்டுதான்
குடிக்கின்றேன்....
எதுவும் என்னால் மறக்க



முடிய
வில்லையடி....
நீ மட்டும் ...
எப்படி.... !!!!

**எம். பி.தினேஷ்.**
கோவை

## பயம்!

பிறப்பிற்கும்
இறப்பிற்கும்
அப்பால்
என்ன இருக்கென்று
தெரியவில்லை
ஆனாலும்
பயமாக இருக்கிறது!

**சின்னஞ்சிறுகோபு,**
சிகாகோ.

## மரத்தின் அழுகை!

தேவையில்லையென்று
ஒரு கனமான காகிதத்தை
எடுத்துக்கிழித்தேன்
கிழிக்க முடியவில்லை
பலமாக கிழித்தபோது
ஏதோ மரக்கிளை



முறிகிற மாதிரி
சத்தம்
கேட்டது!

**சின்னஞ்சிறு கோபு,**
சிகாகோ.

---

தோழி நீ...
தொலைவில் இருந்தாலும்...
தொடர்ந்து வரப்
போவதில்லை என்பது
மட்டும் நிச்சயம்...!
கடந்து போன காலத்தில்
பசுமை பக்கங்களில் நம்
நினைவுகள் தண்ணீர்
ஊற்றப்படாத செடியாய் வாடி
இருக்கக்கூடும்..!
எப்போதாவது உன்னை
பற்றிய நினைவுகள் மனதின்
ஆழத்திலிருந்து எழும்போது
எங்கேயோ ஒளிந்திருந்த
அன்பு மட்டும் வெளியே
எட்டிப் பார்க்கும்



கண்களின்
ஓரம் லேசான
கண்ணீர்
துளியாய்...!

**ப.காளிதாசன்**
நீர்விளங்குளம்

## ஏமாறாதே ஏமாற்றாதே!

(முட்டாள்கள் நாள்)
(நேரிசைவெண்பா)

இல்லாத ஒன்றை
இருப்பதாய்க் கூறவே
நல்லோரை நாடி நயமாக-
சொல்லாலே
கட்டாகப் பொய்யைக்
கருத்தாகச் சொல்லிடுவார்
"முட்டாள்கள்"
ஆக்கிடுவார் முந்து:

**கு.கணேசன்**
கோவை

## எடுபட உழைப்போம்

"பாராட்டும் புகழும்
இறைவன் முன்
எடுபடாது..."

ஏழ்மையும் பசியும்
பணக்காரன் முன்
எடுபடாது .... "

குளுமையும் மகிழ்ச்சியும்
சூரியன் முன் எடுபடாது ..."

எரிச்சலும் தளர்ச்சியும்
நிலவின் முன் எடுபடாது... "

முயற்சியும் பயிற்சியும்
தோல்வியின்
முன் எடுபடாது....."

கோபமும் கடுப்பும்
அன்பின் முன் எடுபடாது... "

இரவும் பகலும்
படுக்கையானவன்
முன் எடுபடாது ..."
தூய்மையும் நேர்மையும்
மோசடி முன் எடுபடாது ..."


பூக்களின் நறுமணமும்
ஈர்ப்பும் கழிவு நீர்
முன் எடுபடாது ... "

இரும்பின் வீராப்பு
காந்தத்தின் முன்
எடுபடாது..."

காதலின் ஆட்டம் பாட்டம்
சாதியின் முன் எடுபடாது ..."

எடுபடும் செயலை
செய்து வெற்றி
காண்போம் ..."

**ஆர். சீதாராமன்**
சீர்காழி.



என்னை உருக்கி
பனிமலரென
பூக்கவைக்கிறது
உன் பார்வை

உன் இதழ் விளிம்புகளை
ஈரமாக்கிக்கொள்ள
அடங்கவில்லை
முத்தத்திற்கான தாகம்

நம் அணைத்தலின் இறுக்கம்

சற்றே குறைம்போது
விடுபடும் காற்றே என்
சுவாசமாகிறது

உன் பின்னால் நம் பின்னல்
வலுவடைய உன்
செவிமடல் எனக்கு
பிடித்த மினிஜிலேபி ஆகிறது

நேரமும் பொழுதும்
இப்படி காலத்தின்
சிறகுகளைக்கொண்டு
பறக்கப்பறக்க நம் காதலின்
இரவின் கீழ்வானம்
சிவக்கிறது

பிரபஞ்சமே பிரபஞ்சமே
உனது வேகத்தைக்
கொஞ்சம் ஆம் நாங்கள்
கொஞ்ச கொஞ்சம் குறைத்து
உன் ஈவிரக்கத்தைக் காட்டு

**ஜவஹர் பிரேம்குமார்**
பெரியகுளம்

## முரண்

ஓரிடத்தில் உருவாகி
வேறிடம் சேரும்
காரிகையும் காய்கறியும்

முரணான தன்மை கொண்ட
கத்திரியும் காதலும்.....

கத்திரியால் ஒவ்வாமை
காதல் பொதுவுடமை

கத்திரியால் இதயபலம்
காதலால் இதயவலி

விற்பனைக்கு கத்திரி
விறபனைக்கல்ல
காதல்

கத்திரியில் பிஞ்சு
காதலில் முற்றல்

வேறுபட்ட கருத்துடைய
இருவரின் காதல்
திருமணத்தில்
இணைந்தால்......

மணவாழ்க்கை
காதலும் கத்திரியும்
போல் முரண்பட்டதே என...
மூத்தவர்கள் சொல்லும்



வார்த்தையோ??
தெரிந்தவர்கள்
அனுபவசாலிகள்
தெரிந்தால்
சொல்லலாமே

**N PADMAVATHY**
Chennai

## நினைவுகளில் உறங்கட்டும் உயிர் ...

அந்த வீட்டில் எந்த மாற்றமும் இல்லை அதே ஈஸி சேர் ஒரு சோபா ஒரு ரேடியோ பெட்டி ஒரு டேபிள் ஃபேன் சோபாக்கு பக்கத்தில் ஜன்னல்கள் ...

நடராஜன் தன் கால்களை ஒன்றும் மேல் ஒன்று போட்டுக் கொண்டு மோட்டுவளையைப் பார்த்துக் கொண்டு கைகளத் தன் தலைக்குக் கீழ் வைத்துக் கொண்டு மூக்கு கண்ணாடி சரிய கண்கள் மெல்ல மூடியவாறு நினைத்துப் பார்க்கிறார்

நாம் அப்பாவாக இருந்தபோது இதோ அந்த சோபாவில் தங்கை ஹேமா தன் கனவுகளுடன் படிப்பது போல் பாவனை செய்து கொண்டிருந்தது நிழலாடியது

தனது அப்பா (பேரக்குழந்தைகள் அவருக்கு)தன் குழந்தைகள் அஸ்வின் பத்மா இருவருக்கும் கதைகள் சொல்லி ஆனந்தமாக விளையாடியது நிழலாடியது

எனது மனைவியை அதே வீட்டில் இருந்தால் கூட அவளைக் கனவில் பார்ப்பதே அதிகம் ....இப்போது போலவே..

என்னதான் வேலை செய்வாளோ ....த்அடுப்படிதான் அவள் சாம்ராஜ்யம்

இது தவிர தன் தம்பி ரகு அவரது மனைவி ராஜி பூரணி பூரணா குழந்தைகள் ரெட்டையர் அவர்களுடன் அவன் ஹாலில் விளையாடி கொண்டிருப்பான் ...

அது என்ன வசந்த காலமோ அப்படி ஆனால் இது என்ன இலையுதிர் காலமோ

இப்போது நான் மட்டுமே இந்த வீட்டில் தனிமையாக.. இல்லை இல்லை..கடந்த காலத்தின் நினைவுகளுடன்....

இதை விட்டுவிட்டு பாதுகாப்பாக ஹோமிற்கு போகச் சொல்கிறார்கள்

பாதுகாப்பு இருக்கும் ஹோம் இருக்குமா
உயிர் போகும் உயிர் போகும் என்பது ஒருமுறை தானே



அது இந்த நினைவுகளிலேயே கரைந்து கரைந்து உருமாறட்டும்

இறைவா என்று தன் நினைவுகளில் இருந்து விடுபட்டார் நடராஜன்...

**K BANUMATHI NACHIAR**
SIVAGIRI

# வாசகர் கடிதம்

இனிய காலை வணக்கம். அலுப்பேதுமின்றி அதிகாலையில் மூன்று மணிக்கே தயாராகி நிற்கும் e- பேப்பர் ஆசிரியர்கள் குழுவிற்கும் உழைப்பாளிகளுக்கு பாராட்டுக்கள். E-paper ஆல் நிறைய வாசகர்களுக்கு வாசிப்பு நேசிப்பாகி விட்டது. அருமை.

இன்று கவிதைகள் தான் முதலில் என் கண்ணில் பட்டது. அதுவும் "பேதை"என்கிற கவிதை. உணர்வு தான் கவிதையாக வெளிவரும். வளவை லம்போயேர்மனி அவர்களின் இந்த கவிதை என்னை மிகவும் நெகிழ வைத்தது. குறிப்பாய் அந்த கடைசி வரிகள். " மரபு வண்டியில் இறக்க முடியாத சுமைகளோடு...... பாவி வாழ்க்கை தொடங்குகிறது ". Hats off. அடுத்து ராம் பிரேம் சுரேஷ் அவர்களின் "குடும்பம்" என்கிற கவிதையும் என்னுடைய "சிரித்து வைப்போம்" என்கிற கவிதையும் ஒரே கான்செப்ட். எழுத்து தான் வேறு. என்ன எல்லோரும் குடும்பங்களின் பிரிவினை(யை) உணர ஆரம்பித்து விட்டார்கள் என்பதை இந்த கவிதைகள் காண்பிக்கின்றன. ஏ தமிழழகன் அவர்களின் "ஆசை கடல்" அருமையான கவிதை. இவர் நிச்சயமாக ஏதோ தமிழில் ஆராய்ச்சி செய்வார் போல் தான் எழுதி இருக்கிறார். கடைசி வரிகளில் "பெட்புடன் ஆசை வருகிறதே.." என்கிற வரிகள் இதுவரை நான் கேள்விப்படாத வார்த்தை. "பெட்பு" உடனே நமது கூகுள் சித்தப்பாவிடம் கேட்டேன். பெட்பு என்றால் ஆசை பற்றுதல் போன்ற சொற்களை குறிக்கும் என்று இருக்கிறது. மொத்தத்தில் கவிதை அருமை.வே. கல்யாண் குமார் அவர்களின் அடுத்த "ஆடுகப் பொண்ணூஞ்சல்" ஒரு rebellious கவிதை. பெண் கஷ்டப்படுகிறாள் இருப்பினும் ஆடுக பொண்ணூஞ்சல் என்று முடிக்கிறார். அடுத்து தே. சௌந்தரராஜன் அவர்களின் "காத்திருப்பு" அருமையான கவிதை. குறிப்பாய் "திருமண வைபோகத்திற்காய் கனவில் கரையும் முதிர் கன்னி அறுவடை" எவ்வளவு ஒரு வேதனையான வார்த்தை. அருமை. என் பத்மாவதி அவர்களின் "சிலைகள்" அருமை. குறிப்பாக இந்த வரிகள் " பறவை எச்சத்தில் நிதம் குளித்து பிறந்த இறந்த நாட்களுக்கு காத்திருக்கும் சிலைகள்" ரொம்பவே உண்மை. நேரிசை வெண்பாவில் வெளியாகி இருக்கும் முனைவர் ராம வேதநாயகம் அதிலும் ஒரு வரி " மென்மையான மேன்மையான பஞ்சு போன்ற நற்சுவை". இவர் கவிதையும் நற்சுவைதான். இட்டலிக்கு வாய் இருந்தால் பாராட்டி இருக்கும். அருமை. இன்று இத்துடன் முடித்துக் கொள்கிறேன். எழுத இடம் வேண்டும். அனைத்து கவிதைகளும் அருமையாக இருக்கிறது. என்ன செய்ய.? ஆசிரியர் குழு என்னை அடிக்க ஓடி வந்து விடுவார்கள்.

தலைப்பு செய்தியில் பதவியில் இருந்து ஓய்வு என்று ஒரு "க்" கன்னா வைத்து ஆரம்பித்திருக்கிறது செய்தி. உள்ளே போய் படித்த பிறகு தான் தெரிகிறது. பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் ஆர் எஸ் எஸ் வாரிசை ஆர். எஸ். எஸ். முடிவு செய்யும் என்று. அந்த நபர் மகாராஷ்டிராவை சேர்ந்தவராக இருப்பார் என்று ஒரு செய்தி கூறுகிறது. அடுத்து ஒரு செய்தி கூறும்போது 2029 இல் பிரதமர் நரேந்திர மோடி தான் வருவார் என்று மகாராஷ்டிரா முதல்வர் தேவேந்திரா ஃ பட்னவீஸ் தெரிவித்துள்ளார்.

அதுபோக அடுத்து ஒரு செய்தி. மோடி அவர்களுக்கு தற்போது விவேக் குமார் மற்றும் ஹர்ததிக் சதீஷ் சந்திர ஷா ஆகிய இரண்டு தனி செயலாளர்கள் உள்ளனர். இந்நிலையில் நிதி திவாரி அவர்களும் மோடியின் தனிச்செயலாளராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

தமிழகம் முழுவதும் ரம்ஜான் கோலாகல கொண்டாட்டம். நல்ல விஷயம் தான். பண்டிகைகள் கொண்டாடுவதற்கு தான் இருக்கிறது.

கோவில் திருவிழாக்கள் பற்றிய விவரங்கள் அருமை. சூப்பர்.

மின் அணுவியல் ஆட்டோமேஷன் 3டி பிரிண்டிங் துறைகளில் ஆதி திராவிட இளைஞர்களுக்கு தாட்கோ மூலம் இலவச பயிற்சி.

நீண்ட தூரம் செல்லும் தலையில் தூங்கும் வசதியுடன் வந்தே பாரத் 50 ரயில்களை தயாரிக்க சென்னை ஐ சி எப் ஆலை திட்டம். வந்தே பாரத் ரயில் சேவை நாட்டின் முக்கிய வழித்தடங்களில் இயக்கப்படுகின்றன. இதற்கு பயணிகள் மத்தியில் நல்ல வரவேற்பு உள்ளது இந்நிலையில் மேலும் 50 ரயில்களை தயாரிக்க திட்டம். நல்ல விஷயம் தான்.

நலம் தரும் மருத்துவத்தில் ஆரஞ்சு பழத்தை பற்றிய விவரம் அருமை. ஆரஞ்சு பழத்தில் புரோட்டின் நார்ச்சத்துக்கள் விட்டமின் சி போலெட்ஸ் தையாமின் பொட்டாசியம் மேலும் இது ஆன்ட்டி ஆக்சிடென்ட்ஸ் உள்ளது. இவ்வளவு சுலபமாக கிடைக்கும் சத்துக்களை நாம் விடலாமா?

சுஜாதா கார்த்திகேயன் அவர்களை பற்றி படித்த பொழுது பெண்களுக்கு ஒரு தன்னம்பிக்கை வர வேண்டும். ஒடிசாவின் முன்னாள் முதல்வர் நவீன் பட்நாயக்கின் நம்பிக்கைக்கு உடையவராகவும் அவரின் தனி செயலாளராகவும் பணியாற்றி வந்தார். 2005 ஆம் ஆண்டு நக்சல்கள் பிரச்சினையால் பாதிக்கப்பட்ட சுந்தர்கர் மாவட்ட ஆட்சியராக பொறுப்பேற்றார். அப்போது படிப்பை தொடர முடியாத மாணவிகளுக்கு வங்கியின் உதவி மூலம் சைக்கிள் வாங்கி கொடுத்து படிப்பை தொடர செய்தார். இளைஞர்களின் வன்முறை பாதையை மாற்றுவதற்கு கால்பந்து விளையாட்டு களில் அவர்களை ஈடுபட செய்தார். மட்டும் இல்லாமல் அரசின் செயல்பாடுகளை மகளிர் சுய உதவி குழு உடன் தொடர்பு படுத்தி அவர்களை தனித்துவத்துடன் செயல்பட செய்து அதிக வருமானம் ஈட்ட வைத்தார். குறிப்பிட்டு சொல்லும் படி மின்கட்டணம் வசூல், சாலை அமைப்பது கொள்முதல், நர்சரி பயிற்சி, இப்படி ஐந்து ஆண்டுகளில் 11 ஆயிரம் கோடி வருமானத்தை ஈட்ட வைத்தார். பெண்களுக்கு அதிகாரம் அளிப்பது தான் மிஷன் சக்தி திட்டத்தின் முக்கிய நோக்கம் என்றார் அவர். சுய உதவிக் குழுவின் பொருட்களை சந்தைப்படுத்தி மாநில முழுவதும் சக்தி பஜர்களை அமைத்தார். உண்மையிலேயே இவர் போன்ற பெண்கள் நாட்டுக்கு பெரிய உந்துதல் சக்தி.

சுவாரசியமான செய்திகளை பார்க்கலாம்.

டெலிகிராம் தளத்தில் கரோக் AI வந்துவிட்டது. @ Grok என்று tag செய்தால் அதற்கான பதிலை வழங்குகிறதாம். அடுத்து மேலும் ஐபோன் பயனர்கள் whatsapp மூலம் அழைப்பு மற்றும் மெசேஜ்களை அனுப்புவதை இயல்பு நிலை ஆப்ஷன் ஆக மாற்றுவதற்கான அம்சம் கொண்டு வந்துள்ளது. இதற்கு சமீபத்திய பதிவு அப்டேட் செய்ய வேண்டும். இன்னும் என்னென்னத்த எல்லாம் கொண்டு வந்து மனுஷனை ஒரு வழி பண்ண போறாங்கன்னு தெரியல. டெக்னாலஜி வளர வளர மனுஷன் சோம்பேறி ஆயிட்டு வரான். Too much of anything is good for nothing னு ஆயிடும் போல.

அடுத்தது பாருங்கள் விசுவல் இன்டெலிஜென்ஸ் உடன் ஆப்பிள் வாட்ச் உருவாகிறது. அடடா அடடா அடடாடாட.... முடியல. ஐ ஃபோன்ல மட்டுமே இருந்த இந்த ஃபெசிலிட்டி இப்போ ஸ்மார்ட் போன்ல யும்.

நம்ம கவலைக்கு வருவோம் நாலாவது நாள் தொடரும் கேஸ் டேங்கர் லாரி போராட்டம் இன்னும் முடிவுக்கு வரவில்லை. அடுத்த செய்தி பரவாயில்லை மாதம்தோறும் மின் கணக்கீடு திட்டங்கள் விரைவில் அமல். 50 லட்சம் செலவில் இறகு பந்து உள் விளையாட்டு அரங்கம் திறப்பு. அண்ணா நகரம் மண்டலம் திருநகரில் இது அமைக்கப்படுகிறதாம்.

ரமலான் விருந்து அடைக்கலம் இரண்டு கதையுமே அருமை. உனது தர்மம் இரண்டாவது பாசம். "யாதுமாகி நின்றாள்" நன்றாகப் போகிறது.

போகர் மகா சித்தர். சகலத்திலும் உச்சம் தொட்ட மகா சித்தரின் வரலாறு ரொம்பவே வித்தியாசமாக இருந்தது. அமிர்தா மணி பழம் இதுவரை கேள்விப்பட்டதில்லை மேலும் சித்தர் மனிதன் பிறக்கும் போது எதன் அடிப்படையில் ஏழையின் வயிற்றிலும் பணக்காரன் வயிற்றிலும் பிறக்கிறான். இறப்புக்கு பின் கொண்டு செல்வது எதுவும் இல்லை என்று தெரிந்தும் ஏன் அவன் ஏன் ஆசை முடியலை சிக்கி கிடக்கிறான் என்றெல்லாம் யோசிக்க ஆரம்பித்து எவ்வளவு முயன்றும் அவனால் என் மரணத்தை வெல்ல முடியவில்லை என்றும் யோசித்து, மொத்தத்தில் மனித சமுதாயமே வாழத் தெரியாமல் வாழ்வதாக அது விதியின் கை பாவையாய் இழுத்துச் செல்லப்படுவதாக உணர்ந்தவர் மனித சமுதாயத்தை காப்பாற்றி ஆக வேண்டும் என்று " போகர் 7000" போகர் நிகண்டு 17,000 சூத்திரம் மனிதனை வாழ வைக்கும் அரிய சூத்திரங்கள் எழுதப்பட்டன. நிறைய சித்தர்கள் இதை எதிர்த்து இந்த சித்த ரகசியங்கள் எழுதி வைப்பது ஆபத்து என்றனர். ஆனால் போகர் அதை காதலியே வாங்கிக் கொள்ளாமல் நகரம் சஞ்சீவி மரத்தை கட்டி பின்பு அதை கைப்பற்றினார். அந்த மந்திரம் தம்பனா மந்திரம் எனப்படுகிறது. ரொம்பவும் சுவாரஸ்யமான கட்டுரை.

அடுத்து தினம் ஒரு தலைவர்கள் பகுதியில் கல்யாண சுந்தரனார் பற்றிய வரலாறு அருமை.

பல்சுவை களஞ்சியத்தில் ஸ்ரீ கிருஷ்ணனிடம் எப்பொழுதும் ஐந்து பொருள்கள் இருக்கும் ரொம்பவே அருமையான விளக்கம்.

அடுத்து பிள்ளைகளின் விருப்பம் அறிவோம் என்கிற பாரதிராஜாவில் உருக்கமான கட்டுரை மனதை என்னவோ செய்தது. நிறைய பெற்றோர்கள் இப்படித்தான் தவறு செய்கிறார்கள். ரொம்பவே வருத்தமாக இருந்தது.

சமையலறையில் கருணைக்கிழங்கு பக்கோடா மிகவும் ஆர்வத்தை தூண்டுகிறது. மற்றும் அனைத்து குறிப்புகளும் அருமை. மேலும் தக்காளியின் மருத்துவ பயன்கள் ரொம்பவே உபயோகமாக இருந்தது. பாகற்காயின் மருத்துவ பலன்களும் புதுமை.

அடக்கடவுளே இன்கம் டேக்ஸ் டிபார்ட்மெண்டுக்கு அல்வா குடுக்குறாங்களே நம்ம பீப்பிள். 22500 பேர் போலி ஐடி ரிட்டர்ன் தாக்கல். தமிழகத்தில் ரூபாய் 500 கோடிக்கு வருமான வரி மோசடி.

பரந்தூர் விமான நிலையத்துக்கு எதிராக 12வது முறையாக தீர்மானம்.

வணிகர்கள் தொழில் முனைவோருக்கு ஏப்ரல் மூணாம் தேதி சேட் ஜி பி டி வகுப்பு நடக்கிறது. ஜி பி டி என்பது என்ன. இந்த சாட் ஜிபிடி மனித தேவைகளுக்கு ஏற்ப பொருத்தமான தரவுகளை எழுதுதல், கன்டென்ட் உருவாக்குதல், வாடிக்கையாளர்கள் உடனான உறவுகளை மேம்படுத்த ஏஐ கருவிகளை வணிக உத்திகளை ஒளியமாக கண்காணித்தல் ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

பஞ்சட்டியில் சுமார் 256 கோடியில் புதிய துணை மின் நிலையம். பணியை விரைந்து முடிக்க அறிவு றுத்தல். மேலும் சென்னையில் தனியார் துறை வேலை வாய்ப்பு முகாம். 841 நியமன ஆணைகளை மா சுப்பிரமணியன் அவர்கள் வழங்கினார்.

க்ரைம் கார்னரில் ரவுடி கொலையில் நண்பர் உட்பட ஐந்து பேர் கைது. இது தேவையா? தடை செய்யப்பட்ட மாஞ்சா நூல் பட்டங்களை பதுக்கி விற்ற தனியார் நிறுவன மேலாளர் கைது. இவருக்கு இது தேவையே இல்லாத வேலை. என்ன சந்தையில் ஐபிஎல் டிக்கெட் விற்ற 25 பேர் கைதா???.திருத்த முடியாது.

செங்கோட்டையனுக்கு ஒய் பிரிவு பாதுகாப்பு மத்திய உள்துறை அமைச்சகம் பரிசீலனை. அப்படியா?

வடகிழக்கு மாநிலங்களில் ஆயுதப்படை சிறப்பு அதிகார சட்டத்தை ஆறு மாதம் நீட்டித்தது மத்திய அரசு. சிறுபான்மையினர் என்பதை பாதுகாப்பது பெரும்பான்மையினரின் கடமை என்றார் மம்தா பானர்ஜி. 25 -26 ஆம் தேதி ஆண்டின் இந்திய பொருளாதாரம் 6.5% வளர்ச்சி அடையும்.

வெளிநாட்டு செய்திகளில் உக்கரையனுக்கு எதிரான போரை நிறுத்தா விட்டால் புதினுக்கு எச்சரிக்கை என்றார் அதிபர் ட்ரம்ப். 2022 ஆம் ஆண்டிலிருந்து நடந்து வரும் இந்த போர் மூன்று ஆண்டை கடந்தும் நிற்கவில்லை. ல்லாயிரக்கணக்கானவர்கள் பலியானார்கள். உக்ரேன் ரஷ்யா போரை என்னாலும் ரஷ்யாவாலும் நிறுத்த முடியவில்லை என்றால் ரஷ்யாவின் மீது தவறு இருக்கிறது. மேலும் அவர் நான் அதிக கோபத்தில் இருக்கிறேன் என்றார் ட்ரம்ப். புதினிடம் இந்த வாரம் பேசுவீர்களா என்று ட்ரம்பை கேட்ட கேள்விக்கு புதின் சரியான செயல்களை செய்கிறார் என்றால் மட்டுமே அது நடக்கும். நான் கோபத்தில் இருப்பது புதினுக்கு தெரியுமென்றார். அதெல்லாம் இருக்கட்டும் போர் நிற்குமா??? இதுதான் எல்லாருடைய கேள்வியும்.


அணு ஆயுத ஒப்பந்த விவகாரம். தயார் நிலையில் ஏவுகணைகள். ட்ரம்பின் குண்டு வீச்சு மிரட்டலுக்கு ஈரான் பதிலடி. மிகவும் அதிர்ச்சியான செய்தி என்னவெனில் ரஷ்ய அதிபர் புதினை கொள்ள முயற்சியா? பு தினின் பாதுகாப்பு கான்வாய் பகுதியில் நின்று இருந்த ஒரு கார் வெடித்து சிதறியது. இந்த கார் ரஷ்ய அதிபர் மாளிகையின் அதிபர் சொத்து மேலாண்மை துறைக்கு சொந்தமானது என்று கூறப்படுகிறது. இவ்வளவு பாதுகாப்பு உள்ள ரஷ்யாவில் இப்படியா இன்று மக்கள் ஆச்சரியப்படுகிறார்கள். எது எப்படியோ அதிபர் ட்ரம்பும், புதினும் இல்லாத செய்திகளே இல்லை எனலாம்.



-ஜெயந்தி சுந்தரம்

---

தமிழ்நாடு இ பேப்பர் க்கு தலை வணக்கம் தமிழகம் முழுவதும் ரம்ஜான் கலாமா கோலாலமாக கொண்டாட்டம். நீண்ட தூரம் செல்லும் வகையில் தூங்கும் வசதியுடன் 50 வந்தே பாரத் ரயில்களை தயாரிக்க சென்னை ஐசிஎப் ஆலை திட்டம் வரவேற்கிறோம். நலம் தரும் மருத்துவம்.... ஆரஞ்சு பழம் சாப்பிடுவதால் உடலுக்கு புரோட்டின் நார்சத்துக்கு வைட்டமின் சி ஆரஞ்சு பழம் சாப்பிடுவதால் உங்களுக்கு நோய் வராமல் பாதுகாக்க உதவும். உடலில் தேங்கும் தேவையற்ற கொழுப்புகளை ரத்தக் கொதிப்பு ஆகிய போன்ற பிரச்சனைகளில் இருந்து காக்கும். ஜீரண சக்தியை அதிகப்படுத்தும் உடலுக்கு பாதிப்பு ஏற்படுத்து நச்சுக்களை வெளியேற்றுகிறது. உடல் எடையை குறைக்க நினைப்பவர்கள் தினமும் காலை உணவு சாப்பிடும் முன் ஆரஞ்சு பழத்தை ஜூஸ் சாறு குடித்து வந்தால் உடல் எடையை குறைக்கலாம். ஆரஞ்சு பழம் புற்றுநோய் செல்களை அழிக்கக்கூடிய தன்மை உள்ளது. மாதந்தோறும் மின் கணக்கிட்டு திட்டம் விரைவில் மின்வாரிய அதிகாரிகள் தகவல் 22500 பேர் போலி ஐடி ரிட்டன் தாக்கல் தமிழகத்தில் 500 கோடிக்கு வருமான வரி மோசடி .. இதிலேயும் மோசடியா மனசாட்சியுடன் செயல்பட வேண்டும். சென்னையில் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் 841 பேருக்கு பணி நியமன ஆணைகளை அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்கினார் வாழ்த்துக்கள். அன்பு, அமைதி, நல்லிணக்கம் சகோதரத்துவம் வளரட்டும் விஜய் ரமலான் வாழ்த்து. 13 வயது சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்த உறவினருக்கு 20 ஆண்டு சிறை. பெண் குழந்தைகளை எங்கேயும் தனியாக இருப்பது பயமாக தான் உள்ளது. மிகவும் வேதனையாக உள்ளத. இன்று பிறந்தநாள், திருமண நாள் காணும் அனைவருக்கும் வாழ்த்துக்கள் வாழ்க வளமுடன் உள்ளூர் செய்திகள் முதல் உலகச் செய்திகள் வரை தினமும் எங்களுக்கு கலர் வண்ண புகைப்படங்களுடன் கொடுக்கும் உள்ளது உள்ளபடி காட்டும் தமிழ்நாடு இ பேப்பரர் க்கு நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன் தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் S. நிர்மலா



-நிர்மலா ஸ்ரீதரன்
திருவண்ணாமலை

---

தமிழ்நாடு இ பேப்பரில் நாள் தவறாது வாசகர் கடிதம் எழுதிவரும் திருவண்ணாமலை ந.சண்முகம் அவர்களின் மரணம்செய்திகேட்டு அதிர்ச்சியானேன். அண்ணாவின் ஆன்மா இறைவனடி சேர பிரார்த்திக்கிறேன்.

2029 லும் மோடிதான் பிரதமர் என தலையங்கம் செய்தி படித்தேன். புதுக்கவிதைகளும் சிறுகதைகளும் தொடர்கதையும் அருமையாக இருந்தது எழுத்தாளர்களை பாராட்டுகிறேன் தமிழ்நாடு இ பேப்பர் மென்மேலும் வாழ்த்துகிறேன்.



-கே.எஸ்.ரவிச்சந்திரன்
மணமேல்குடி

---

2029 ல் மோடி பிரதமராக இருப்பார் என ஆர் எஸ் எஸ் கூறியுள்ளது மோடிக்கு 75 வயதாகியும் அவருக்கு ஓய்வு கிடையாது போலும் 75 வயது ஓய்வு என்பது மற்றவர்களுக்கு. தான் எனக் கூறியுள்ளது வியப்பை தருகிறது. கோடைகாலத்தில் பறவைகளுக்கு நீர் உணவு வைப்பது நல்ல செயலாகும் . தினசரி ஒரு பழத்தின் நன்மைகளை கூறுவது அந்தப் பழத்தின் பயன்களை அறிந்து கொள்ள முடிகிறது. மாதந்தோறும் மின்கட்டணம் கணக்கெடுப்பு கொண்டு வந்தால் தன் நடுத்தர வர்க்கத்தினர் வாழ்க்கை நடத்த முடியும். போகர் சித்தரின் வரலாறு புல்லரிக்க வைக்கிறது. ரிஷி வந்தியா சாரின் நறுக்ஸ் நொறுக்ஸ் கவிதையும் வேலூர் முத்து ஆனந்த் சார் தோசை கவிதையும் சூப்பரோ சூப்பர். கிருஷ்ணரிடம் எப்போதும் இருக்கும் ஐந்து பொருட்கள் பற்றிய விளக்கம் புதுமையாக இருந்தது. நேற்றைய தினம் என்ன காய்கறி வாரமா ஒரே காய்கறி மயமாக இருந்தது. கொள்ளு பேரனுக்கு ராமதாஸ் தாலாட்டு பாடி தூங்க வைத்தார் மற்ற தாத்தாக்கள் எல்லாம் பேரன் பேத்திகளுக்கு குத்து பாட்டு பாடி தூங்க வைப்பார்கள் போலும். விஜய் தொடர்ந்து செங்கோட்டையனுக்கு ஒய்ப்புரிவு பாதுகாப்பு வழங்கப்படும் எல்லாம் அமித் ஷா கைங்கரியம். உக்ரேன் போரை முடிவுக்கு கொண்டு வர வேண்டும் புதிணிக்கு ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார். பெரிய அண்ணன் பெரிய அண்ணன் தான் என்பதை நிரூபித்து விட்டார். ஜெர்மனியில் 66 வயது பெண்ணிற்கு பத்தாவது குழந்தை பிறந்துள்ளது என்ற மகிழ்ச்சியான செய்தியை வழங்கியதற்கு ஈ பேப்பருக்கு பாராட்டுக்கள். போரில் ஈரானும் தக்க பதிலடி கொடுத்த வருவது வியப்பாக உள்ளது. நடிகை ஜான்வி கபூர் கவர்ச்சி உடையில் வலம் வந்தார். பாவம் சேலை வாங்கி கொடுக்க ஸ்ரீதேவி இல்லை.



-நடேஷ் கன்னா
கல்லிடைக்குறிச்சி

# வாசகர் கடிதம்

01.04.2025 'தமிழ்நாடு இ பேப்பர். காம்' வழக்கம் போல் அனைத்துச் செய்திகளையும் தாங்கிய நாளிதழாக வெளிவந்திருக்கிறது.

பிரதமருக்கு தனிச்செயலாராக பணியாற்ற இருக்கும் நிதி திவாரிக்கு மனமார்ந்த வாழ்த்துகள்.

ரம்ஜான் கொண்டாடிய நமது இசுலாமிய உடன்பிறப்புகளுக்கு மீண்டும் வாழ்த்துகள்.

மின்னணுவியல், ஆட்டோமேஷன், 3D பிரிண்டிங் துறைகளில் ஆதிதிராவிட இளைஞர்ளுக்கு தாட்கோ. மூலம் இலவச பயிற்சி வழங்க இருப்பது சிறப்பு.

நீண்ட தூரம் செல்லும் வந்தேபாரத் ரயில்களில் படுக்கை வசதி செய்து பெட்டிகள் ஐசிஎஃபில் தயாரிக்க இருப்பது அவசிமான ஒன்று.

மாதந்தோறும் மின்கணக்கீடு திட்டம் விரைவில் அமல் என்பது ஆறுதல் அளிக்கும் செய்தி. ஆனால் மாதந்தோறும் மின்கணக்கீடு என்று தொகையை கூட்டிவிடக்கூடாது.

வி.கலியாணசுந்தரனார் எனும் திருவிக பற்றிய கட்டுரை தொழிற்சங்கப் போராளி, தமிழ்தொண்டாற்றிய திலகம் என்கிற பன்முகத்தன்மையைக் காட்டியது.

போகர் சித்தர் குறித்த கட்டுரை அவர் தந்த பழனி தண்டாயுதபாணியை மீண்டும் தரிசிக்கத் தூண்டியது. சித்தராக இருந்தாலும் கர்வம் கொண்டால் என்ன நடக்கும் என்பதையும் காட்டியது. போகரின் குரு காலங்கிநாதர் குறித்தும் அவரது சித்த மகிமைகளைத் தேடித்தரிசிக்கவும் வாசிக்கவும் தூண்டியது.

ப்ஸ்ரீகிருஷ்ணரிடம் இருக்கும் ஐந்து பொருட்கள் இனி கிருஷ்ணரைக் காணும் போதெல்லாம் கண்களில் தெரியும்.

பிள்ளைகளின் விருப்பம் அறிவோம் எனும் கட்டுரை பிள்ளைகளின் மேல் பெற்றோர் தங்கள் விருப்பங்களைத் திணிக்காதிருக்கும் விழிப்புணர்வைத் தந்தது.



-ப. தாணப்பன்
திருநெல்வேலி

---

அரசியலில் ஊகங்களுக்கும் வதந்தி களுக்கும் எப்போதும் பஞ்சமே கிடையாது. ஆர் எஸ்எஸ் அலுவலக விழாவில் கலந்து கொள்ளச் சென்ற பிரதமரை பதவி விலக தெரிவிக்கச் சென்றார் என கதை கட்டி விட்டார்கள்.

சிரித்து வைப்போம்— திருமாமகள் கவிதையில் தனிக்குடும்பம் இன்று தணிக்கைக் குடும்பம் ஆனது என்றும் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசி நன்றாக சிரித்து வைக்கிறோம் என்றும் சமுக அவலத்தைச் சுட்டியுள்ளார் .உண்மை.

பானுமதி நாச்சியார் இட்லிக் கவிதையில் வாயிலே சுவையுண்டு வெந்த நிலவுக்கே என்கிறார். இட்லியை வெந்த நிலவாக உருவகிக்கிறார் . ஒவ்வொருவர் கவிதையிலும் புதிய கற்பனைகள் புதிய சொல்லாட்சி . அற்புதம்

அலைபேசிகளில் நாள் தோறும் புதுப்புது வசதிகள் அறிமுகமாகிறது. குக்கிராமங்களில் கூட பயன்பாடும் பலனும் பெருகி வருகிறது. நல்ல வழிகளில் பயன்படுத்தி பலன் பெற வேண்டும்.

போகர் சித்தர் வரலாறு அனைவரும் அறிய வேண்டிய ஒன்று.

திரு வி க வின் தமிழறிவு தமிழ்கூறும் நல்லுலகில் என்றும் அழியாதது.

அமெரிக்க பெண் ரூ1000/- க்கு வாங்கிய பழைய ஓவியம் பல கோடி ரூபாய்க்கு விலை போகலாம் எனக் கண்டறிந்திருக்கிறார் . கொடுக்கிற தெய்வம் கூரையைப் பிய்ச்சுக்கிட்டு கொடுக்கும் என்பார்களே அது இது தானோ!

உலக நாடுகளுக்குள் கருத்தொற்றுமை ஏற்பட வேண்டும். அணு ஆயுதப் போருக்கு வழி வகுத்திடல் கூடாது.

ஆரஞ்சுப் பழமும் தக்காளியும் அறியாத சிறுகுழந்தை கூட கிடையாது. அதன் பலன்களை அழகுறச் சொல்லியிருப்பது அழகோ அழகு.

சமையல்காரரர் பக்கோடா வகைகள் பலவிதமா?

66 வயதில் செருமானிய நாட்டுப் பெண்மணி 10 வது குழந்தையை ஈன்றெடுத்திருக்கிறார். மனவலு உடல்வலு மிக்க வீராங்கனை தான் வாழ்க

தங்கம் விலை போகிற போக்கில் பெண்கள் மிகமிகக் கவனமுடன் தான் நடமாட வேண்டும்.

கணவனும் மனைவியுமான 2 திறமையான ஐஏஎஸ் அலுவலர்கள் அரசியல் சூறாவளியில் பதவியைத் துறந்திருக்கிறார்கள். மக்கள் நலன் மக்கள் நலன் என்றே உழைத்தவர்கள் மனம் எவ்வளவு வெதும்பி இருக் கும்.



-சே.முத்துவிநாயகம்
திருநெல்வேலி

---

மோடிஜி பதவியிலிருந்து ஓய்வா? 2029ல் மீண்டும் பிரதமராய் தொடர்வாரா#ஆர் எஸ் எஸ் வட்டாரங்கள்
கோடை வெய்யிலை ஒட்டி பறவைகளுக்கு நீரும் உணவும் அளிப்போம்#முதல்வர் ஸ்டாலின்
தமிழகம் முழுவதும் திங்களன்று ரம்ஜான் கோலாகல கொண்டாட்டம்
தங்க விலை புதிய உச்சம்#ரூ.67000 ஐக் கடந்தது
நீண்ட தூரம் பயணிக்கும் வகையில் தூங்கும் வசதியுடன் ஐம்பது வந்தே பாரத் ரயில்களைத் தயாரிக்க சென்னை ஐசிஎஃப் திட்டம்
சென்னை: ஒரே வாரத்தில் பைக் ரேஸில் ஈடுபட்ட 56 பேர் கைது#காவல் ஆணையர் தகவல்
மாதந்தோறும் மின் கணக்கீடு திட்டம் விரைவில் அமல்#மின் வாரிய அதிகாரி தகவல்
விருத்தாசலத்தில் பள்ளிச் சிறுமிகளைக் கடத்திய சிறுவன் கைது
தொடர் பைக் திருட்டு#பிரபல கொள்ளையன் கைது
இரண்டு சிறுகதைகளும் அருமையாய் புனையப்பட்டிருந்தன
புது கவிதைகள் நெஞ்சை அள்ளும் விதமாயிருந்தன
வாசகர் கடிதங்கள் தித்தித்தன
நூல் விமர்சனம் சிறப்பு
ஸ்ரீகிருஷ்ணரிடம் எப்போதுமிருந்த ஐந்து பொருட்கள் சங்கு, சக்கரம், வாள், வில் மற்றும் கதை
பாகற்காய் மற்றும் பீர்க்கங்காயின் மருத்துவ பயன்கள் பிரமிப்பை ஏற்படுத்தின

22500 பேர் போலி ஐடி ரிட்டன் தாக்கல்#தமிழகத்தில்500 கோடி வருமான வருமான மோசடி#டிஜிட்டல் கிரைம் ஆட்கள் பெருத்து விட்டனர்
சென்னை பஞ்செட்டியில் 256 கோடியில் புதிய துணை மின் நிலையம் விரைந்து அமைக்க திட்டம்
சிறுபான்மையினரைக் காப்பது பெரும்பான்மையினரின் கடன்#முதல்வர் மம்தா பானர்ஜி
ருதுராஜ் கெயிக்வாட் அதிரடி அரை சதம் வீண்#சிஎஸ்கே அதிர்ச்சி தோல்வி
பத்தாவது குழந்தைக்குத் தாயானார் # 66 வயது ஜெர்மானிய பெண்



-பி. சுரேகா
சென்னை

---

தமிழ்நாடு இ.பேப்பரில் நலம் தரும் மருத்துவம் பகுதியில் 'ஆரஞ்சு பழத்தில் உள்ள சத்துக்களும் பயன்களும்!' என்று மிக விரிவாக ஆரஞ்சுப் பழத்தின் சிறப்பை சொல்லியிருந்தீர்கள். ,இதைப் படித்தபிறகுதான் ஆரஞ்சு பழத்தின் பெருமையை முழுமையாக நான் உணர்ந்தேன்.

இனம், சாதி, சமயம் கடந்து... அன்பு, இரக்கம், சகோதரத்துவம் நிலவ வேண்டும் என்ற கருத்துடன் எழுதப்பட்ட 'ரமலான் விருந்து!' என்ற வே.கல்யாண்குமாரின் சிறுகதை மிகச் சிறப்பு.

பிரபாகர்சுப்பையாவின் 'அடைக்கலம்' என்ற சிறுகதையில் அந்த மணி என்ற நாயால்தான் முத்துவேலின் கடைவியாபாரம் குறைந்துப்போனது. மறுபடியும் அந்த நாய் வந்துவிட்டதே, முத்துவேலின் கடை வியாபாரம் இன்னும் குறைந்துப் போகாதா? இந்த இடத்தில்தான் இந்த கதை எனக்கு கொஞ்சம் புரியவில்லை!

'திரு.வி.க.' என்ற பிரபலமான மனிதரைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறேன். தினம் ஒரு தலைவர்கள் பகுதி மூலம் அவரைப்பற்றி நான் தெளிவாக அறிந்துக்கொண்டேன். வாழ்க்கை வரலாறு நூல்கள், அரசியல் நூல்கள், சமய நூல்கள், பாடல் நூல்கள், பயண இலக்கிய நூல்கள், பொதுவுடமை தொடர்பான நூல்கள் என்று ஏகப்பட்ட நூல்களை அவர் எழுதியிருப்பதை அறிந்து வியந்துப் போனேன்.

சமையல் அறை ஸ்பெஷலில் பாகற்காய், தக்காளி, பீர்க்கங்காய் என்று மூன்று காய்கறிகளின் மருத்துவப் பயன்களையும் தெளிவாக அறிந்துக்கொண்டேன். எப்போதுமே இந்த பகுதி பயன் நிறைந்த பகுதிதான்.

'ஸ்ரீ கிருஷ்ணனிடம் எப்போதும் ஐந்து பொருள்கள் இருக்கும்...' என்ற எம். ராதாகிருஷ்ணனின் கட்டுரையை படித்து, ஸ்ரீ கிருஷ்ணனின் கையில் இருக்கும் சங்கு எப்படி ஆயுதமாயிற்று என்பதை புரிந்துக்கொண்டேன். இதிகாச புராண தகவல்களில் இருக்கும் சுவையான விஷயங்களை மிக அழகாக தருவதில் தமிழ்நாடு இ.பேப்பர் சிறந்து விளங்குகிறது!



-சின்னஞ்சிறுகோபு,
சிகாகோ

---

இன்றைய தமிழ்நாடு இ பேப்பர் நலம் தரும் மருத்துவம் பகுதியில் ஆரஞ்சு பழத்தின் பயன்கள் பற்றிய கட்டுரை நல்லதொரு தகவலை தருகிற பகுதியாக இருந்தது. தினம் ஒரு தலைவர் பகுதியில் திரு வி கல்யாண சுந்தரனார் பற்றிய வாழ்க்கை வரலாற்று கட்டுரை பகுதி அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டிய தகவல்களை ஒன்றாக திரட்டி சொன்னது போல இருந்தது. பல்சுவை களஞ்சியம் பகுதியில் பிள்ளைகள் விருப்பம் அறிவோம் என்கிற கட்டுரை இன்றைய பெற்றோர்களுக்கு நல்லதொரு தகவலை மனதில் பதிய வைத்தது என்று சொல்லலாம். நிரஞ்சனா அவர்கள் எழுதிய யாதுமாகி நின்றவள் தொடர் நல்ல விறுவிறுப்பாக செல்கிறது.



-கவி-வெண்ணிலவன்
மணமேல்குடி

---

தரணி போற்றும் தமிழ் நாடு இ பேப்பரின் ஆசிரியர் அவர்களுக்கும் அங்கு பணிபுரியும் அனைத்து அன்பு சகோதர சகோதரிகளுக்கும் இனிய வணக்கம் !

பிரதமர் மோடி அவர்களின் ஆர்.எஸ்.எஸ்.தலைமையக விஜயம் பல யூகங்களை ஏற்படுத்தி இருக்கிறது. " மோடி முதுமை அடைந்து வருகிறார். அரசியலில் இருந்து ஓய்வு பெறுவதைப் பற்றி விரிவாக பேசுவதற்காகவே ஆர்எஸ்எஸ் தலைமையகத்துக்கு வந்திருக்கிறார் " என்று சிவசேனை கட்சி ( உத்தவ் தாக்கரே பிரிவு ) மூத்த தலைவர் சஞ்சய் ராவத் ஒரு குண்டைத் தூக்கி போட்டு இருக்கிறார்.

ஆனால் மோடியே நமது பிரதமராக தொடர்வார் என்று மகாராஷ்டிரா முதல்வர் தேவேந்திர ஃபட்நவீஸ் கூறுகிறார்.

பொதுவாக பாஜகவில் 75 வயதுக்கு மேல் உள்ளவர்கள் முக்கிய அரசியல் பதவியை வகிப்பதில்லை என்று எழுதப்படாத சட்டம் இருக்கிறது. ஆனால் மோடி பாஜகவினரிடையே ஒரு அசைக்க முடியாத நபராக தன்னை நிலை நிறுத்திக் கொண்டிருக்கிறார்.

இன்று இந்திய அரசியலே பிரதமர் மோடியை சுற்றித் தான் நடைபெறுகிறது. அவரைத் தெரிந்த அளவுக்கு நாட்டு மக்களுக்கு பாஜகவின் மற்ற தலைவர்களை பற்றி தெரிவதில்லை.

இன்னும் சொல்லப்போனால் பிரதமர் மோடி மட்டுமே உலக நாடுகளிடையே இந்தியாவின் அடையாளமாக திகழ்கிறார்.

ஒரு நபர் இரண்டு தடவைக்கு மேல் நாட்டின் அதிபராக இருக்கக் கூடாது என்று அரசியலமைப்பு சட்டத்திலேயே குறிக்கப்பட்டிருந்தும் அந்த சட்டத்தையே திருத்தி மூன்றாவது தடவையாக அதிபராக பதவி வகிக்கும் சில நாட்டு அதிபர்களும் இருக்கிறார்கள்.

பாஜகவின் 75 வயது என்ற எழுதப்படாத சட்டம் திருத்தப்படக்கூடியதே ! பொறுத்திருந்து பார்ப்போம் என்ன நடக்கிறது என்று !

ஒடிசாவின் முன்னாள் முதல்வர் நவீன் பட்நாயக் கின் தனிச் செயலாளராக பணிபுரிந்து அவரது நம்பிக்கையை பெற்ற தமிழகத்தை சேர்ந்த ஐஏஎஸ் அதிகாரி வி.கே. பாண்டியன் தனது பதவியை ராஜினாமா செய்து விட்டு மாநில அரசியலில் ஈடுபட்டார். அவர் ஒடிசாவின் மண்ணின் மைந்தராக இல்லை என்ற காரணத்தினால் அவர் அந்த மாநில மக்களால் நிராகரிக்கப்பட்டார்.

அவரைத் தொடர்ந்து அவரது மனைவியும் ஒடிசா மாநில மண்ணின் புத்திரியும் ஐ ஏ எஸ் அதிகாரியுமான சுஜாதா ராவுத் கார்த்திகேயனும் தனது பதவியை ராஜினாமா செய்திருக்கிறார்.

சுஜாதா பல பல மாவட்டங்களில் ஆட்சியராக இருந்து வியக்கத்தக்க சாதனைகளை புரிந்து இருக்கிறார். மக்கள் நலத்திட்டங்கள் பலவற்றை அரசியல்வாதிகளுக்கு இணையாக நாடே போற்றும் வகையில் அமல்படுத்தி மக்களின் பேராதரவையும் நன்மதிப்பையும் பெற்றிருக்கிறார்.

அனேகமாக அரசியலில் இறங்குவது தான் அவரது அடுத்த கட்ட நடவடிக்கையாக இருக்கும் என்று யூகிக்கப்படுகிறது.

" ரமலான் விருந்து " சிறுகதை படிக்க ஆவலைத் தூண்டி சிறிதளவும் தொய்வு இல்லாமல் சரளமான நடையில் எழுதப்பட்டிருக்கிறது. ரமலான் நோன்பின் குறிக்கோளை கதையின் கருவாக கையாண்டு இருக்கிறார் ஆசிரியர். பசி அனைவருக்கும் பொதுவானது. அது ஏழை பணக்காரன் என்று பார்ப்பதில்லை. புனித ரமலான் மாதத்தில் ஏழைகளின் தேவையை அறிந்து அதை குறைப்பதற்கு பொருள் உள்ளவர்கள் ஜக்காத்து என்ற நன்கொடையை வாரி வழங்க வேண்டும் என்பதே இஸ்லாமிய இறை தத்துவம்.

" சமையல் அறை ஸ்பெஷல் " பகுதியில் சத்தான சமையல் வகைகளை அறிமுகப்படுத்தி மக்களுக்கு தொண்டாற்றுகிறது நமது பத்திரிகை.

பிகாரில் லாலு - ராப்ரி தேவி ஆட்சி என்றாலே காட்டாட்சி தான் நினைவுக்கு வருகிறது என்று மத்திய உள்துறை அமைச்சர் பேசியிருக்கிறார். அது காட்டாட்சியாகவே இருந்தாலும் எப்போதோ முடிந்து போன ஒரு நிகழ்வை மீண்டும் மீண்டும் பேசுவது சரியில்லை. அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையே நடைபெறும் வார்த்தைப் போர் உலக பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருக்கிறது.




-வெ.ஆசைத்தம்பி
தஞ்சாவூர்

---

வணக்கம் 1.4.25 அன்றைய தமிழ்நாடு இ பேப்பர். காம் முதல் பக்கத்தில் கோடை வெயில் ஒட்டி பறவைகளுக்கு நீரும் உணவும் கொடை அளிப்போம் என்று நம் தமிழக முதல்வரின் பேச்சு மிகவும் பயனுள்ளது. அது போல் ஐந்தறிவுள்ள அந்த பறவைகளுக்கு நீரும் உணவும் கொடுப்பது நம்முடைய கடமை. இன்றைய பஞ்சாங்கம் மிக அருமையாக இன்றைய நாளை எனக்கு அழகாக தொகுத்து சொன்னது. தமிழக முழுவதும் ரமலான் நோன்பு மிக அருமையாக கொண்டாடப்பட்ட படமும் செய்தி மனதுக்கு மகிழ்ச்சியாக படிக்க முடிந்தது. இன்றைய திருக்குறள் மிகவும் அருமை படிக்கும் போது அதன் பொருளும் அந்த குறளின் நிறைவும் மனதுக்குள் வந்து பரவசப்படுத்துவது உண்மை. அந்த பக்கத்தில் உள்ள அனைத்து கோவில் செய்திகளும் மிகவும் அருமையாக ஆவலுடன் படத்துடன் பார்த்து படிக்க வைக்கிறது. இன்றைய நலம் தரும் மருத்துவம் பகுதியில் ஆரஞ்சு பழத்தில் உள்ள சத்துக்களும் பயன்களும் என்று நல்ல அருமையான செய்தியை சொல்லி ஆரஞ்சு பழத்தின் மீது நாட்டம் கொள்ள வைத்த தமிழ்நாடு இ பேப்பருக்கு மனமார்ந்த பாராட்டுக்கள். மாதந்தோறும் மின் கணக்கீடு திட்டம் வரும் விரைவில் என்ற செய்தி மகிழ்ச்சியாக இருந்தது. தினம் ஒரு தலைவர் பகுதியில் வி கல்யாண சுந்தரனார் அவர்களின் வரலாறும் அவரைப் பற்றிய செய்தியும் நல்ல தகவலாக எண்ணி படிக்க வைத்தது மனம் நிறைந்த பாராட்டுக்கள். பல் சுவை களஞ்சியம் பகுதி மிகவும் அருமை அதில் வந்த பிள்ளைகளின் விருப்பம் அறிவோம் என்ற செய்தி மனதை நெகிழ வைத்தது. இதை படிக்கும் பெற்றோர்கள் கண்டிப்பாக பிள்ளைகளின் விருப்பங்களுக்கு மரியாதை கொடுத்து அதை பயன்பாட்டில் கொண்டு வர வேண்டும் என்று எண்ண வைத்தது. சமையலறை ஸ்பெஷல் மிகவும் அருமை. தக்காளியின் மருத்துவ பயன்கள் நல்ல செய்தியாக ஆவலுடன் படிக்க வைத்தது. பிறந்தநாள் விழாவில் நடந்த சுவாரஸ்யம் என்று தன்னுடைய கொள்ளு பேரனுக்காக தாலாட்டு பாடிய ராமதாஸ் பற்றிய செய்தியும் படமும் அந்த குழந்தைக்கு பிறந்தநாள் வாழ்த்து சொல்ல வைத்தது. வேலை வாய்ப்பு கார்னர் மிகவும் அருமை. நல்ல செய்திகளை கொடுப்பதால் வேலையில்லாதவர்கள் அதை பார்த்து விண்ணப்பித்து வேலையில் சேர நல்ல வாய்ப்பு கிடைப்பது உண்மை. மகாராஷ்டிராவின் பீட் மாவட்டத்தில் மசூதியில் குண்டுவெடிப்பு என்ற செய்தி அதிர்ச்சியுடன் படிக்க வைத்தது. அமெரிக்க பெண் ரூபாய் ஆயிரம் வாங்கிய ஓவியம் கோடிக்கணக்கில் ஏலம் போக வாய்ப்பு என்ற செய்தி அமெரிக்காவில் நடப்பதை ஆவலுடன் தெரிந்து கொள்ள முடிந்தது உலக செய்திகளை அழகாக தொகுத்துக் கொடுத்து புதிய விடியலை புத்துணர்வு தரும் விடியலாக மாற்றும் தமிழ்நாடு இ பேப்பர் ஆசிரியர் குழுமத்திற்கு மனமார்ந்த பாராட்டுக்கள்



-உஷா முத்துராமன்







**ANDROMEDA Sales & Distribution Pvt. Ltd.**
requires Fresh / Exp.
★ SALES MANAGERS
★ TEAM LEADERS
★ RM / TELE CALLERS
Attractive Salary + Incentives
Hostel facility for Females
9514782147 / 9500030664
8056258917 / 6380105831

**ஆட்கள் தேவை**
Call Centre-ல் வேலை செய்ய முன் அனுபவம் உள்ள ஆட்கள் தேவை.
Age Limit - 30
Cell: 93600 10801 / 87784 62099
**RRS INFOTECH**
No.141, IInd Floor, ELDAMS Road Bus Stop, Teynampet, Chennai.

**REQUIRED FEMALE TELECALLERS @ KELLYS, KILPAUK**
ONLY 5 HOURS WORK
Time -10:30 am to 03:30pm SALARY + INC
₹10,000/- PM
82481 45918

**WALK-IN-INTERVIEW**
Sales Executive / Manager
Admin Executive / Manager
Sales Coordinator / Tele Callers
*Candidates with 1-2 yrs Exp.
Attractive Salary & Packages
Walk in : 31.03.25 to 05.04.25 (10 am to 5 pm)
**JUVI LIGHTING PRIVATE LTD.,**
Ambattur Industrial Estate (Nr. Bus Depot) Opp: AIEMA Chennai - 58.
Call us: 97907 10589

Ware house-யில் வேலை செய்ய 10 th failed ஆட்கள் தேவை. திருவொற்றியூர், மீஞ்சூர் அருகில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். Two wheeler must
சம்பளம் மாதம் ரூ. 15000 /-
Walk in interview: 02.04.2025
No.3, Jaffer Strang Street, Chennai-1
Ph: 97100 24209 / 044-42427777

**குருக்கள் தேவை**
அருள்மிகு ஸ்ரீ காமாட்சி அம்மன் உடனுறை
ஸ்ரீ ஏகாம்பரேஸ்வரர் ஆலயம்
ராஜாங்குப்பம், வானகரம் வழி, சென்னை-95.
(அப்பல்லோ மருத்துவமனை அருகில்)
ஆலயத்திற்கு நல்ல அனுபவமுள்ள ஆகம விதிகளின் படி அனைத்து பூஜைகளையும் செய்யக் கூடிய நடுத்தர வயதுடைய குருக்கள்
கிரகஸ்தர்களுக்கு தங்க வீடு வழங்கப்படும்
9381006488 / 9382884673

**சென்னை வண்டலூர் அருகில் உள்ள பிரபல அசைவ உணவகத்திற்கு ஆட்கள் தேவை**
- புரோட்டா / கல் மாஸ்டர்
- சவுத் இந்தியன் மாஸ்டர் (Non - Veg)
- கிச்சன் அசிஸ்டண்ட்
- கேப்டன்
- வெயிட்டர்

நல்ல சம்பளம், தங்குமிடம்
அக்ஷயா அவின்யூ, படப்பை
79040 95587 / 98416 18175

**WANTED**
for a well established Group of Institution in Chennai
**PRINCIPAL & FACULTIES** for Pharmacy College offering D.Pharm., B.Pharm., M.Pharm., & Pharm.D courses.
**PRINCIPAL & FACULTIES** for School of Nursing and College of Nursing.
Contact:
8838714806
drmurugesank3@gmail.com

**WANTED**
**SALES EXECUTIVE**
Male/Female (Exp / Fresh)
salary 15k-30k
Vadapalani & Valasaravakkam
Walk in interview - 31.03.2025 to 05.04.2025
**S R JEWELLERY**
No.221/1A, Arcot Rd, Vadapalani, ch-26
7305680916

**SAMSUNG**
Commercial Air Conditioner Dealer
- Telecaller (F)
- Customer Relation Exe (F)
- Accounts Asst (F)
- Service Manager (M)
- Service Supervisor (M)
- AC Technician (M)
- AC Assistant (M)
- Car Driver (M)

**Jai Air Systemss**
Porur & Kodambakkam
98410 42522

**DETECTIVE**
INTERNATIONAL 188, DDC, Ch-32.
Good English Speak & write + Computer Skilled
- DY. MANAGERS
- ADMIN
- MARKETING EXE.

Salary Rs.30,000 to Rs.40,000
Ct : 98842 30407
Apply: thanjai50@gmail.com

**VETRI HOME APPLIANCES**
**WANTED**
- BILLING
- TELECALLER
- ACCOUNTS
- SALESMAN
- BRANCH MANAGER

Male & Female
NO.7, Arcot Road, Porur, Chennai-600016
(Honda Car Showroom Opposite)
88077 97723
95660 33327

**WANTED**
**COUNSELLOR**
**TEACHERS** for NEET Coaching
**OFFICE ASSISTANTS**
With Good communication skills in (English, Tamil, Hindi, Telugu, Kannada & Malayalam)
Apply through
studyservices81@gmail.com
Contact
74187 63222

தாம்பரத்தில் உள்ள சூப்பர் மார்க்கெட்டிற்கு
**கம்ப்யூட்டர் பில்லிங்**
**டெலிவரிக்கு**
ஆண்கள் / பெண்கள் தேவை (25வயதுக்குள்)
உணவு, தங்கும் வசதி இலவசம்
9884720008

**ஆட்கள் தேவை**
லெதர் பர்ஸ் எக்ஸ்போர்ட் கம்பெனிக்கு
1. பேட்டர்ன் மேக்கர்
2. சேம்பிள் மேக்கர்

contact :
9176726452

**JAIGOPAL GARODIA VIVEKANANDA VIDYALAYA**
Avadi, Chennai - 600 054.
**WANTED**
**ACCOUNTS ASSISTANT**
B.Com., WITH TALLY PRIME
**CASHIER** Any Degree
**SECURITY**
**OFFICE CLERK**
**HOUSE KEEPING**
✆730 500 9616
jgvvmanager2020@gmail.com

**ஹெல்பர்கள் தேவை**
மர பர்னிச்சர் தொழிற்சாலைக்கு ஆண் / பெண் ஹெல்பர்கள் தேவை. நேரில் வரவும்.
**ஹெவியா பர்னிச்சர் & இண்டஸ்ட்ரீஸ்**
1/183, ஸ்ரீ செல்வ விநாயகர் நகர் பாயசம்பாக்கம், ரெட் ஹில்ஸ் (டான் பாஸ்கோ பள்ளிக்கு பின்புறம்) சென்னை - 600060
98407 92328

**WANTED**
1. WAREHOUSE EXECUTIVE
2. STORE EXECUTIVE
3. DTP / TYPING

Salary : 18 K to 22 K
PF Applicable
**SREE BALAJI ENTERPRISES**
8248571255

**CNC Lathe Operator + CNC Lathe Programmer**
அனுபவமுள்ளவர்கள் பூந்தமல்லி அருகே உள்ள தனியார் நிறுவனத்திற்கு தேவை
94444 90234

**WANTED**
EDM WIRE CUT OPERATOR
CNC OPERATOR
VMC OPERATOR
ACCOUNTANT (M/F)
GRINDING OPERATOR
Minimum 2 years Experience
Good Salary / PF / Bonus
**SRS TOOLS**
#19, Venkateswara Nagar, Villangadupakkam, Chennai-600052 (Near Madhavaram) Cell: 9003211913

சென்னையில் முன்னணி பணியாளர்கள் டிரான்ஸ்போர்ட் சர்வீசஸ் கம்பெனிக்கு கீழ்கண்ட அலுவலர்கள் தேவை
**சூப்பர்வைசர்**
சம்பளம் ரூ. 18,000 to 20,000
ஸ்ரீ பாக்யலட்சுமி எண்டர்பிரைசஸ்
எண்.1038, தண்டரை மெயின் ரோடு, வயலாநல்லூர், பட்டாபிராம், சென்னை-72
Ct: 98416 98487 / 98416 99928 / 72998 80000
e-mail: hr.admin@sblt.co.in



# பல்சுவை களஞ்சியம்



# மனம் ஒரு மகத்தான சக்தி



ஒரு பெண், லண்டன் நகரத்தில் வாழ்பவர். அங்குள்ள கால நிலைக்கு ரோஜா மலர்கள் நன்கு வளரும். அவை எல்லோருக்கும் பிடிக்கும். ஆனால், இந்த பெண்ணிற்கு ரோஜா மலர்கள் என்றாலே அலர்ஜி. ஒரு ரோஜாப்பூ அருகிலிருந்தாலே, அவர் கண்களிலிருந்து கண்ணீர் வரும், தும்மல் வரும். ரொம்பவும் கஷ்டப்படுவார். அதனால் ரோஜா மலர்கள் அருகில் செல்லாமல் பார்த்துக் கொள்வார்.

இந்த சூழ்நிலையில் ஒருநாள், அவருடைய ஆபீசில் ஒரு மீட்டிங். கலந்து கொள்ளப் போனார். அந்த மீட்டிங் அறைக்குள் நுழைந்தவுடன் அவருக்கு ஒரே அதிர்ச்சி. ஒரு பெரிய டேபிளில் நூற்றுக்கணக்கான ரோஜா மலர்களைக் கொண்டு அலங்கரித்து வைத்திருந்தார்கள்.

ஒரு பூ அருகில் இருந்தாலே நமக்கு அலர்ஜியாச்சே, இவ்வளவு பூக்கள் மத்தியில் நாம் எப்படி மீட்டிங்கை அட்டென்ட் செய்யப் போகிறோம் என்று பயந்தார்.



ஆனால் வேறு வழியில்லாமல், அவருக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் சென்று அமர்ந்தார். பூக்களைப் பார்த்ததுமே அவருக்கு கண்களில் இருந்து நீர் வந்தது, தும்மல் வந்தது, முகமெல்லாம் சிவந்து விட்டது.

மீட்டிங் இன்னும் ஆரம்பிக்கப் படவில்லை. இந்த சூழ்நிலையில், பின்னாலிருந்து ஒருவர் எழுந்து வெளியில் செல்கிறபோது "இந்த பூக்களைப் பாருங்கள். நிஜமான பூக்கள் போலவே இருக்கின்றன.." என்று வியந்தபடி கூறிக்கொண்டே சென்றார்.

அப்பொழுதுதான் இவருக்கு தெரிந்தது, அந்த பூக்கள் உண்மையான பூக்கள் அல்ல. எல்லாமே காகிதத்தால் செய்யப்பட்ட செயற்கை மலர்கள் என்று.

இவர் யோசித்தார்.. "இந்த பூக்கள் எப்படி எனக்கு அலர்ஜியை ஏற்படுத்த முடியும்..?"

இப்படி நினைத்த மறுவினாடியே அவருடைய அலர்ஜிக்குண்டான அறிகுறிகள் அனைத்துமே மறைந்து விட்டன.

இதுதான் நமது மனம்..

இது போல, நம்மில் பலருக்கும் சில அனுபவங்கள் இருக்கலாம். மங்கள நிகழ்வுகளில் பயன்படுத்தப்படும் ரோஜா மலர்களிலிருந்து தெய்வீக மணம் வீசுவதாக நினைக்கும் பலர், ஒரு இறப்பு வீட்டில் பயன்படுத்தப்படும் அதே ரோஜா மலர்களில் இருந்து பிணவாடை வீசுவதாக உணர்வார்கள் என்று சொல்லக் கேள்விப்பட்டுள்ளேன்.

ஊறுகாயைப் பார்க்காமல், தொடாமல், ஊறுகாயை நினைத்தாலே நாக்கில் நீர் ஊறுவதும் கூட மனதின் தாக்கமே.

இந்த மனதால், நோய்களை உருவாக்கவும் முடியும்.. குணப்படுத்தவும் முடியும்..

இந்த மனதால், பிரச்னையை உருவாக்கவும் முடியும்.. அதற்கான தீர்வைத் தரவும் முடியும்.

இந்த உண்மைகளைத் தான், நோபல் பரிசு பெற்ற ரஷ்ய உடலியல் & உளவியல் அறிஞர் ஐவான் பாவ்லோவ் என்பவர், அவரது தொடர் ஆராய்ச்சிகளின் முடிவில் 1897-ல் வெளியிட்ட "Classical Conditioning of Humans" எனும் கோட்பாட்டின் மூலம் அறிவியல் ரீதியாக ஏற்கனவே தெளிவாக விளக்கியுள்ளார்.

எனவே,

நமது மனதின் வலிமையறிந்து, அதனை நம் வசப்படுத்தி செயல் பட்டால், நல்ல உடல் நலத்தோடும் மகிழ்வோடும் வளமாக பல்லாண்டுகளா வாழ முடியும்.



**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி

# மீம்ஸ்







# மழை

மழை பொழியாவிடினும் விவசாய நிலங்கள் வறண்டு போய் எவ்வித விளைச்சலும் இன்றி அல்லல்படுபவனும் விவசாயி.
மழை அதிகமாகப் பொழிந்தாலும் நீரில் மூழ்கிய நெற்பயிர்களையும், முறிந்து சாய்ந்த வாழைகளையும் தொலைக்காட்சி வாயிலாக காண்பித்து கண்ணீர் வடிப்பதும் விவசாயி.
இந்நிலை என்றும் மாறுமோ?
அதனால் தான் வள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே எழுதி வைத்தார்.

கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே
கொடுப்பதூஉம் எல்லாம் மழை.



அன்புடன்
**உ.மு.ந.ராசன் கலாமணி**
4, சுபி இல்லம்
கிழக்குப் பூங்கா தெரு
கோபிச்செட்டிப்பாளையம்

# விடுகதை



| | |
|---|---|
| என்னங்க ஏன் அடிக்கடி சமையல் ரூம் பக்கம் போறீங்க? | டாக்டர் தான் சுகர் இருக்கானா அடிக்கடி செக் பண்ண சொன்னாரு. |
| தானத்தில் பெரிய தானம் எது? | மைதானம். |
| ஏன்டா நாய் படம் வரைந்து விட்டு வாய் மட்டும வரையாமல் வச்சி இருக்க? | அது வாயில்லா பிராணி சார். |
| டாக்டர் இவ்வளவு மாத்திரையும் இரண்டு நாள்ல சாப்பிட்டு முடிக்கும் என்று சொன்னிங்களே ஏன்? | இரண்டு நாட்களுக்கு அப்புறம் எக்ஸ் ஸ்ப்ரே முடிந்துவிடும். |
| கும்பகர்ணன் மாத கணக்கில் தூங்கினான் அது என்ன காலம்? | கொசுவே இல்லாத காலம். |

# ஜோக்ஸ்



**தத்துவம்**
ஏழு பரம்பரைக்கு உட்கார்ந்து சாப்பிடுற அளவுக்கு சொத்து இருந்தாலும் பாஸ்ட் புட்க்கு போனா நின்று தான் சாப்பிடணும்.

-------------------------------------------------------------------

**தோழிகள் இருவர் பேசிக் கொள்கிறார்கள்**
ராதா: நேத்து உன் லவ்வரை பார்க்க கூஷநநஉh-க்கு போறதா சொன்னியே! என்ன ஆச்சு?

கீதா: அட! அத ஏண்டி கேக்குறா? வாத்தியாரை லவ் பண்ணது தப்பா போச்சு!


ராதா: ஏன்! என்ன ஆச்சு?

கீதா: கொஞ்ச நேரம் லேட்டா போனேன். அதுக்காக படகு மேல ஏறி நிற்க சொல்லிட்டாருடி!

ராதா: ஹா! ஹா! ஹா!

----------------------------------------------------

**முத்தம்**
கணவன்: டார்லிங்! நான் இந்த மாச சம்பளத்துக்கு பதிலா



500 முத்தம் தரலாம்-னு நினைக்கிறேன். என்ன டிம தானே?

மனைவி: எனக்கொன்னும் பிரச்சினை இல்லை. நானும் அப்படியே கேபிள் காரனுக்கு 30 முத்தம், பால்காரனுக்கு 50 முத்தம், பேப்பர் காரனுக்கு 20 முத்தம், மளிகை கடைகாரனுக்கு 150 முத்தம். அவுஸ் ஓனருக்கு 250 முத்தம் கொடுத்துடுறேன் என்ன? ஓ.கே. தானே?

கணவன்: ???

----------------------------------------------------

**தொலைக்காட்சி விளம்பரம்**
வரும் சனிக்கிழமை இரவு பத்து மணிக்கு... உங்கள் அபிமான தொலைக்காட்சியில்... அற்புதமான ஹாலிவுட் திரைப்படம்... தமிழில்

சிலந்தி அண்ணாச்சி (Spiderman)

உங்களின் விடுமுறை நாளை குதூகலமாக கொண்டாட ஞாயிற்றுகிழமை மதியம் 2 மணிக்கு

சூப்பர்ஹிட் ஹாலிவுட் திரைப்படம்

"அம்மாச்சி திரும்ப வந்தாச்சு" (Mummy Returns)

முற்றிலும் தமிழில்... காணத்தவறாதீர்கள்!!!




# குழந்தைகளின் கை வண்ணம்

சிறுவர் உலகம்





**க.முத்துராமலிங்கம்**
9 ஆம் வகுப்பு
P.K.N. மேல்நிலைப் பள்ளி திருமங்கலம்





**கு.சத்யானந்தம்**
9-ம் வகுப்பு 'ஆ'பிரிவு;
ஸ்ரீ குருஞான சம்பந்தர் மேல்நிலைப்பள்ளி;
தருமபுரம்-மயிலாடுதுறை-1*

# சுயநலமாக இருக்காதே

ஒரு நாள் கடவுள் வயதான கிழவன் போல மாறுவேடத்தில் ஊருக்குள் நடந்து வந்து கொண்டு இருந்தார். அப்பொழுது முனிவர் ஒருவர் ஒரு மரத்தின் அடியில் அமர்ந்து தியானம் செய்து கொண்டு இருந்தார். கடவுள் அவரைப் பார்த்து கொண்டே அடுத்த ஊரிர்க்கு சென்றார். அப்பொழுது சிறுவன் ஒருவன் மரக்கன்று ஒன்றை நட்டுவிட்டு பின் கண்களை மூடி இறைவனை வணங்கிக் கொண்டிருந்தான். இதையெல்லாம் கடவுள் பார்த்து விட்டு அங்கிருந்து சென்று விட்டார். மறுநாள் மீண்டும் கடவுள் வயதான கிழவன் தோற்றத்தில் முனிவரிடம் சென்றார். முனிவர் தியானத்தை முடித்துவிட்டு கண்களைத் திறந்ததும். கடவுள் அவர் முன்னே வயதான கிழவன் போல நின்றிருந்தார். அப்பொழுது முனிவர் கேட்டார் என்ன வேண்டும் ஐயா என்று. அதற்கு கடவுள் முனிவரிடம் கேட்டார். நீங்கள் எதற்காக தவம் செய்கிறீர்கள் என்று. அதற்கு முனிவர் கூறினார். நான் நீண்ட காலம் வாழ வேண்டும், எனக்கு எந்த நோய் நொடிகள் வராமல் இருக்க வேண்டும், உணவு பற்றாக்குறை இல்லாமல் நான் இருக்க வேண்டும் என்று.

இதையெல்லாமல் கடவுள் கேட்டுவிட்டு சரி என்னுடன் சற்றுதூரம் வருவீர்களா என்று முனிவரிடம் கேட்டார். எனக்காக இந்த உதவியை செய்யுங்கள் என்று கடவுள் கூறினார். சரி என்று முனிவர் கூறினார்.பின் கடவுளும், முனிவரும் அடுத்த ஊரில் உள்ள சிறுவன் இருக்கும் இடத்திற்கு சென்றனர். அப்பொழுது அந்த சிறுவன் அவன் நட்டு வைத்த மரக்கன்றிக்கு தண்ணீர் ஊற்றி விட்டு அருகில் அமர்ந்து இறைவனை வணங்கிக் கொண்டிருந்தான். சிறுவன் கண்களைத்திறந்ததும் எதிரே கடவுள் நின்றதைக் கண்ட சிறுவன் என்ன வேண்டும் தாதா. எதாவது உதவி வேண்டுமா என்று கேட்டான். அதற்கு கடவுள் கூறினார் ஒன்று வேண்டாம் நீ கடவுளிடம் என்ன வேண்டிக் கொண்டிருந்தாய் அதைக் கொஞ்சம் கூறு என்று.

அதற்கு சிறுவன் கூறினான் நான் நட்டுவைத்த மரம் நன்றாக வளர வேண்டும் என்று இறைவனிடம் வேண்டிக் கொண்டேன் .அதற்கு கடவுள் கேட்டார் எதற்காக நன்றாக வளர வேண்டும் .அதனால் உனக்கு என்ன பலன் என்று. அதற்கு சிறுவன் கூறினான் மரம் நன்றாக வளர்ந்தால் எல்லோருக்கும் சுவாசிக்க இயற்கையான காற்று கிடைக்கும். மழை வளம் பெருகும். இயற்கையான காய், கனிகள் கிடைக்கும். எல்லோரும் நோய் நொடி இல்லாமல் உயிர் வாழமுடியும்.

அதற்காகத்தான் நான் இறைவனிடம் வேண்டுகிறேன் என்று. கடவுள் அப்படியா என்று கேட்டார்.ஆமாம் என்று கூறி விட்டு சிறுவன் அங்கிருந்து சென்று விட்டான். கடவுள் முனிவரிடம் கேட்டார். நீங்கள் என்ன புரிந்து கொண்டீர்கள் சிறுவன் பேசியதிலிருந்து. அதற்கு முனிவர் கூறினார்.

இவ்வளவு நாட்கள் நான் சுயநலமாக இருந்திருக்கிறேன்.இன்று ஒரு சிறுவன் என் தீய என்னங்களை மாற்றி விட்டான். நீமேல் ஒரு போது சுயநலமாக இருக்க மாட்டேன் என்று கூறினார். பிறகு இறைவன் முனிவருக்கு கடவுளாகக் காட்சித் தந்து அங்கிருந்து மறைந்தார்.



இயற்றியவர்
**சுமதி முருகன்**

# வண்ண மீன்களும் முதலையும்



ஒரு நாள் நதியில் வண்ண மீன்கள் தன் நண்பர்களுடன் தண்ணீரில் நீந்தி விளையாடிக் கொண்டிருந்தன.
அப்பொழுது அந்த பக்கம் முதலை ஒன்று நீந்தி சென்று கொண்டிருந்தது.
அதை கண்ட வண்ண மீன்கள் முதலையைப் பார்த்து கேளி செய்து சிரித்து கொண்டிருந்தது. முதலை கேட்டது ஏன் என்னைப் பார்த்து சிரிக்கிறிர்கள் வண்ண மீன்களே என்று.
அதற்கு வண்ணமீன்கள் சொன்னது நீ கருப்பாக ஒரே வண்ணத்திலும் அழகு இல்லாமலும் இருக்கிறாய். நாங்கள் எல்லாம் வண்ணத்திலும் அழகாக இருக்கிறோம் என்று.
அதை கேட்ட முதலை சிறிது மனம் வருந்தியது. பின் முதலை சொன்னது வண்ண மீன்களிடம் நான் நதியை விட்டு வெளியே சென்று மீண்டும் நதிக்குள்ளே வருவேன் உங்களால் அதை செய்ய முடியுமா என்றது.. அதை கேட்ட வண்ண மீன்கள் முகம் வாடியது.
கதை கருத்து- திறமைகளை மட்டும் பார்க்க வேண்டும்.
அழகும், வண்ணங்களும் அல்ல.

-இயற்றியவர்
**சுமதி முருகன்**

சிறுவர் பாடல்!

# உண்மை பேசுவோம்!



உண்மையைப்
பேசுவோம்
உணர்ந்துமே
பேசுவோம்
உணராத பேர்களை
உண்மையில் ஏசுவோம்!
அண்மையில் இருப்பதால்
அதலைக்காய் இனிக்குமா?
அருகாமை என்பதால்
ஆப்பிள் கசந்து
போகுமா?
பாகு - அற்றகாய் அதனை
பாகற்காய் என்கிறோம்
வாழவைக்கும் மரம்
அதனால்
வாழைமரம் என்றனர்!
எண்ணுகின்ற செயலிலே
ஏற்றம் வரும் என்பதால்
உண்ணுகின்ற
உணவில் கூடஉண்மை
சொல்லித் தந்தனர்!
உண்மையால் உயரலாம்
பொய்மையால் தாழ்ச்சியே
திண்ணிய மனத்துடன்
திடமுடள் வாழலாம்!

- அருப்புக்கோட்டை
**செல்வம்**

# உதவும் கரங்கள்




அன்று மாலை நேரம் பள்ளியில் இருந்து கண்ணனும், ராமுவும் வீட்டிற்கு வந்து கொண்டு இருந்தனர். அன்று மழை மிகவும் கனமாக பெய்து கொண்டு இருந்தது.

கண்ணனும் ராமுவும் தன் குடையில் மழையில் நனையாமல் மழையை ரசித்து கொண்டு சாலையோரமாக நடந்து வந்தனர். அப்பொழுது அங்கு வயதான பாட்டி மழையில் நனைந்து கொண்டு உடல் நடுங்கி தள்ளாடி நடந்து சென்று கொண்டு இருந்தார். அதை பார்த்த ராமு தன் நண்பன் கண்ணனிடம் சொன்னான் பாவம் அந்த பாட்டி வயதானகாலத்தில் மழையில் நனைந்து உடல் நடுங்கி செல்கிறார். நான் என் குடையை அவர்களுக்கு கொடுக்க போகிறேன் என்று. ஏன் நாம் குடையை அவர்களுக்கு கொடுக்க வேண்டும். பாட்டி அப்படியே செல்லடும் என்று. ராமு சொன்னான் நான் பாட்டிக்கு என் குடையை தருகிறேன் நீ உன் குடையில் என்னை அழைத்து செல் என்று அதை கேட்ட கண்ணன் முகத்தை கோபமாக வைத்து கொண்டு சரி என்றான். ராமு அந்த பாட்டியிம் சென்று குடையை கொடுத்து மழையில் நனையாமல் செல்லுங்கள் என்று. அதை கேட்ட பாட்டி மகிழ்ச்சியுடன் குடையை வாங்கிக் கொண்டு ராமுவைப் பார்த்து இந்த சிறு வயதில் நல்ல பண்பு உள்ளவனாகவும் பிறருக்கு உதவும் குணம் உடையவனாகவும் இருக்கிறாய் என்று நினைத்து கொண்டு பாட்டி அங்கிருந்து சென்றார்.

மறுநாள் பள்ளியை விட்டு வெளியே வந்த ராமுவிடம் பாட்டி தன் கையில் உள்ள குடையை கொடுத்து விட்டு நன்றி கூறிவிட்டு சென்றார். அன்று காலையில் பள்ளியில் வெளியே கண்ணன் அழுதபடி நின்று கொண்டு இருந்தான். அந்த வழியே சென்ற அந்த பாட்டி கண்ணனைப் பார்த்து ஏன் பள்ளிக்கு செல்லாமம் அழுதுகொண்டு இருக்கிறாய் என்று கேட்டார். அதற்கு கண்ணன் சொன்னான் நேற்று ஆசிரியர் புது நோட்டு ஒன்று வாங்கி வர சொன்னார். நான் அதை மறந்து விட்டேன். இப்போது ஆசிரியர் அதை கேட்பார்கள். என்னிடம் நோட்டும் இல்லை வாங்க பணமும் இல்லை என்று அழுதுகொண்டே கூறினான். அதை கேட்ட பாட்டி பக்கத்தில் உள்ள கடைக்கு சென்று ஒரு நோட்டை வாங்கி வந்து கண்ணிடம் கொடுத்து வகுப்பிற்கு செல் என்றார்கள். அப்பொழுது கண்ணன் நினைத்தான் நான் அன்று பாட்டிக்கு உதவ மனம் வரவில்லை. இன்று அவர் எனக்கு உதவி செய்கிறார் என்று நினைத்து கொண்டு பள்ளிக்கு சென்றான்.

இயற்றியவர்
**சுமதி முருகன்**

# மற்றவர் பொருளுக்கு ஆசைப்படாதே



அன்று தன் வகுப்பிற்குள் ஆசிரியை வந்தார். அப்பொழுது மாலா என்ற மாணவி ஆசிரியரிடம் என் பென்சிலைக் காண வில்லை என் அம்மா புதிதாக வாங்கி கொடுத்தார்கள். அதை இப்பொழுது காண வில்லை என்று.
ஆசிரியர் கூறினார் சரி மாலா உன் பென்சிலை நான் தேடி தருகிறேன் என்று. மாலாவும் சரிங்க ஆசிரியரே என்று கூறி விட்டு சென்றாள். அடுத்த நாள் வகுப்பில் யோகேஷ் வந்து ஆசிரியரிடம் என் அழிப்பானைக் காண வில்லை. என் அம்மா அழிப்பான் எங்கே என்று என்னைக் கேட்பார்கள். இல்லை என்றால் என்னை அடிப்பார்கள் என்று கூறினான். ஆசிரியர் கூறினார் சரி யோகேஷ் நான் தேடி தருகிறேன் என்று. பிறகு ஆசிரியை சிறிது நேரம் யோசித்துப் பார்தார். எப்படி பல பொருட்கள் காணாமல் போகிறது என்று. பிறகு பாடத்தை நடத்த தொடங்கினார். அடுத்த நாள் ஆசிரியை தன் வகுப்பிற்கு உள்ளே வந்து வருகைப்பதிவை எடுத்து முடித்தவுடன் வகுப்பு இல்லை என்று வெளியே சென்று விட்டார். அப்பொழுது உடற்பயிற்சி ஆசிரியர் வகுப்புகுள்ளே வந்து மாணவர்களை வரிசையாக நிற்கச்சொன்னார்.
மாணவர்கள் அனைவரும் வரிசையாக ஆசிரியர். பின்னே விளையாட்டு மைதானம் சென்றனர். அப்பொழுது விபா மட்டும் வரிசையில் நிற்காமல் அமர்ந்து இருந்தால். விபாவின் தோழி அழைத்தாள் வா விபா என்று அதற்கு விபா கூறினாள் தண்ணீர் குடித்து விட்டு கடைசியில் வருகிறேன் என்று
.
அனைத்து மாணவர்களும் சென்ற பின் விபா தன் முன்னே உள்ள புத்தகப்பையில் உள்ள பெட்டி யை எடுத்து தன் புத்தகப்பையில் வைத்துக் கொண்டாள். இதை எல்லாம் தன் வகுப்பு ஆசிரியர் அந்த வழியே வரும்போது ஜன்னலில் இருந்து பார்த்து கொண்டு இருந்தார். வகுப்பில் இருந்து வெளியே வந்தாள் விபா.ஆசிரியர் கேட்டார் ஏன் விபா உடற்பயிற்சிக்காக விளையாட்டு மைதானம் செல்ல வில்லை என்று. அதற்கு விபா தண்ணீர் குடித்து கொண்டு இருந்தேன் ஆசிரியை என்று. சரி விபா உடனே செல் உடற்பயிற்சி வகுப்பிற்கு என்று ஆசிரியர் கூறினார். விபா சென்றதும் பிறகு ஆசிரியர் விபாவின் புத்தகப்பையைத் திறந்துப் பார்தார். அதை பார்த்ததும் மனம் வருந்தினார். பிறகு ஆசிரியர் அங்கிருந்து சென்று விட்டார். மறுநாள் வகுப்பில் மாணவர்கள் அனைவரும் பேசிக்கொண்டு இருந்தனர். அப்பொழுது ஆசிரியர் மாணவர்களிடம் நான் கதை ஒன்று கூறப் போகிறேன் என்று. அதை கேட்ட மாணவர்கள் பேசுவதை நிறுத்தி விட்டு ஆர்வத்துடன் அமைதியாக இருந்தனர். ஆசிரியர் கதையின் தலைப்பினை கூறினார். மற்றவர் பொருளுக்கு ஆசை படாதே. கதையை அழகாக் கூறும் போது மாணவர்கள் அனைவரும் ஆர்வத்துடன் கவனித்துக் கொண்டு இருந்தனர்.ஆசிரியர் கதையைக் கூறி
முடித்து விட்டு மாணவர்களிடம் ஆசிரியர் கேட்டார் இந்த கதையின் மூலம் என்ன தெரிந்து கொண்டீர்கள் என்று அதை கேட்ட மாணவர்கள் சிலர் தன் கருத்துக்களை எழுந்து கூறினர். ஆசிரியர் இரண்டு மாணவர்கள் பெயரைக் கூப்பிட்டு கேட்டார். அதில் விபாவும் ஒன்று விபாவைப் பார்த்து கேட்டார் உன் கருத்து என்ன என்று. அப்போது விபா கூறினாள் ஆம் மற்றவர் பொருளுக்கு ஆசைப் பட கூடாது என்று. மனம் வருந்தி தன் தவறினை உணர்ந்து கூறுவது அவள் முகத்தில் தெரிந்தது.
பிறகு வகுப்பு முடிந்து அனைவரும் வீ ட்டிற்கு சென்று விட்டனர்.

மறுநாள் காலையில் ஆசிரியர் வகுப்பிற்கு உள்ளே வந்ததும் மேசையைப் பார்த்தார். மேசையின் மேல் பல வகை பென்சில் ,அழிப்பான், பெட்டி என்று பல பொருட்கள் இருந்தன. அன்று விபாவும் தன் சிரிப்பு முகத்துடன் ஆசிரியருக்கு வணக்கம் கூறினாள். அப்போது வகுப்பிற்கு உள்ளே வந்த மாணவர்கள் மேசையைப் பார்த்து இது என் பெட்டி என் பென்சில் என் அழிப்பான் என்று முகமகிழ்சியுடன் இருக்கையில் அமர்தனர். ஆசிரியர் கூறினார் இந்த பொருட்களை வாங்க எவ்வளவு கஷ்டப்பட்டு இருப்பார்கள் உங்கள் பெற்றோர்கள். இப்படி கீழே போட்டு வைத்திருந்தீர்கள் வகுப்பை பெருக்கும் ஆயம்மா எடுத்து வைத்திருகிறார் என்று நினைக்கிறேன். ஆசிரியர் மாணவர்களுக்கு யாருடையப் பொருள் என்ன என்பதை கேட்டு பொருட்கள் அனைத்தையும் கொடுத்தார். மாணவர்களும் மகிழ்ச்சியுடன் தன் பொருட்களை வாங்கி சென்றனர்.

இயற்றியவர்
**சுமதி முருகன்**

# முதல் நாள் காலை பங்குனிஉத்திரபிரம்மோற்சவம்




வாழைப்பந்தல் அருள்மிகு ஸ்ரீதர்மசம்பவர்த்தினி சமேத அருள்மிகு ஸ்ரீபக்தவச்சலேஸ்வரர் திருக்கோயில் பார் போற்றும் பங்குனி உத்திர பிரம்மோற்சவ பெருவிழா 2025.

# ஒழுக்கத்துடன் கூடிய கல்வியே சிறந்தது



**காவல்துறை அதிகாரி பேச்சு**

**வந்தவாசி , ஏப் 02:**
திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அடுத்த தெள்ளார் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி(ஆதிதிராவிடர் குடியிருப்பு) மாணவர்களுக்கு ஸ்ரீ கிருஷ்ணா கல்வி மையம் சார்பில் 'உடல் நலமும் மன நலமும்' விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்த நிகழ்விற்கு பள்ளி தலைமை ஆசிரியை ராஜீவி தலைமை தாங்கினார். ஸ்ரீகிருஷ்ணா கல்வி மைய முதல்வர் பா. சீனிவாசன், ஓய்வுபெற்ற காவல்துறை அதிகாரி மா.கதிரொளி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பட்டதாரி ஆசிரியர் நெடுமாறன் வரவேற்றார். சிறப்பு அழைப்பாளராக, ஓய்வுபெற்ற வட்டார கல்வி அலுவலர் புலவர் ந. பானு பங்கேற்று, கோடை விடுமுறையை பயனுள்ள முறையில் கழிக்க வேண்டும் என்பதை பற்றியும், ஏரி குளம், குட்டைகளில் மாணவர்கள் தனியாக சென்று குளிக்க கூடாது.

பெற்றோர் துணையுடன் செல்ல வேண்டும் என்று வலியுறுத்தினார்.மேலும் உடல்நலம் மற்றும் மனநலம் சார்ந்த திறன்கள் பற்றியும் மாணவர்களுக்கு விளக்கினார். மேலும் பல்திறன் போட்டிகளில் சிறப்பிடம் பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பள்ளி ஆசிரியை அஸ்மாபீ வாழ்த்துரை வழங்கினார்.

இறுதியில் பட்டதாரி ஆசிரியர் ராஜசேகர் நன்றி கூறினார்.

# இலவச ஆம்புலன்ஸ் சேவை





கன்னியாகுமரி மாவட்டம் விளவங்கோடு தொகுதியில் உள்ள மலைப் பகுதி மக்களுக்காக பத்துகாணி ஆரம்ப சுகாதார நிலையத்தில் இலவச ஆம்புலன்ஸ் சேவை துவக்கப்பட்டு உள்ளது.

# 8வது நாள் காலை பல்லக்கில் ஊர்வலம்



8வது நாள் காலை பல்லக்கு- வெண்ணைத்தாழிகண்ணன் திருக்கோலத்தில் ஊர்வலம் வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார்.

## வாசவி கன்னிகா பரமேஸ்வரி அம்மனுக்கு சிறப்பு ஹோமங்கள் 36 விதமான அபிஷேகங்கள்,




தெலுங்கு வருடப்பிறப்பை முன்னிட்டு இராமநாதபுரம் வாசவி கன்னிகா பரமேஸ்வரி அம்மனுக்கு சிறப்பு ஹோமங்கள் 36 விதமான அபிஷேகங்கள், பஜனைகள்,கோடி நாம சங்கல்பம், ஜெய் ஜெய் வாசவி எழுதுதல், பஞ்சாங்கம் வாசித்தல், அம்மனுக்கு சிறப்பு அலங்கார ஆராதனைகள் செய்து ஆரிய வைசிய சமூகத்தினர் அனைவரும் ஒன்று கூடி யுகாதியினை சிறப்பாக கொண்டாடினார். **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் S. நிர்மலா**

## திருப்புளியங்குடி காய்சினி வேந்தப்பெருமாள் கோவில் பங்குனி விழா தெப்ப உற்சவம்



நவதிருப்பதி தலங்களில் ஒன்றான தூத்துக்குடி மாவட்டம் திருப்புளியங்குடி காய்சினி வேந்தப்பெருமாள் கோவில் பங்குனி விழா தெப்ப உற்சவம் நடந்தது.

## கும்பாபிஷேகத்துக்காக யானைகள் மீது வைத்து புனிதநீர்



மயிலாடுதுறை மாவட்டம் வழுவூர் வீரட்டேஸ்வரர் கோவில் கும்பாபிஷேகத்துக்காக யானைகள் மீது வைத்து புனிதநீர் எடுத்து வரப்பட்டது.

## நீர் மோர் பந்தல் திறப்பு விழா



அரசம்பட்டி ஓம் சக்தி கோவில் சார்பில் தண்ணீர் பந்தல் திறப்பு கிருஷ்ணகிரி மாவட்டம் அரசம்பட்டி ஓம் சக்தி கோயில் சார்பாக நீர் மோர் பந்தல் திறப்பு விழா நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் ஓம் சக்தி மணி நயனார், நடராஜன் மற்றும் ஓம் சக்தி மன்ற நிர்வாகிகள் ஊர் பொதுமக்கள் திரளானோர் பலர் கலந்து கொண்டனர் .

**தகவல்: சிவசக்தி ஊத்தங்கள்**

## 100 சதவீதம் உயர்கல்வி



தூத்துக்குடி மாவட்டம் நமது மாவட்டத்திலுள்ள அனைத்து மாணவர்களையும் 100 சதவீதம் உயர்கல்வி யில் இணைக்க முழுமையான அர்ப்பணிப்போடு பணியாற்ற வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் க.இளம்பகவத், உரையாற்றினார்.

## பேராவூரணியில் பள்ளி ஆண்டு விழா



**பேராவூரணி, ஏப்.2:**
தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணி வடகிழக்கு ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் முப்பெரும் விழா நடைபெற்றது.

விழாவிற்கு பேராவூரணி வட்டார கல்வி அலுவலர் கலா ராணி தலைமை வகித்தார்.வட்டார கல்வி அலுவலர் அங்கயற்கண்ணி, பேராவூரணி வட்டாட்சியர் சுப்பிரமணியன், பேராவூரணி வட்டார வள மைய மேற்பார்வையாளர் கோகுலகிருஷ்ணன், ஓய்வு பெற்ற வட்டார கல்வி அலுவலர் ரவிச்சந்திரன், கல்வியாளர் கே வி கிருஷ்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பேராவூரணி சட்டமன்ற உறுப்பினர் நா. அசோக்குமார் மற்றும் பேராவூரணி பேரூராட்சி பெருந்தலைவர் திருமதி சாந்தி சேகர் ஆகியோர் பரிசுகள் வழங்கி பாராட்டினர்.. நிகழ்விற்கு பேராவூரணி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் முதல்வர் திருமலைச்சாமி, வட்டாட்சியர் சுகுமார், ஆடுதுறை DIET முதுநிலை விரிவுரையாளர்கள் பால்ராஜ் மற்றும் சுபாஷ் சந்திர போஸ் . பேராவூரணி மருத்துவர் துரை நீலகண்டன், திருக்குறள் பேரவை தலைவர் ஆறு நீலகண்டன், சேது பாவாசத்திரம் துணை காவல் ஆய்வாளர் மனோஜ் குமார் கல்வியாளர் சாதிக் அலி ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினர்.

முப்பெரும் விழாவினை பள்ளியின் பொறுப்பு தலைமை ஆசிரியர் காஜா முகைதீன் மற்றும் ஆசிரியர்கள் ரேணுகா, சுபா, தற்காலிக ஆசிரியர்கள் மலர்விழி, நித்யா மற்றும் பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்கள் செய்து இருந்தனர்..

**பேராவூரணி த.நீலகண்டன்**

## ரவுசு மணி

எதிர்பார்ப்புகள்
இல்லாமல்
வாழ்ந்தால்
ஏமாற்றம்
இல்லாமல்
வாழலாம்



**ராஜகோபாலன்.J**
சென்னை 18

# இயல் இசை நாடக மன்றத்தின் கலைச்சங்கமும் கிராமிய கலை நிகழ்ச்சி



**திருவண்ணாமலை,ஏப்2:**
திருவண்ணாமலை மாவட்டத்தில் இயல் இசை நாடக மன்றம் சார்பாக கலை சங்கமம் கிராமிய கலை நிகழ்ச்சி நடைபெற்றது.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் சார்பில் மாவட்டம் தோறும் கலை சங்கமும் கிராமிய கலை நிகழ்ச்சி தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் தலைவர் வாகை சந்திர சேகர் அவர்கள் மற்றும் உறுப்பினர் ,செயலர் திருமதி விஜயதாயன்பன் அவர்களின் வழிகாட்டுதல் படி நடத்தப்பட்டு வருகிறது.

அதன்படி திருவண்ணா மலை மாவட்டத்தில் ஆரணி கோட்டை மைதானத்தில் நடந்த நிகழ்ச்சிக்கு பொதுக்குழு உறுப்பினர் வி கே வாசுதேவன் தலைமை வகித்தார்.

இந்நிகழ்ச்சியினை ஆரணி நாடாளுமன்ற உறுப்பினர் எம் எஸ் தரணி வேந்தன் அவர்கள் கொடி அசைத்து துவக்கி வைத்தார் .இதில் மங்கல இசையுடன் நிகழ்ச்சி தொடங்கப்பட்டு சிலம்பம், கரகாட்டம், கட்டைகூத்து , பரத நாட்டியம், பம்பை உடுக்கை, 10 க்கும் மேற்பட்ட கலை குழுக்கள் தாங்கள் திறமைகளை வெளிப்படுத்தினர் .

மேலும் ஆரணி வி சிவா அம்மு அவர்கள் ஒருங்கிணைப்பும் நாடக குழு மூலமாக பல்வேறு நாடகக் கலைஞர்கள் மேடையில் பல விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தினர்.

இந்நிகழ்வில் ஆரணி நகர மன்ற தலைவர் ஏசி மணி மாவட்ட துணைச் செயலாளர் ஜெயராணி ரவி ஒன்றிய செயலாளர்கள் அன்பழகன், சுந்தர், துரை மாமது ,மோகன் ,கே டி ராஜேந்திரன் முள்ளிப்பட்டு ரவி மற்றும் நாடகக் கலைஞர் சு.குமணன் கலை ஆர்வலர்கள் பொது மக்கள் கலந்து கொண்டனர் .

விழாவில் நன்றியுரை திருவண்ணாமலை குரு கண்ணன் அவர்கள் தெரிவித்தார்.

# தமிழகத்தில் 40 சுங்கச்சாவடிகளில் 10% வரை கட்டணம் உயர்ந்தது!

**சென்னை, ஏப்.2:**

*தமிழகத்தில் உள்ள 40 சுங்கச்சாவடிகளில் நேற்று நள்ளிரவு முதல் சுங்கக்கட்டண உயர்வு அமலுக்கு வந்தது.*




*தமிழகத்தில் மொத்தம் 5,381 கி.மீ. தூரத்துக்கு நெடுஞ்சாலைகள் உள்ளது. இந்த நெடுஞ்சாலைகளில் தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையத்தின் கீழ் 78 சுங்கச்சாவடிகள் நிறுவப்பட்டு, சுங்கக்கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் தேசிய நெடுஞ்சாலைகளில் உள்ள சுங்கச்சாவடிகளில் ஆண்டுக்கு ஒரு முறை, 2 கட்டங்களாக ஏப்ரல் மற்றும் செப்டம்பர் மாதங்களில் சுங்கக் கட்டணம் உயர்த்தப்படுவது வழக்கம். இதன்படி சுங்கக் கட்டணம் 5 சதவீதத்தில் இருந்து 10 வரை உயர்த்தி வசூலிக்கப்படும்.*

*அந்த வகையில் நடப்பாண்டில் தமிழகத்தில் உள்ள 78 சுங்கச்சாவடிகளில் முதல் கட்டமாக 40 சுங்கச்சாவடிகளின் கட்டணத்தை ஏப். 1-ம் தேதி முதல் உயர்த்தி வசூலிக்க தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையம், சுங்கச்சாவடிகளுக்கு சுற்றறிக்கை அனுப்பியிருந்தது. அதன்படி சென்னையை அடுத்துள்ள வானகரம், சூரப்பட்டு சுங்கச்சாவடிகள், சென்னை - கொல்கத்தா நெடுஞ்சாலையில் உள்ள நெல்லூர் சுங்கச்சாவடி, தாம்பரம் - திண்டிவனம் நெடுஞ்சாலையில் உள்ள ஆத்தூர் சுங்கச்சாவடி, செங்கல்பட்டில் உள்ள பரனூர் ஆகிய சுங்கச்சாவடிகளில் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது.*

*அதே போல் சென்னை - பெங்களூரு நெடுஞ்சாலையில் உள்ள ஸ்ரீபெரும்புதூர், பட்டரைப்பெரும்புதூர், அரியலூர் மாவட்டம் மணகெதி, திருச்சி மாவட்டம் கல்லக்குடி, வேலூர் மாவட்டம் வல்லம், திருவண்ணாமலை மாவட்டம் இனம்கரியாந்தல், விழுப்புரம் மாவட்டம் தென்னமாதேவி, நாங்குநேரி, பள்ளிக்கொண்டா, புதுகோட்டை மாவட்டம் வாகைகுளம், எஸ்விபுரம், சாலைபுதூர், வாணியம்பாடி, திருப்பாச்சேத்தி உள்ளிட்ட 40 சுங்கச்சாவடிகளில் சுங்கக் கட்டண உயர்வு நேற்று நள்ளிரவு முதல் அமலுக்கு வந்தது.*

*கார், ஜீப், வேன், ஆட்டோ, லாரி, பேருந்துகள் என ஒவ்வொரு வகை வாகனங்களுக்கு ஏற்ப 5 சதவீதம் முதல் 10 சதவீதம் வரை சுங்கக்கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. அந்த வகையில் கார் உள்ளிட்ட 4 சக்கர இலகு ரக வாகனங்களுக்கு ரூ.5 கூடுதலாக வசூலிக்கப்படும். பேருந்து, லாரி உள்ளிட்ட கனரக வாகனங்களுக்கு அச்சுகள் எண்ணிக்கை அடிப்படையில் ரூ.15 முதல் ரூ.30 வரை கூடுதல் கட்டணம் வசூலிக்கப்படும். இந்த கட்டணங்கள் தொடர்பான அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது. தேசிய நெடுஞ்சாலை ஆணைய இணையதளத்தில் கட்டண விவரங்களை தெரிந்து கொள்ளலாம். சென்னையை அடுத்த பரனூர் சுங்கச்சாவடியில் ரூ.5 முதல் ரூ.25 வரை கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது. இந்த சுங்கச்சாவடியில் கார், ஜீப், வேன், இலகுரக வாகனங்கள் ஒரு முறை செல்வதற்கு ரூ.75, இலகுரக வர்த்தக வாகனங்கள் செல்வதற்கு ரூ.120, பேருந்துகளுக்கு ரூ.255, வர்த்தக வாகனங்கள் செல்வதற்கு ரூ.275, கனரக கட்டுமான எந்திர வாகனங்கள் செல்வதற்கு ரூ.400, பெரிய வாகனங்கள் செல்வதற்கு ரூ.485 கட்டணமாக உயர்த்தப்பட்டுள்ளது. ஒரே நாளில் சென்று திரும்புவதற்கும் கட்டணங்கள் உயர்த்தப்பட்டுள்ளன. வானகரம் சுங்கச்சாவடியில் ரூ.5 முதல் ரூ.15 வரை சுங்கக்கட்டணம் உயர்த்தப்பட்டிருக்கிறது. இங்கு கார், ஜீப், வேன் போன்ற இலகுரக வாகனங்கள் ஒரு முறை செல்வதற்கு ரூ.55, இலகுரக வர்த்தக வாகனங்கள் செல்வதற்கு ரூ.90, பேருந்துகளுக்கு ரூ.185, வர்த்தக வாகனங்கள் செல்வதற்கு ரூ.200, கனரக கட்டுமான எந்திர வாகனங்கள் செல்வதற்கு ரூ.290, பெரிய வாகனங்கள் செல்வதற்கு ரூ.350 வசூலிக்கப்படும். சூரப்பட்டு சுங்கச்சாவடியில் கார் போன்ற இலகுர வாகனங்கள் ஒரு முறை செல்வதற்கு ரூ.75, இலகுரக வர்த்தக வாகனங்கள் செல்வதற்கு ரூ.120, பேருந்துகளுக்கு ரூ.255, வர்த்தக வாகனங்கள் செல்வதற்கு ரூ.280, கனரக கட்டுமான எந்திர வாகனங்கள் செல்வதற்கு ரூ.400, பெரிய வாகனங்கள் செல்வதற்கு ரூ.490 வசூலிக்கப்படவுள்ளது.*

## வேலைவாய்ப்பு கார்னர்

### இஸ்ரோவில் வேலை பார்க்க ஆசையா? 78 பணியிடங்கள்.. பிஇ/பிடெக் முடிச்சவங்க விண்ணப்பிக்கலாம்

சென்னை: இந்திய விண்வெளி ஆய்வு மையமான இஸ்ரோவில் காலிப்பணியிடங்கள் அறிவிக்கப்பட்டுள்ளது. பட்டதாரி அப்ரெண்டீஸ் டிரெய்னி மற்றும் டிப்ளமோ அப்ரெண்டீஸ் டிரெய்னி பணியிடங்கள் நிரப்பப்படுகிறது. ஐடிஐ, டிப்ளமோ, பிஇ / பிடெக் முடித்தவர்கள் இந்த பணியிடங்களுக்கு விண்ணப்பிக்க முடியும். இதற்கு எப்படி விண்ணப்பிப்பது என்பதனை இங்கு பார்க்கலாம்.

இந்திய விண்வெளி ஆய்வு மையமான இஸ்ரோவின் தலைமை அலுவலகம் பெங்களூரில் உள்ளது. இஸ்ரோவில் அப்ரெண்டீஸ் எனப்படும் பயிற்சி பணியிடங்களை நிரப்புவதற்கான அறிவிப்புகள் வெளியிடப்பட்டுள்ளது. டெலிமெட்ரி டிராக்கிங் & கமாண்ட் நெட்வொர்க் பிரிவில் உள்ள பயிற்சி பணியிடங்களை நிரப்ப அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. மொத்தம் 75 பணியிடங்கள் நிரப்பப்படுகின்றன. இந்த பணியிடங்களுக்கு விண்ணப்பிப்பது எப்படி என்பது பற்றிய விவரங்களை பார்க்கலாம்.

பணியிடங்கள் விவரம்;

* பட்டதாரி அப்ரெண்டீஸ் டிரெய்னி
* கம்ப்யூட்டர் சயின்ஸ் சார்ந்த பிரிவு படிப்புகள் - 15
* எலக்ட்ரானிக்ஸ் & கம்யூனிகேஷன் என் ஜினியரிங் சார்ந்த படிப்புகள் - 20
* எலக்ட்ரிக்கல் - 03
* மெக்கானிக்கல் என் ஜினியரிங் - 05
* ஏரோநெட்டிக்கல் என் ஜினியரிங் - 02
* லைப்ரரி சயின்ஸ் - 01

2. டிப்ளமோ அப்ரெண்டீஸ் டிரெய்னி:

*மெக்கானிக்கல் என் ஜினியரிங் சார்ந்த படிப்புகள் - 02

*எலக்ட்ரிக்கல் மற்றும் எலக்ட்ரானிக்ஸ் - 03

*எலக்டானிக்ஸ் மற்றும் கம்யூனிகேஷன் என் ஜினியரிங் - 08

*சிவில் என் ஜினியரிங் - 01

*கம்ப்யூட்டர் சயின்ஸ் என்ஜினியரிங் - 01

3.டிப்ளமோ இன் கமர்சியல் பிரக்டீஸ் அப்ரெண்டீஸ்

* கமெர்ஷியல் பிரக்டீஸ் - 05

4. ஐடிஐ அப்ரெண்டீஸ்

* எலக்ட்ரானிக்ஸ் - 06
* மெஷினிஸ்ட் - 01
* ஃபிட்டர் - 01
* வெல்டர் - 01

என மொத்தம் 78 பணியிடங்கள் உள்ளன.

கல்வித் தகுதி:

பிஇ/ பிடெக், டிப்ளமோ, ஐடிஐ படித்தவர்கள் இந்த பணியிடங்களுக்கு விண்ணப்பிக்க முடியும். துறைசார்ந்த பிரிவில் என்ஜினியரிங் , டிப்ளமோ முடித்தவர்கள் கோரப்பட்டுள்ள பணியிடங்களுக்கு விண்ணப்பிக்கலாம். ஐடிஐ கல்வி தகுதி கொண்டவர்கள் 2022- 2024- வரையில் தேர்ச்சி பெற்றவர்கள் விண்ணப்பிக்க முடியாது.

சம்பளம் எவ்வளவு?

* பட்டதாரி அப்ரெண்டீஸ்: ரூ.9,000
* டிப்ளமோ: ரூ.8,000
* ஐடிஐ: ரூ.7000 சம்பளம் வழங்கப்படும்.

ஓராண்டு ஒப்பந்த அடிப்படையில் இந்த பயிற்சி பணியிடங்கள் நிரப்பப்படுகின்றன.

தேர்வு முறை: தகுதியும் ஆர்வமும் உள்ள விண்ணப்பதாரர்கள் ஆன்லைன் வழியாக விண்ணப்பிக்கலாம். தகுதியான விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு நேர்முகத்தேர்வுக்கு அழைக்கப்படுவார்கள். சான்றிதழ் சரிபார்ப்புக்கு பிறகு விண்ணப்பதாரர்கள் தேர்வு செய்யப்படுவார்கள். விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்கும் முன்பாக தேர்வு அறிவிப்பினை ஒருமுறை படித்து தெரிந்து கொள்ளவும். விண்ணப்பிக்க கடைசி நாள் - 21.04.2025 ஆகும்.

தேர்வு அறிவிப்பினை படிக்க: https://www.isro.gov.in/media_isro/pdf/recruitmentNotice/2025_Mar/ApprenticeAdvertisement_28032025.pdf

## டிஎன்பிஎஸ்சி குரூப்-1 தேர்வுக்கான அறிவிப்பாணை வெளியீடு: ஜூன் 15-ல் முதல்நிலைத் தேர்வு

**சென்னை, ஏப்.2:**

டிஎன்பிஎஸ்சி வருடந்திர தேர்வு அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு குரூப்-1 மற்றும் குரூப்-1ஏ தேர்வுகளுக்கான அறிவிப்பு இன்று (ஏப்.1) வெளியிடப்பட்டுள்ளது. குரூப் 1 முதல்நிலைத் தேர்வு வரும் ஜூன் 15ம் தேதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வருவாய் கோட்டாட்சியர் (துணை ஆட்சியர்), டிஎஸ்பி, கூட்டுறவு சங்கங்களின் துணை பதிவாளர், ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர், வணிகவரி உதவி ஆணையர், பதிவுத்துறை மாவட்ட பதிவாளர், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர், மாவட்ட தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் அலுவலர் ஆகிய 8 விதமான உயர் பதவிகளை நேரடியாக நிரப்புவதற்காக டிஎன்பிஎஸ்சி குரூப்-1 தேர்வுக்கான அறிவிப்பாணையை டிஎன்பிஎஸ்சி வெளியிட்டுள்ளது.

குரூப் 1 முதல்நிலைத் தேர்வுக்கு இன்று (ஏப்.1) முதல், இம்மாதம் 30-ம் தேதி வரை தேர்வர்கள் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பங்களில், வரும் மே 5ம் தேதி முதல் 7ம் தேதி வரை திருத்தங்களை மேற்கொள்ளலாம். குரூப் 1 முதல்நிலைத் தேர்வு வரும் ஜூன் 15ம் தேதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழகத்தில் ஏப்.6 வரை மிதமான மழைக்கு வாய்ப்பு



**சென்னை, ஏப்.2:**


தமிழகத்தில் இன்று முதல் ஏப்.6-ம் தேதி ஒருசில இடங்களில் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: தென்னிந்திய பகுதிகளின்மேல், வளிமண்டல கீழடுக்கு பகுதிகளில், கிழக்கு மற்றும் மேற்கு திசை காற்று சந்திக்கும் பகுதி நிலவுகிறது. தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளின்மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சியும் நிலவுகிறது. இதன் காரணமாக தமிழகத்தில் இன்று (ஏப்.1) ஓரிரு இடங்களிலும், 2 முதல் 5-ம் தேதி வரை ஒருசில இடங்களிலும், 6-ம் தேதி ஓரிரு இடங்களிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

தமிழகத்தில் இன்று அதிகபட்ச வெப்பநிலை வழக்கத்தைவிட 5 டிகிரி வரை உயரக்கூடும். 2 முதல் 4-ம் தேதி வரை வழக்கமான அளவைவிட சற்று வெயில் குறையக்கூடும். சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். மழைக்கு வாய்ப்பில்லை. மீனவர்களுக்கான எச்சரிக்கையும் ஏதுமில்லை.

இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## மாநகராட்சி வரலாற்றில் முதன்முறையாக சென்னையில் ரூ.2,025 கோடி சொத்து வரி வசூல்



**சென்னை, ஏப்.2:**

*கடந்த நிதியாண்டில் சென்னை மாநகராட்சியில் ரூ.2,025 கோடி சொத்து வரி வசூலிக்கப்பட்டுள்ளது. மாநகராட்சி வரலாற்றிலேயே ரூ.2 ஆயிரம் கோடிக்கு மேல் சொத்து வரி வசூலிக்கப்பட்டது இதுவே முதன்முறையாகும்.*

*சென்னை மாநகராட்சியில் 13 லட்சத்துக்கும் மேற்பட்ட சொத்து உரிமையாளர்கள் சொத்து வரி செலுத்தி வருகின்றனர். அரையாண்டுக்கு ஒருமுறை ஏப்ரல், அக்டோபர் மாதங்களில் சொத்து வரி செலுத்த வேண்டும்.*

*இதில், கடந்த 2023-24 நிதியாண்டில் ரூ.1,750 கோடி சொத்து வரி வசூலிக்கப்பட்டது. இந்நிலையில், 2024-25 நிதியாண்டில் ரூ.2 ஆயிரம் கோடி இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. அந்த இலக்கை எட்டுவதற்காக, கடந்த ஒரு மாதமாக மாநகராட்சி வரி வசூலிப்பாளர்கள் வீடு வீடாக சென்று வரி வசூல் செய்து வந்தனர்.*

*விடுமுறையிலும் வரி வசூல்: குடியிருப்பு சங்கங்கள் உதவியுடன் சிறப்பு வரி வசூல் முகாம்களையும் மாநகராட்சி நடத்தி வந்தது. கடந்த மார்ச் 29 முதல் 31-ம் தேதி வரை 3 நாட்கள் அரசு விடுமுறை நாட்களாக இருந்தாலும், சொத்து வரி வசூல் நடைபெறும் என மாநகராட்சி நிர்வாகம் அறிவித்திருந்தது. நேற்று நள்ளிரவு 12 மணி வரை ரிப்பன் மாளிகையில் உள்ள மாநகராட்சி தலைமை அலுவலகத்தில் மாநகர வருவாய் அலுவலர் பானுசந்திரன் தலைமையில் வரி வசூலிக்கும் பணியில் ஈடுபட்டனர்.*

*அதன்படி, நேற்று இரவு 8 மணி வரை கடந்த நிதியாண்டில் மொத்தம் ரூ.2,025 கோடி சொத்து வரி வசூலிக்கப்பட்டுள்ளது. மாநகராட்சி வரலாற்றிலேயே ரூ.2 ஆயிரம் கோடிக்குமேல் சொத்து வரி வசூலிக்கப்பட்டது இதுவே முதன்முறையாகும். இது அதற்கு முந்தைய நிதியாண்டைவிட ரூ.275 கோடி அதிகமாகும்.*

*இதேபோன்று தொழில் வரி ரூ.570 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது. இது அதற்கு முந்தைய நிதியாண்டைவிட ரூ.38 கோடி அதிகமாகும். இன்றுமுதல் செலுத்தப்படும் முந்தைய நிதியாண்டுகளுக்கான சொத்துவரிக்கு 2 சதவீதம் தனி வட்டி விதிக்கப்படும்.*

*இந்த நிதியாண்டின் முதல் அரையாண்டுக்கான சொத்து வரியை இன்றுமுதல் ஏப்.30-ம் தேதிக்குள் செலுத்தினால், அதில் 5 சதவீதம், அதிகபட்சமாக ரூ.5 ஆயிரம் வரை தள்ளுபடி வழங்கப்படும் என மாநகராட்சி நிர்வாகம் தெரிவித்துள்ளது.*

## மெட்ரோ ரயில் பழைய பயண அட்டையை மேலும் 2 மாதங்களுக்கு நீட்டிக்க முடிவு

**சென்னை, ஏப்.2:**

மெட்ரோ ரயில் பயணிகள் ஏப்.1-ம் தேதி முதல் தேசிய பொது போக்குவரத்து அட்டைக்கு (சிங்கார சென்னை அட்டை) மாற வேண்டும் என அறிவிக்கப்பட்ட நிலையில், ஆலந்தூர் உள்ளிட்ட மெட்ரோ ரயில் நிலையங்களில் பயணிகள் வாக்குவாதத்தில் ஈடுபட்டதால், பழைய பயண அட்டையின் பயன்பாட்டை மேலும் 2 மாதங்களுக்கு நீட்டிப்பதாக மெட்ரோ ரயில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

சென்னை மெட்ரோ ரயிலில் டிக்கெட் எடுப்பதற்காக கவுன்ட்டர்களில் பயணிகள் வரிசையில் நெடுநேரம் காத்திருப்பதை தவிர்க்க, சிஎம்ஆர்எல் பயண அட்டை கடந்த 2015-ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. 5 ஆண்டுகள் வரை செல்லுபடியாகும் இந்த அட்டையை பயன்படுத்தும்போது, 20 சதவீதம் கட்டண தள்ளுபடி கிடைக்கும்.

இதனிடையே, தேசிய பொது போக்குவரத்து அட்டையை (சிங்கார சென்னை அட்டை) மெட்ரோ ரயில் நிறுவனம் 2023-ம் ஆண்டு ஏப்.14-ம் தேதி அறிமுகப்படுத்தியது. இந்நிலையில், எஸ்பிஐ வழங்கிய சிங்கார சென்னை அட்டைக்கு ஏப்.1-ம் தேதி முதல் முழுமையாக மாற திட்டமிடப்பட்டது.

இதைத் தொடர்ந்து, 41 மெட்ரோ ரயில் நிலையங்களிலும் படிப்படியாக சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் பயண அட்டைகளை ரீசார்ஜ் செய்யும் வசதி நிறுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டது. இதையடுத்து, பயண அட்டையில் உள்ள மீதித் தொகையை மெட்ரோ ரயில்களில் பயணிப்பதற்கும், மெட்ரோ ரயில் நிலையங்களில் வாகனம் நிறுத்துவதற்கும் பயணிகள் பயன்படுத்தி வந்தனர்.

இந்நிலையில், மெட்ரோ ரயில் பயண அட்டை இன்றுமுதல் முழுமையாக மாற இருப்பதை கருத்தில்கொண்டு, ஆலந்தூர் உட்பட பல்வேறு மெட்ரோ ரயில் நிலைய கவுன்ட்டர்களில் பயண அட்டையில் உள்ள மீதித் தொகை திருப்பித் தருமாறு பயணிகள் கேட்டனர். ஆனால், பழைய அட்டையில் உள்ள தொகையை பயணம் மேற்கொண்டு கழிக்குமாறு ஊழியர்கள் பதிலளித்தனர். இதனால், பயணிகளுக்கும் ஊழியர்களுக்கும் இடையே கடுமையான வாக்குவாதம் ஏற்பட்டது.

இதுகுறித்து, பயணிகள் கூறியதாவது: மெட்ரோ ரயில் பயண அட்டையில் ரூ.2 ஆயிரம் வரை ரீசார்ஜ் செய்து வைத்துள்ளோம். ஏப்.1-ல் இருந்து சிங்கார சென்னை அட்டைக்கு மாற வேண்டும் என தெரிவித்தனர். மெட்ரோ ரயில் பயண அட்டையை தேவைப்படும் போது மட்டுமே பயன்படுத்துகிறோம்.

தற்போது இந்த அட்டையில் ரூ.1,000-க்கும் மேல் மீதித் தொகை உள்ளது. எனவே, இத்தொகையை திருப்பி தர வேண்டும் அல்லது சிங்கார சென்னை அட்டைக்கு இத்தொகையை மாற்றம் செய்ய வேண்டும். இல்லாவிட்டால், பயண அட்டையில் பூஜ்ஜியம் என்ற நிலைக்கு வந்த பிறகு, சிங்கார சென்னைக்கு அட்டைக்கு மாற்ற வேண்டும். அது வரை, மெட்ரோ ரயில் பயண அட்டையை பயன்படுத்த அனுமதிக்க வேண்டும். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

மேலும் 2 மாதம் செல்லுபடியாகும்: இதுகுறித்து, மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகளிடம் கேட்டபோது, “சிங்கார சென்னை அட்டைக்கு மாற பயணிகளை ஊக்கப்படுத்துகிறோம். இந்த பயண அட்டையில் தொகை பூஜ்ஜியம் நிலைக்கு வந்தபிறகு, அவர்களுக்கு ரீசார்ஜ் செய்யாமல், அதற்கு பதிலாக சிங்கார சென்னை அட்டை வழங்கப்படுகிறது.

மேலும், மெட்ரோ ரயில் பயண அட்டையை நிறுத்தி வைக்கவில்லை. மாறாக, படிப்படியாக மாற்ற திட்டமிட்டு உள்ளோம். எனவே, பழைய பயண அட்டையில் இருந்து சிங்கார சென்னை அட்டைக்கு மாற, மேலும் 2 மாதங்கள் வரை கால நீட்டிப்பு செய்யப்படும்” என்றனர்.

# பத்திரப்பதிவில் பெண்களுக்கு ஒரு சதவீத கட்டணம் குறைப்பு அமலுக்கு வந்தது



**சென்னை, ஏப்.2-**

பத்திரப்பதிவில் பெண்களுக்கு ஒரு சதவீத கட்டண சலுகை அளித்து அரசாணை வெளியிடப்பட்டு உள்ளது. (செவ்வாய்க்கிழமை) அமலுக்கு வந்தது.

சமூகத்தில் மட்டுமன்றி அவரவர் குடும்பங்களிலும் மகளிருக்கான சம பங்கை உறுதி செய்திடும் வகையில், வரும் ஏப்ரல் 1-ந் தேதி முதல் ரூ.10 லட்சம் வரையிலான மதிப்புள்ள வீடு, மனை, விவசாய நிலம் உள்ளிட்ட அனைத்து அசையா சொத்துகள் பெண்கள் பெயரில் பதிவு செய்யப்பட்டால் பத்திரப்பதிவு கட்டணம் ஒரு சதவீதம் குறைக்கப்படும் என கடந்த பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டது.

இந்த திட்டம் அமலுக்கு வந்தது. இதற்கான அரசாணை வெளியிடப்பட்டது. இந்த அரசாணையில், 'தற்போதைய பதிவுகளில் 75 சதவீதம் மகளிர் இந்த சலுகையை பெற தகுதியை பெறுவார்கள். இந்த சலுகையின் மூலம் பெண்களின் தன்னம்பிக்கை, நிதி சுதந்திரம் மேலும் வலுப்பெறும் என அரசு உறுதியாக நம்புகிறது' என கூறப்பட்டுள்ளது.

இதைத்தொடர்ந்து அனைத்து பத்திரப்பதிவு அலுவலர்களும், இந்த அரசாணைப்படி செயல்பட பத்திர பதிவுத்துறை சுற்றறிக்கை அனுப்பி உள்ளது. இதன்மூலம் பத்திர பதிவு மேற்கொள்ளும் மகளிருக்கு கிடைக்கும் பலன்கள் குறித்து ஓய்வுபெற்ற பதிவுத்துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது:-

தமிழகத்தில் பதிவு கட்டணமாக 2 சதவீதம் வசூலிக்கப்படுகிறது. இதன்படி பார்த்தால் அதிகபட்சம் ரூ.10 லட்சத்துக்கு ரூ.20 ஆயிரம் பதிவு கட்டணமாக செலுத்த வேண்டும்.

தற்போதைய புதிய அறிவிப்பின் மூலம் பெண்கள் பெயரில் சொத்துகள் பதிவு செய்யப்பட்டால் பதிவு கட்டணம் ரூ.10 ஆயிரம் செலுத்தினால் போதும். இதன்மூலம் ரூ.10 ஆயிரம் மிச்சமாகும்.

ரூ.10 லட்சத்துக்கும் அதிகமான மதிப்புள்ள சொத்துகளை பதிவு செய்யும் மகளிர் இந்த சலுகையை பெற முடியாது.

தற்போது கிராமப் புறங்களில் கூட நிலங்களின் மதிப்பு பல மடங்கு உயர்ந்து விட்டது. சென்னை, கோவை போன்ற நகரங்களில் வெறும் ரூ.10 லட்சத்துக்கு சொத்துகள் வாங்க முடியாது.

எனவே, ரூ.10 லட்சத்துக்கு அதிகமான சொத்துகளை பதிவு செய்யும் மகளிரும் இந்த சலுகையை பெறும் வகையில் இந்த திட்டத்தை மாற்றி அமைத்தால் நன்றாக இருக்கும்.

தான செட்டில்மென்ட் பதிவை பொறுத்தமட்டில் சொத்து மதிப்பில் ஒரு சதவீதம் பதிவு கட்டணமாக செலுத்த வேண்டும். தான செட்டில்மென்டை பொறுத்தமட்டில் அதிகபட்ச பதிவு கட்டணம் ரூ.40 ஆயிரம் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதாவது, குறிப்பிட்ட சொத்தின் மதிப்பு ரூ.4 ஆயிரம் கோடியாக இருந்தாலும் பதிவு கட்டணமாக ரூ.40 ஆயிரம் செலுத்தினால் போதும்.

உச்சவரம்பை நீக்கி விட்டு எவ்வளவு மதிப்பிலான சொத்துகள் என்றாலும் பதிவு கட்டணத்தில் ஒரு சதவீதம் கட்டணம் அளிக்கும்போதுதான் அனைத்து தரப்பு மகளிரும் பயன்பெற முடியும் என்றார்.

## ரூ.80 பார்க்கிங் கட்டணம் வசூலித்த வணிக வளாகம்: வாடிக்கையாளருக்கு ரூ.10 ஆயிரம் இழப்பீடு

**சென்னை, ஏப்.2:**

சென்னை கொசபேட்டையைச் சேர்ந்தவர் அருண்குமார். இவர் திருமங்கலத்தில் உள்ள தனியார் வணிக வளாகத்துக்கு சென்றபோது தனது இருசக்கர வாகனத்தை வளாகத்தில் உள்ள பார்க்கிங் பகுதியில் நிறுத்திவிட்டு சென்றார்.

இந்நிலையில், அங்கு 1 மணி 57 நிமிடம் வாகனத்தை நிறுத்தியதற்காக அவரிடம் இருந்து ரூ.80 பார்க்கிங் கட்டணமாக வசூலிக்கப்பட்டது. இதுதொடர்பாக சென்னை வடக்கு மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையத்தில் அருண்குமார் புகார் மனு தாக்கல் செய்தார்.

அந்த மனுவில், "தமிழ்நாடு ஒருங்கிணைந்த கட்டிட விதிகள்படி பெரும் வணிக வளாகங்களில் போதுமான வாகன நிறுத்துமிடம் செய்து தர வேண்டியது அவசியம். வாகன நிறுத்துமிடம் என்பது வணிக வளாகத்தின் ஒரு பகுதியாகும். இதற்காக தனியாக கட்டணம் வசூலிக்க முடியாது. என்னிடம் பார்க்கிங் கட்டணம் வசூலித்தது நியாயமற்ற வர்த்தகமாகும். எனவே, எனக்கு இழப்பீடும், வழக்கு செலவுக்கான தொகையையும் வழங்க வணிக வளாக உரிமையாளருக்கு உத்தரவிட வேண்டும்" என கூறியிருந்தார்.


இந்த மனுவை ஆணையத்தின் தலைவர் கோபிநாத், உறுப்பினர்கள் கவிதா கண்ணன், ராமமூர்த்தி ஆகியோர் விசாரித்தனர். அப்போது வணிக வளாகத்தின் சார்பில் தாக்கல் செய்த பதில் மனுவில், "கட்டிட விதி, வணிக வளாகங்களில் வாகன நிறுத்துமிடம் அமைக்கப்பட வேண்டும் என கூறினாலும், அங்கு வாடிக்கையாளர்கள் தங்கள் வாகனங்களை இலவசமாக நிறுத்திக்கொள்ள அனுமதிக்க வேண்டும் என கட்டாயப்படுத்தவில்லை. அதன்படி பார்க்கிங் கட்டணம் வசூலிக்க எந்த தடையும் இல்லை" என தெரிவித்தனர்.

மனுவை விசாரித்த ஆணையம், "பெரும் வணிக வளாகங்களில் கழிப்பறை, எஸ்கலேட்டர், லிஃப்ட் போன்ற அடிப்படை வசதிகள் வரிசையில் வாகன நிறுத்துமிடமும் பட்டியலில் வருமா? என்ற கேள்விக்கு தமிழ்நாடு கட்டிட விதிகளை பகுப்பாய்வு செய்வதன் மூலம் மட்டுமே விடைகாண முடியும். ஆனால், அதற்கு இந்த ஆணையத்துக்கு அதிகாரம் இல்லை.

அதேநேரம், பார்க்கிங் கட்டணம் வசூலிக்கலாம் என்பது தொடர்பான விதிகள் எதையும் வணிக வளாக நிர்வாகம் தாக்கல் செய்யவில்லை. இதன்மூலம், மனுதாரரிடம் வாகன கட்டணம் வசூலித்தது நியாயமற்ற வர்த்தகம் என்ற முடிவுக்கு இந்த ஆணையம் வருகிறது.

எனவே திருமங்கலத்தில் உள்ள சம்பந்தப்பட்ட வணிக வளாகம், வாகனங்களுக்கு பார்க்கிங் கட்டணம் வசூலிப்பதை உடனடியாக நிறுத்த வேண்டும். மேலும் நியாயமற்ற வர்த்தகம் மூலம் மனுதாரருக்கு ஏற்பட்ட மன உளைச்சலுக்காக இழப்பீடாக ரூ.10 ஆயிரமும், வழக்கு செலவுக்காக ரூ.2 ஆயிரமும் வழங்க வேண்டும்" என உத்தரவிட்டது..

## முன்னூர் ஆடவல்லீஸ்வரர் கோயிலில் திருமலை நாயக்கர் கல்வெட்டு கண்டுபிடிப்பு



**விழுப்புரம், ஏப்.2:**

விழுப்புரம் மாவட்டம், பிரம்மதேசம் அருகே உள்ளது முன்னூர் கிராமம். இங்குப் பழமைவாய்ந்த ஆடவல்லீஸ்வரர் கோயில் அமைந்துள்ளது. இக்கோயிலில் ஆன்மிக எழுத்தாளர் கோ.ரமேஷ் அளித்தத் தகவலின் பேரில் விழுப்புரத்தைச் சேர்ந்த எழுத்தாளரும் வரலாற்று ஆய்வாளருமான கோ.செங்குட்டுவன் ஆய்வு செய்தார்.

அப்போது 1300 ஆண்டுகள் பழமைவாய்ந்த சிற்பங்கள் அங்குப் பாதுகாக்கப்பட்டு வருவது தெரியவந்தது. மேலும் திருமலை நாயக்கர் பெயர் இடம்பெற்ற கல்வெட்டு ஒன்றும் கண்டறியப்பட்டது.

இதுபற்றி ஆய்வாளர் கோ.செங்குட்டுவன் கூறியதாவது:

சம்புவராயர்களின் தொடக்ககால தலைநகராக முன்னூர் இருந்துள்ளது. இங்குள்ள ஆடவல்லீஸ்வரர் கோயில் சோழர் காலத்தைச் சேர்ந்தது. ஏராளமான கல்வெட்டுகள் இங்குள்ளன. பல்லவர் காலத்திலேயே முன்னூர் கிராமம் சிறப்புற்று இருந்ததற்கு அடையாளமாக அக்காலத்தைச் சேர்ந்த தவ்வை மற்றும் லகுலீசர் சிற்பங்கள் இருக்கின்றன.

'மதுரையை ஆண்ட திருமலை நாயக்கர் ஆட்சிக் காலத்தில் (கி.பி.17 ஆம் நூற்றாண்டு) செஞ்சிப் பகுதியில் அவருக்கு அடங்கியவராக கஞ்சம நாயக்கர் என்பவர் இருந்திருக்கிறார். அப்போது முன்னூர் ஆடவல்லீஸ்வரர் கோயிலுக்காக திருநாமத்துக் காணியாக நிலம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் இப்பகுதியைச் சேர்ந்த கைகோளர்கள் ஏற்கனவே அனுபவித்து வரும் மானியம் மட்டுமல்லாது புதிதாக உருவாக்கப்பட்ட தேவதானத்திலும் நிலம் வழங்கப்பட்டுள்ளது. இதுதொடர்பாக பட்டயம் ஒன்று வெளியிடப்பட்ட தகவலும் இக்கல்வெட்டின் மூலம் தெரியவருகிறது" என அவர் தெரிவித்து இருக்கிறார். முன்னூர் சிவாலயத்தில் 1300 ஆண்டுகள் பழமைவாய்ந்த அரிய சிற்பங்கள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. புதிதாக கண்டறியப்பட்டுள்ள திருமலை நாயக்கர் கால கல்வெட்டின் மூலம் முன்னூர் கிராமத்தின் வரலாற்றுச் சிறப்பு மேலும் தெரியவந்துள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

## உதகையில் ஜூன் 5ந்தேதி வரை படப்பிடிப்பு நடத்தத் தடை

**நீலகிரி, ஏப்.2:**

உதகையில் நாளை முதல் ஜூன் 5ந்தேதி வரை படப்பிடிப்பு நடத்த தோட்டக்கலைத் துறை தடை விதித்துள்ளது.

மலைகளின் அரசி என்றழைக்கப்படும் நீலகிரி மாவட்டத்தில் ஆண்டுதோறும் ஏப்ரல், மே மாதங்களில் கோடை சீசன் நிலவுவது வழக்கம். இதை அனுபவிப்பதற்காக உள்நாட்டைச் சேர்ந்தவர்கள் மட்டுமின்றி வெளிநாடுகளில் இருந்தும் அதிக அளவிலான சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கின்றனர். சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் தோட்டக்கலைத் துறை, சுற்றுலாத் துறை மற்றும் மாவட்ட நிர்வாகம் சார்பில் மலர்க் கண்காட்சி, ரோஜா கண்காட்சி, காய்கறி கண்காட்சி, பழக் கண்காட்சி உள்பட பல்வேறு கோடை விழாக்கள் நடத்தப்படுகின்றன. சீசன் நேரங்களில் அதிக அளவில் சுற்றுலா பயணிகள் வருவதால் அங்கு கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. இதனால் உதகைக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் வாகனங்களுக்கு இ- பாஸ் நடைமுறையில் உள்ளது. இந்த நிலையில் கோடை விடுமுறையையொட்டி சுற்றுலாப் பயணிகள் வருகை அதிகரிக்கும் என்பதால் நீலகிரி மாவட்டம் உதகையில் தோட்டக்கலைத் துறைக்கு சொந்தமான இடங்களில் நாளை முதல் ஜூன் 5 ந்தேதி வரை படப்பிடிப்பு நடத்த தடை விதிக்கப்பட்டுள்ளது.

அதன்படி தாவரவியல் பூங்கா, ரோஜா பூங்கா, தேயிலை பூங்கா, குன்னூர் சிம்ஸ் பூங்கா உள்ளிட்ட தோட்டகலை துறைக்கு சொந்தமான 7 இடங்களில் இந்த தடை விதிக்கப்பட்டுள்ளது.

## வாழ்வியல் தர்மங்களாக ராமாயணத்தை எடுத்துக்கொள்ள வேண்டும்: கவர்னர் ஆர்.என்.ரவி பேச்சு



**மயிலாடுதுறை, ஏப்.2:**

வாழ்வியல் தர்மங்களாக ராமாயணத்தைஎடுத்துக்கொள்ள வேண்டும் என கவர்னர் ஆர்.என்.ரவி பேசினார்.

தென்னிந்திய பண்பாட்டு மையத்தின் சார்பில் கவிச்சக்ரவர்த்தி கம்பர் பிறந்த ஊரான மயிலாடுதுறை மாவட்டம் தேரழுந்தூரில் கம்பராமாயண விழா நடந்து வருகிறது. நேற்று நடந்த விழாவில் தமிழக கவர்னர் ஆர்.என்.ரவி கலந்து கொண்டு பேசியதாவது:-

நான்பள்ளியில்படிக்கும்போது கம்பர் பிறந்த ஊருக்கு செல்ல வேண்டும் என ஆசைப்பட்டேன். அந்த ஆசை 2-வது முறையாக தற்போது நிறைவேறி உள்ளது. கம்பரின் பங்களிப்பு என்பது ஏதோ ஒரு ராமாயணத்தை எழுதினார், இலக்கியத்தை படைத்தார் என்பது மட்டுமல்ல. ராமாயணத்தின் மூலம் பாரத தேசத்தில் வாழும் அனைவருக்கும் உத்வேகம் அளிக்கும் வகையில் அவரது பங்களிப்பு உள்ளது.

நமது கலாசாரம், பாரம்பரியம், ஆன்மிகம் ஆகியவற்றுக்கு கம்பர் அளித்திருக்கும் பங்களிப்பு அளப்பரியது. நமது கலாசாரம், பாரம்பரியத்தின் தந்தை கம்பர்.

கம்பராமாயணத்தை தமிழ் கலாசாரத்தின் ஆன்மாவாக கருதுகிறேன். துரதிஷ்டவசமாக நம் கலாசாரத்தை நாம் மறந்து விடுகிறோமோ? என்ற சந்தேகம் எனக்கு உள்ளது. கலாசாரத்தின் அடையாளமான ராமாயணத்தை எப்போதும் போற்றி பாதுகாக்க வேண்டும். வாழ்வியல் தர்மங்களாக இதை எடுத்துக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

விழாவில் டாக்டர் எம்.ஜி.ஆர். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் டாக்டர் சுதா சேஷய்யன், தென்னிந்திய பண்பாட்டு மைய இயக்குனர் கோபாலகிருஷ்ணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.




## க்ரைம் கார்னர்

### நகைக்கடை அதிபரிடம் ரூ.1 கோடி தங்க நகை பெற்று மோசடி செய்த முகவர் கைது

**சென்னை, ஏப்.2:**

நகைக்கடை அதிபரிடம் ரூ.1 கோடி மதிப்புள்ள தங்க நகைகளை பெற்று மோசடி செய்ததாக நகை விற்கும் முகவர் கைது செய்யப்பட்ட நிலையில், தலைமறைவாக உள்ள அவரது சகோதரரை போலீஸார் தனிப்படை அமைத்து தேடி வருகின்றனர்.

சென்னை, வேப்பேரியில் வசிப்பவர் லஷ்மண்குமார் (44). சவுகார்பேட்டையில் சிவம் ஜுவல்லர்ஸ் என்ற பெயரில் நகைக்கடை நடத்தி வருகிறார். தங்க நகை மொத்த வியாபாரத்திலும் ஈடுபட்டுள்ளார். இவரது நகைக் கடையில் கமிஷன் ஏஜென்டாக தர்மேஷ் ஜெயின் என்பவர் பணிபுரிந்து வந்துள்ளார். கடந்த ஆண்டு டிசம்பர் 14-ம் தேதி லஷ்மண்குமார் சுமார் ரூ.1 கோடி மதிப்புள்ள 177 பவுன் நகைகளை தர்மேஷ் ஜெயினிடம் கொடுத்து வாடிக்கையாளர் குல்திப்ராவல் என்பவரிடம் ஒப்படைக்குமாறு கூறியுள்ளார்.

தங்க நகைகளை பெற்றுக்கொண்ட தர்மேஷ் ஜெயின் அந்த நகைகளை வீட்டில் வைத்துள்ளார். இந்த நகைகளை அவரது அண்ணனாக சவுகார்பேட்டையில் வசிக்கும் அல்பேஷ்குமார் ஜெயின் (46) என்பவர் எடுத்துள்ளார். ஆந்திரப் பிரதேச மாநிலத்தில் நகைக் கடைகளுக்கு தங்க நகைகளை விற்கும் ஏஜென்டாக வேலை செய்து வந்த அவர், எடுத்துச் சென்ற நகைகளை திரும்பக் கொடுக்கவில்லை. அதற்கான பணத்தையும் கொடுக்கவில்லை.

அதிர்ச்சி அடைந்த நகைக்கடை உரிமையாளர் லஷ்மண்குமார் இது தொடர்பாக யானைக்கவுனி காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அதன்படி, போலீஸார் வழக்குப் பதிந்து விசாரணை மேற்கொண்டனர்.

சகோதரர்கள்: இதில், சகோதரர்களான தர்மேஷ் ஜெயின் மற்றும் அல்பேஷ்குமார் ஜெயின் ஆகியோர் லஷ்மண்குமாரின் தங்க நகைகளை திட்டமிட்டே ஏமாற்றி மோசடி செய்து தலைமறைவானது தெரியவந்தது.

இதையடுத்து, இவர்களை கைது செய்ய போலீஸார் முடிவு செய்து தேடுதல் பணியில் ஈடுபட்டனர். தலைமறைவாக இருந்த அல்பேஷ் குமார் ஜெயின் கைது செய்யப்பட்ட நிலையில், அவரது சகோதரர் தர்மேஷ் ஜெயினை தனிப்படை போலீஸார் தொடர்ந்து தேடி வருகின்றனர்.

### முக்குலத்தோர் புலிப்படை நிர்வாகி கொலை வழக்கில் 2 பேர் கைது



**சென்னை, ஏப்,2:**

சென்னை ஆதம்பாக்கத்தைச் சேர்ந்தவர் வெங்கடேசன் (43). வழக்கறிஞரான இவர் நடிகர் கருணாஸின் முக்குலத்தோர் புலிப்படை கட்சியின், வழக்கறிஞர் பிரிவில் முக்கிய நிர்வாகியாக இருந்தார். இவர், விருகம்பாக்கம் கணபதிராஜ் நகரில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பில் வீடு ஒன்றை வாடகைக்கு எடுத்து அதில் அலுவலகம் நடத்தி அங்கேயே தங்கியிருந்தார்.

சில தினங்களாக பூட்டிக் கிடந்த அவரது வீட்டிலிருந்து துர்நாற்றம் வீசியது. தகவல் அறிந்து அங்கு சென்ற விருகம்பாக்கம் போலீஸார் கதவை உடைத்து உள்ளே சென்று பார்த்தனர். அங்கு வெங்கடேசன் கொலை செய்யப்பட்டு அழுகிய நிலையில் சடலமாகக் கிடந்தார். அவரது உடல் முழுவதும் காயங்கள் இருந்தன. எனவே, அவர் சித்திரவதை செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டிருந்தது உறுதி செய்யப்பட்டது.

இக்கொலை தொடர்பாக விருகம்பாக்கம் போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்தனர். முதல் கட்டமாக சம்பவ இடத்தைச் சுற்றி பொருத்தப்பட்டிருந்த சிசிடிவி கேமரா காட்சிகளை கைப்பற்றி ஆய்வு செய்தனர். இதில், கொலை நடந்தாக கூறப்படும் கடந்த 27-ம் தேதி 4 பேர் கும்பல் அங்கு வந்து சென்றது தெரியவந்தது. இதையடுத்து, அவர்களை பிடிக்க போலீஸார் தனிப்படைகளை அமைத்தனர்.

வெங்கடேசனின் கார் ஓட்டுநராக இருந்து நெல்லை மாவட்டம் நாங்குநேரியைச் சேர்ந்த கார்த்திக் என்பவர் மீதும் போலீஸாரின் சந்தேகப் பார்வை விழுந்தது. இதையடுத்து, அங்கு சென்ற தனிப்படை போலீஸார் கார்த்திக், அவரது நண்பர் ரவி ஆகியோரை கைது செய்து தொடர்ந்து விசாரித்து வருகின்றனர்.

கொலை தொடர்பாக போலீஸ் தரப்பில் கூறப்படுவதாவது: கொலையான வெங்கடேசனிடம் கார் ஓட்டுநராக பணிபுரிந்த கார்த்திக் மற்றும் அவரது நண்பர் ரவி ஆகிய இருவர் கொலை சம்பவத்தில் ஈடுபட்டது முதல்கட்ட விசாரணையில் தெரியவந்தது. கார்த்திக் சில வருடங்களுக்கு முன்பு வரை முக்குலத்தோர் புலிப்படை தலைவரும், நடிகருமான கருணாஸிடம் டிரைவராக பணியாற்றி வந்ததாக கூறப்படுகிறது.

பின்னர், நாங்குநேரியில் குற்ற வழக்கில் கைதாகி சிறைக்குச் சென்று திரும்பிய பின்னர் கார்த்திக்கை, வெங்கடேஷ் சென்னைக்கு அழைத்து வந்து தனது கார் ஓட்டுநராக வைத்திருந்துள்ளார். இந்த வீட்டில் மது அருந்துவது, வழக்கு சம்பந்தமாக ஆலோசனை செய்வது, பஞ்சாயத்து போன்றவற்றை செய்து வந்துள்ளனர்.

# மோனலிசாவுக்கு வாய்ப்பு வழங்கிய இயக்குநர் சனோஜ் பாலியல் வழக்கில் கைது



**புதுடெல்லி, ஏப்.2:**

கும்பமேளா புகழ் மோனலிசாவுக்கு திரைப்பட வாய்ப்பு வழங்கிய இயக்குநர் சனோஜ் மிஸ்ரா, பாலியல் வன்கொடுமை வழக்கில் கைது செய்யப்பட்டுள்ளார்.

பிரயாக்ராஜ் மகா கும்பமேளாவில் ருத்ராட்ச மாலை விற்ற, ம.பி.யின் இந்தூரை சேர்ந்த மோனலிசா போன்ஸ்லே என்ற 16-வது சிறுமி திடீர் பிரபலம் ஆனார். அவருக்கு திரைப்பட இயக்குநர் சனோஜ் மிஸ்ரா தனது 'டைரி ஆப் வெஸ்ட் பெங்கால்' திரைப்படத்தில் வாய்ப்பளிக்க முன்வந்தார். இது தொடர்பாக மோனலிசாவின் வீட்டுக்கே சென்று அவரது பெற்றோரை சந்தித்து பேசினார்.

இந்நிலையில் பாலியல் வன்கொடுமை வழக்கில் சனோஜ் மிஸ்ரா கைது செய்யப்பட்டுள்ளார்.

திரைப்பட நாயகியாக விரும்பிய ஒரு சிறுமிக்கு வாய்ப்பு அளிப்பதாக கூறி அவரை பலமுறை பாலியல் வன்கொடுமை செய்ததாக சனோஜ் மிஸ்ரா மீது அண்மையில் டெல்லியில் வழக்கு பதிவானது. இந்த வழக்கில் சனோஜ் மிஸ்ராவின் முன்ஜாமீன் மனுவை டெல்லி உயர் நீதிமன்றம் நிராகரித்ததை தொடர்ந்து அவரை டெல்லி போலீஸார் நேற்று கைது செய்தனர்.

# திட்டக்குடி அருகே கள்ளநோட்டு அச்சடித்த விசிகவினர் தப்பி ஓட்டம்



**விருத்தாசலம், ஏப்.2:**

கடலூர், அதர்நத்தம் கிராமத்தில் கள்ளநோட்டு தயாரித்த விசிக பிரமுகரை போலீஸார் தேடி வருகின்றனர்.

கடலூர் மாவட்டம் ராமநத்தம் அருகே அதர்நத்தம் கிராமத்தைச் சேர்ந்தவர் செல்வம்(39). விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் கடலூர் மேற்கு மாவட்டப் பொருளாளராக உள்ளார். இவர் தனக்குச் சொந்தமான விளைநிலப் பகுதியில் கொட்டகை அமைத்து அதில் லேப்டாப், பிரிண்டர் வைத்து கள்ளநோட்டு அச்சடிப்பதாக ராமநத்தம் போலீஸாருக்கு நேற்று முன்தினம் இரவு ரகசிய தகவல் கிடைத்தது.

இதையடுத்து ராமநத்தம் காவல் ஆய்வாளர் ரவிச்சந்திரன் தலைமையிலான போலீஸார் நேற்று காலை விளைநிலப் பகுதிக்கு சென்றனர். போலீஸார் வருவதைக் கண்ட கும்பல் அங்கிருந்து தப்பியோடியது.

இதையடுத்து போலீஸார் கொட்டகையில் சோதனை நடத்தியதில், 500 ரூபாய் கள்ள நோட்டுகள் ரூ.83 ஆயிரம் மற்றும் கள்ளநோட்டு அச்சடிக்கும் இயந்திரம், லேப்டாப், பிரின்டர் மெஷின், ஏர் கன், ஏர் பிஸ்டல், வாக்கிடாக்கி மற்றும் கள்ளநோட்டு அச்சடிக்க பயன்படும் பேப்பர் பண்டல்கள் ஆகியவை இருந்தது தெரியவந்தது. பொருட்கள் அனைத்தையும் கைப்பற்றிய போலீஸார், தப்பியோடிய கும்பலை தேடி வருகின்றனர்.

கட்சியில் இருந்து நீக்கம்: இதற்கிடையே, இச்சம்பவம் தொடர்பாக அறிந்த விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் கடலூர் மேற்கு மாவட்ட செயலாளர் திராவிடமணி, கட்சி பெயருக்கு அவப்பெயர் ஏற்படுத்தியதாகக் கூறி செல்வத்தை அடிப்படை உறுப்பினர் பதவியில் இருந்து நீக்கி அறிக்கை வெளியிட்டுள்ளார்.

# காஷ்மீருக்கான முதல் வந்தே பாரத் எக்ஸ்பிரஸ் ரெயில் சேவை: ஏப்ரல் 19ந்தேதி பிரதமர் மோடி துவக்குகிறார்




**புதுடெல்லி, ஏப்.2:**

ஜம்மு மற்றும் காஷ்மீருக்கான முதல் வந்தே பாரத் எக்ஸ்பிரஸ் ரெயில் சேவையை ஏப்ரல் 19-ந்தேதி பிரதமர் மோடி கொடியசைத்து தொடங்கி வைக்கிறார்.

இந்தியாவில் பிரதமர் மோடி தலைமையிலான அரசின் பிரதான திட்டமாக வந்தே பாரத் ரெயில் திட்டம் பார்க்கப்படுகிறது. நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் வந்தே பாரத் ரெயில் சேவைகளுக்கு மக்களிடையே சிறந்த வரவேற்பை பெற்றுள்ளது. இதனை அடுத்து காஷ்மீரிலும் முதன்முறையாக வந்தே பாரத் ரெயில் சேவை கொண்டு வரப்பட இருக்கிறது.

ஜம்மு கத்ரா ஸ்ரீநகர் இடையே உள்ள 272 கி.மீ. பகுதிகளை இணைக்கும் வகையில் இந்த வந்தே பாரத் எக்ஸ்பிரஸ் ரெயில் இயக்கப்படும் என மத்திய அரசு அறிவித்தது.

எனினும் ஜம்மு ரெயில்வே நிலையத்தில் புதுப்பிக்கும் பணிகள் நடந்து வருகின்றன. இதனால் கட்ரா பானிஹால் இடையேயான 111 கி.மீ. தொலைவுக்கு கடந்த ஜனவரி மாதம் சோதனை ஓட்டம் வெற்றிகரமாக நடந்தது. இதைத்தொடர்ந்து இந்த பகுதியில் வந்தே பாரத் ரெயில் திட்டத்தை பிரதமர் மோடி வரும் 19ம் தேதி கட்ரா ரெயில் நிலையத்தில் கொடியசைத்து துவக்கி வைக்க உள்ளார்.

இந்த புதிய வந்தே பாரத் எக்ஸ்பிரஸ் ரெயில் சேவையால், ஜம்மு மற்றும் ஸ்ரீநகர் இடையேயான போக்குவரத்து நேரம் வெகுவாக குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதனுடன் ஒரு நவீன மற்றும் திறன் வாய்ந்த ரெயில் சேவையானது இந்த பகுதிக்கு கிடைக்கும்.

இதுபற்றி ஜம்முவில் செய்தியாளர்களிடம் பேசிய மத்திய அமைச்சர் ஜிதேந்திரா சிங் ஏப்ரல் 19-ந்தேதி உதாம்பூருக்கு பிரதமர் மோடி வருகை தருவார். உலகின் மிக உயர்ந்த பகுதியில் அமைந்த ரெயில் பாலம் பகுதிக்கு வந்து அவர் சேவையை தொடங்கி வைப்பார். இதன்பின்னர் கத்ரா பகுதியில் இருந்து வந்தே பாரத் எக்ஸ்பிரஸ் ரெயில் சேவையை பிரதமர் மோடி கொடியசைத்து தொடங்கி வைக்கிறார் என கூறியுள்ளார்.

மாதா வைஷ்ணவதேவி கோவிலின் அடிவாரத்தில் அமைந்துள்ள கட்ரா பகுதியில் ரெயில் நிலையம் திறக்கப்பட உள்ளதால், இங்கு வரும் ஏராளமான யாத்ரீகர்கள் பயனடைவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

காஷ்மீருக்கான நேரடி ரெயில் இணைப்புக்கான நீண்டகால தேவையை பூர்த்தி செய்யும் வகையில் இந்த திட்டம் அமையும். தற்போது, காஷ்மீர் பள்ளத்தாக்கு பகுதியில் சங்கல்தான் மற்றும் பாராமுல்லா இடையேயும் மற்றும் கத்ராவில் இருந்து நாடு முழுவதுமுள்ள பகுதிகளுக்கும் ரெயில் சேவை இருந்து வருகிறது.

ரெயில் சேவையால் காஷ்மீரை இணைக்கும் உயர் நோக்கத்துடனான இந்த திட்டம் புவியியல், வானிலை மற்றும் நிலப்பரப்பு சார்ந்த சவால்களால் அதன் பணிகள் தொடர்ந்து தாமதமடைந்து வந்தன நிலையில் தற்போது துவக்கப்பட உள்ளது.

# நாட்டின் கல்வி முறையை சீர்குலைக்க முயற்சி: மத்திய அரசு மீது காங்கிரஸ் தலைவர் சோனியா குற்றச்சாட்டு



**புதுடெல்லி, ஏப்.2:**

காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி கூறியதாவது: கடந்த 10 ஆண்டுகளில் கல்வித் துறையில் ஏற்பட்ட மாற்றங்களை பார்த்தால் 3 கொள்கைகளின் அடிப்படையில் பாஜக அரசு செயல்படுவது தெளிவாகும். மத்திய அரசிடம் அதிகாரத்தை குவிப்பது, கல்வித் அதிகரித்து வணிக மயமாக்குவது, பாடத் திட்டங்கள், கல்வி நிறுவனங்களை வகுப்புவாத மயமாக்குவது என்ற 3 'சி'-க்களுடன் பாஜக அரசு செயல்பட்டு வருகிறது.

நாட்டின் கல்வி முறையை வேட்டையாட அதிகார மையப்படுத்தல், வணிகமயமாக்கல் மற்றும் வகுப்புவாத மயமாக்கல் (centralisation of power, commercialisation, and communalisation) ஆகிய 3 கொள்கைகளையும் பாஜக பயன்படுத்துகிறது. கல்வித் துறையில் மாநிலங்கள் முக்கிய முடிவுகள் எடுப்பதை மத்திய அரசு புறந்தள்ளுகிறது. கல்வி தொடர்பாக முக்கிய முடிவுகள் எடுக்க மத்திய, மாநில அரசுகள் பங்கேற்கும் மத்திய கல்வி ஆலோசனை வாரியத்தின் கூட்டம் கடந்த 2019-ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் இருந்து நடைபெறவே இல்லை. பிஎம்ஸ்ரீ திட்டத்தை அமல்படுத்த மாநில அரசுகளை மத்திய அரசு கட்டாயப்படுத்துகிறது.

அதற்காக சமக்ரா ஷிக்சா அபியான் திட்டத்தின் கீழ் கல்விக்கு ஒதுக்க வேண்டிய நிதியை மத்திய அரசு நிறுத்தி வைக்கிறது. இந்த நிதியைதான் மாநில அரசுகள் பல ஆண்டுகளாக குழந்தைகளுக்கு இலவச கல்வி உரிமை, கட்டாயக் கல்வி சட்டத்தின் கீழ் பயன்படுத்தி வருகின்றன. அதேபோல் புதிய தேசியக் கல்விக் கொள்கை உயர் கல்வியிலும் தாக்கத்தை ஏற்படுத்தும். துணைவேந்தர்களை நியமிக்கும் விவகாரத்தில் மாநில அரசுகளின் அதிகாரத்தை பறிக்கும் வகையில் யுஜிசி வழிகாட்டி நெறி முறைகளில் மாற்றங்கள் செய்துள்ளது. இதன் மூலம் கூட்டாட்சி தத்துவத்தையும் மத்திய அரசு அலட்சியப்படுத்துகிறது.

இதேபோல் என்சிஇஆர்டி பாடப் புத்தகங்களிலும் மாற்றங்களை கொண்டு வந்துள்ளது. மகாத்மா காந்தி படுகொலை. முகலாயர் தொடர்பான வரலாறுகளை நீக்கி பாடத் திட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

தகுதி அடிப்படையில் இல்லாமல், சித்தாந்த ரீதியில் சாதகமாக உள்ளவர்கள் ஆசிரியர்களாக நியமிக்கப்படுகின்றனர். இது போல் கடந்த 10 ஆண்டுகளாக திட்டமிட்ட ரீதியில் நாட்டின் கல்வி முறை சிதைக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு சோனியா காந்தி கூறியுள்ளார்.

# அறிவுசார் சொத்துரிமை விருதுக்கு விண்ணப்பிக்கலாம்: பொறியியல் கல்லூரிகளுக்கு அண்ணா பல்கலை. அழைப்பு




**சென்னை, ஏப்.2:**

சிறந்த பொறியியல் கல்லூரிகள் மற்றும் சிறந்த துறைகள் அறிவுசார் சொத்துரிமை விருதுக்கு விண்ணப்பிக்கலாம் என அண்ணா பல்கலைக்கழகம் அறிவித்துள்ளது.

கண்டுபிடிப்புத்திறனை ஊக்குவிக்கும் வகையில் அண்ணா பல்கலைக்கழகம் சார்பில் அறிவுசார் சொத்துரிமை விருது வழங்கப்பட்டு வருகிறது. அண்ணா பல்கலைக்கழக உறுப்பு கல்லூரிகளான கிண்டி பொறியியல் கல்லூரி, குரோம்பேட்டை எம்ஐடி, அழகப்பா தொழில்நுட்பக்கல்வி நிறுவனம் மற்றும் கட்டிடக்கலை கல்லூரியில் சிறந்த 2 துறைகள் அல்லது சிறந்த மையங்களுக்கும், அதேபோல், அண்ணா பல்கலைக்கழக இணைப்புக் கல்லூரிகளில் ஒவ்வொரு மண்டலத்திலும் தலா 2 சிறந்த பொறியியல் கல்லூரிகளுக்கும் அறிவுசார் சொத்துரிமை விருது வழங்கப்படுகிறது

அந்த வகையில் 2025-ம் ஆண்டுக்கான அறிவுசார் சொத்துரிமை விருதுக்கு பொறியியல் கல்லூரிகள், துறைகள், மையங்கள் ஏப்ரல் 18-ம் தேதிக்குள் விண்ணப்பிக்க வேண்டும் என அண்ணா பல்கலைக்கழகத்தின் அறிவுசார் சொத்துரிமை மையம் அறிவித்திருக்கிறது.

இதுதொடர்பான கூடுதல் விவரங்கள் www. annuniv.edu/ipr என்ற இணையதளத்தில் அறிந்துகொள்ளலாம் என்றும் அம்மையம் தெரிவித்துள்ளது.

## விளையாட்டு செய்திகள்

# சென்னை நேரு மைதானத்தில் நடந்த கால்பந்து கண்காட்சிப் போட்டி உதயநிதி துவக்கி வைத்தார்

**சென்னை ஏப்.2:**

சென்னையில் நடைபெறும் சர்வதேச அளவிலான கால்பந்து உச்சிமாநாட்டையொட்டி, நேரு உள்விளையாட்டரங்கில் கால்பந்து கண்காட்சிப் போட்டி நடைபெற்றது. இதில், 2002-இல் கால்பந்து உலகக் கோப்பையை வென்ற பிரேசில் அணி வீரர்கள், ஜாம்பவான் ரொனால்டினோ தலைமையில் பிரேசில் லெஜண்ட்ஸ் அணியாகவும், இந்திய கால்பந்து அணியின் முன்னாள் கேப்டனும், விஜய் நடித்து பிகில் படத்தில் வில்லனாக நடித்திருந்தவருமான ஐஎம். விஜயன் தலைமையில் முன்னாள் வீரர்கள் அடங்கிய இந்தியா ஆல் ஸ்டார் அணியும் விளையாடின.

கால்பந்து என்றாலே ரசிகர்களுக்கு சட்டென நினைவுக்கு வரும் பிரேசில் அணியின் உலகப்புகழ் பெற்ற வீரர்களான ரொனால்டினோ, ரிவால்டோ, கில்பர்டோ சில்வா உள்ளிட்டோர் சென்னை வருகின்றனர் என்றதுமே கால்பந்து ரசிகர்களிடையே உற்சாகம் தொற்றிக்கொண்டது. இதனால், போட்டியைக் காண ஆயிரக்கணக்கான ரசிகர்கள் திரண்டனர். துணை முதலமைச்சர் உதயநிதி போட்டியை தொடங்கி வைத்தார். மொத்தம் 70 நிமிடம் போட்டி நடந்தது. முதல் பாதி கோல் எதுவுமின்றி சமநிலையில் இருந்தது. இரண்டாவது பாதியின் 43வது நிமிடத்தில் பிரேசிலின் வயோலா ஒரு கோல் அடித்தார். இதற்கு, அடுத்த நிமிடத்தில் இந்தியாவின் பிபியானோ பெர்ணான்டஸ் ஒரு கோல் அடித்து பதிலடி கொடுத்தார். பின், 64வது நிமிடத்தில் பிரேசிலின் ரிக்கார்டோ ஒலிவேரா ஒரு கோல் அடித்து 2-1 என முன்னிலை பெற்றுத்தந்தார். தொடர்ந்து போராடிய இந்திய வீரர்களால் கூடுதலாக கோல் அடிக்க முடியவில்லை. ஆட்டநேர முடிவில் பிரேசில் அணி 2- 1 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.

முதலமைச்சர் மகிழ்ச்சி: ஒரு மாபெரும் கால்பந்து போட்டி சென்னையில் நடைபெற்றது மிகுந்த மகிழ்ச்சி அளிப்பதாக முதல்வர் மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார்.

சென்னையில் கால்பந்து போட்டி நடைபெற்றது பற்றி முதல்வர் மு.க. ஸ்டாலின் தனது எக்ஸ் பக்கத்தில், "நேற்று இரவு தமிழ்நாடு பெருமையுடன் கர்ஜித்தது. பிரேசில் லெஜெண்ட்ஸ் இந்தியா ஆல் ஸ்டார்ஸ் கால்பந்து போட்டி சென்னையில் நடைபெற்றது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. இது ஒரு போட்டி என்பதைத் தாண்டி, எப்போதும் நினைவில் இருக்கக்கூடிய ஒரு சிறப்பான தருணமாக அமைந்தது. வருங்கால தலைமுறையினரை ஊக்குவிக்கும் வகையிலான ஒன்று. குழந்தைகளே, கடினமாகப் படியுங்கள், தைரியமாக விளையாடுங்கள், நியாயமாக வெற்றி பெறுங்கள்" என்று பதிவிட்டுள்ளார்.

# வான்கடேவில் வெற்றிக் கொடி கட்டிய மும்பை

**மும்பை, ஏப்.2:**

மும்பையில் உள்ள வான்கடே கிரிக்கெட் மைதானத்தில் இந்த ஆட்டம் நடைபெற்றது. இதில் டாஸ் வென்ற மும்பை இந்தியன்ஸ் அணியின் கேப்டன் ஹர்திக் பாண்டியா பந்து வீச முடிவு செய்தார். கொல்கத்தா அணி 16.2 ஓவர்களில் 116 ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது. பவர்பிளே முடிவில் 4 விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது கொல்கத்தா. அந்த சரிவுக்கு பின்னர் அந்த அணியால் காம்பேக் கொடுக்க முடியவில்லை. அந்த அணி பேட்ஸ்மேன்கள் களத்துக்கு வருவதும் போவதுமாக இருந்தனர். குறிப்பாக மும்பை இந்தியன்ஸ் அணியின் அறிமுக வீரர் அஸ்வனி குமார் நான்கு விக்கெட்டுகளை கைப்பற்றினார். ரஹானே, ரிங்கு சிங், மணிஷ் பாண்டே மற்றும் ரஸ்ஸல் விக்கெட்டுகளை அவர் கைப்பற்றினார். மும்பை தரப்பில் தீபக் சஹார் 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார். சான்ட்னர், ஹர்திக், போல்ட் மற்றும் விக்னேஷ் புதூர் தலா ஒரு விக்கெட் வீழ்த்தினர். 117 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை மும்பை இந்தியன்ஸ் விரட்டியது. இம்பேக்ட் வீரர் ரோஹித் சர்மா மற்றும் ரிக்கல்டன் இணைந்து இன்னிங்ஸை ஓபன் செய்தனர். ரோஹித் 13 ரன்களிலும், வில் ஜேக்ஸ் 16 ரன்களிலும் ஆட்டமிழந்தனர். 12.5 ஓவர்களில் 2 விக்கெட்டுகள் இழப்புக்கு 121 ரன்கள் எடுத்தது. இதன் மூலம் 8 விக்கெட்டுகளில் வெற்றி பெற்றது மும்பை.

ரிக்கல்டன், 41 பந்துகளில் 62 ரன்கள் எடுத்தார். சூரியகுமார் யாதவ் 9 பந்துகளில் 27 ரன்கள் எடுத்தார். நடப்பு சீசனில் இது மும்பை அணியின் முதல் வெற்றியாக அமைந்துள்ளது. சென்னை மற்றும் அகமதாபாத் நகரில் நடைபெற்ற போட்டிகளில் மும்பை இந்தியன்ஸ் தோல்வியை தழுவி இருந்தது குறிப்பிடத்தக்கது.

# பெங்களூரு முதலிடம்: புள்ளி பட்டியல் விபரம்

**மும்பை, ஏப்.2:**

10 அணிகள் பங்கேற்றுள்ள 18-வது ஐ.பி.எல். கிரிக்கெட் தொடர் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் சிறப்பாக நடந்து வருகிறது. இதில் இதுவரை 11 லீக் ஆட்டங்கள் முடிவடைந்துள்ளன. இதன் முடிவில் ஐ.பி.எல். புள்ளி பட்டியலில் அணிகளின் தற்போதைய நிலை: 2 போட்டிகளில் விளையாடி 2-லும் வெற்றி கண்டுள்ள ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு, டெல்லி கேப்பிடல்ஸ் அணிகள் 4 புள்ளிகள் பெற்று சமநிலை வகித்தாலும் ரன்ரேட் அடிப்படையில் பெங்களூரு முதலிடத்திலும், டெல்லி 2-வது இடத்திலும் உள்ளது. அடுத்த இடங்களில் தலா 1 வெற்றி பெற்ற நிலையில் ரன்ரேட் அடிப்படையில் லக்னோ 3-வது இடத்திலும், குஜராத் 4-வது இடத்திலும், பஞ்சாப் 5-வது இடத்திலும், கொல்கத்தா 6-வது இடத்திலும்,

சென்னை 7-வது இடத்திலும், ஐதராபாத் 8-வது இடத்திலும், ராஜஸ்தான் 9-வது இடத்திலும் உள்ளன. ஒரு வெற்றி கூட பெறாத மும்பை இந்தியன்ஸ் புள்ளி பட்டியலில் கடைசி இடத்தில் (10-வது இடம்) உள்ளது.

# உலகின் அனைத்து நாடுகளுக்கும் பாரபட்சமின்றி இறக்குமதி வரி விதிக்கப்படும்: ட்ரம்ப் அறிவிப்பு

**வாஷிங்டன், ஏப்.2:**

அனைத்து உலக நாடுகளின் பொருட்கள் மீதான இறக்குமதிக்கும் கூடுதல் வரி விதிக்கப்படும் என அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் அதிபராக 2-வது முறையாக பொறுப்பேற்ற டொனால்டு ட்ரம்ப், தங்கள் நாட்டின் பொருட்களுக்கு இந்தியா உள்ளிட்ட பல நாடுகள் அதிக வரி விதிப்பதாக குற்றம்சாட்டினார். இதற்கு பதிலடியாக, அமெரிக்காவில் இறக்குமதியாகும் பிற நாடுகளின் பொருட்களுக்கு, சம்பந்தப்பட்ட நாடுகள் விதிக்கும் அதே அளவுக்கு (பரஸ்பர வரி) ஏப்ரல் 2-ம் தேதி முதல் வரி விதிக்கப்படும் என அறிவித்தார். இதையடுத்து, இது தொடர்பாக உலக நாடுகள் அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றன.

இதனிடையே, ட்ரம்பின் கூடுதல் வரி விதிப்பால் நியாயமற்ற வகையில் அமெரிக்க பொருட்களுக்கு அதிக வரி விதிக்கும் 10 முதல் 15 நாடுகளுக்கு மட்டுமே பாதிப்பு ஏற்படும் என தகவல் வெளியாகி இருந்தது. இந்நிலையில், அதிபர் ட்ரம்ப் செய்தியாளர்களிடம் நேற்று கூறும்போது, “அனைத்து உலக நாடுகளின் பொருட்கள் மீதும் கூடுதல் வரி விதிக்கப்படும். என்ன நடக்கிறது என்று பார்ப்போம்” என்றார்.

பரஸ்பர வரி விதிக்கப்படும் நாளான ஏப்ரல் 2 அமெரிக்காவுக்கு விடுதலை நாள் என ட்ரம்ப் ஏற்கெனவே கூறியிருந்தார். அந்த நாள் நெருங்கிக் கொண்டிருக்கும் நிலையில், கடைசி நேரத்தில் வரிகளை சிறிதளவு குறைக்க வாய்ப்பு இருப்பதாக நம்பப்படுகிறது.

மேலும் ட்ரம்ப் கூறும்போது, “அமெரிக்கா மீது அதிக வரி விதிக்கும் நாடுகளுடன் இனிமையாகவும் தாராளமாகவும் கனிவாகவும் இருப்பேன். பல தசாப்தங்களாக உலக நாடுகள் அமெரிக்காவிடம் காட்டிய தாராளத்தைவிட எங்கள் வரி விதிப்பு கனிவாக இருக்கும். வரலாற்றில் இதுவரை எந்த ஒரு நாடும் பாதிக்கப்படாத அளவுக்கு எங்கள் நாடு பாதிப்புக்குள்ளானது. ஆனால் உலக நாடுகளைப் போல் அல்லாமல் மற்ற நாடுகள் மீது இனிமையாக நடந்து கொள்வோம். இந்த நடவடிக்கையால் எங்கள் நாட்டுக்கு கணிசமான வருவாய் கிடைக்கும்” என்றார்.

இதுகுறித்து அமெரிக்க வர்த்தக துறை உயர் அதிகாரி பீட்டர் நவரோ கூறும்போது, “உலக நாடுகள் மீதான பரஸ்பர வரி மூலம் ஆண்டுக்கு 600 பில்லியன் டாலர் வருவாய் கிடைக்கும். இதில் வாகன இறக்குமதி மூலம் மட்டும் 100 பில்லியன் டாலர் கிடைக்கும்” என்றார்.

ஈரான் மீது வெடிகுண்டு வீசுவோம்: ஈரான் தனது அணு ஆயுத திட்டங்களை கைவிடாவிட்டால் அந்த நாட்டின் மீது வெடிகுண்டு களை வீசுவோம் என அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தொடர்ந்து எச்சரிக்கை விடுத்து வருகிறார். ஆனால், இதை ஏற்க மறுத்து வரும் ஈரான் அதிகாரிகள், தங்கள் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தினால் தக்க பதிலடி தரப்படும் என எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இந்நிலையில், தனியார் செய்தி சேனல் ஒன்றுக்கு ஞாயிற்றுக்கிழமை தொலைபேசி மூலம் ட்ரம்ப் அளித்த பேட்டியில் கூறும் போது, “அணு ஆயுத திட்டங்கள் தொடர்பான புதிய ஒப்பந்தத்தில் ஈரான் கையெழுத்திடாவிட்டால் அந்நாட்டின் மீது வெடிகுண்டு வீசப்படும். இது அவர்கள் இதுவரை பார்த்திராத தாக்குதலாக இருக்கும்” என மீண்டும் எச்சரிக்கை விடுத்தார்.

இதையடுத்து, அமெரிக்கா தாக்குதல் நடத்தினால் தக்க பதிலடி கொடுப்பதற்காக ஈரான் ராணுவம் ஏவுகணைகளை தயார் நிலையில் வைத்துள்ளது.

வான்வழி தாக்குதலை சமாளிக்கக் கூடிய இந்த ஏவுகணைகள் ‘ஏவுகணை நகரம்’ என பெயரிடப்பட்டுள்ள தரைகீழ் பகுதியில் வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான வீடியோவையும் ஈரான் வெளியிட்டுள்ளது.

அமெரிக்க அதிபர் ட்ரம்ப் ஈரானின் உயர் அதிகாரம் பெற்ற தலைவர் அயதொல்லா காமேனிக்கு கடந்த மார்ச் 12-ம் தேதி ஒரு கடிதம் எழுதினார். அதில், ஈரானின் அணு ஆயுதங்களை முற்றிலுமாக முடிவுக்குக் கொண்டுவருவது தொடர்பான பேச்சுவார்த்தைக்கு முன்வர வேண்டும் என குறிப்பிட்டிருந்தார்.

# விண்வெளியில் இருந்து பார்க்கும்போது இந்தியா எப்படி இருந்தது? - சுனிதா வில்லியம்ஸ் சுவாரஸ்ய பதில்



**வாஷிங்டன், ஏப்.2:**

விண்வெளியில் இருந்து பார்க்கும்போது இந்தியா எப்படி இருந்தது? என்ற கேள்விக்கு சுனிதா வில்லியம்ஸ் அளித்த சுவாரஸ்ய பதில் கவனம் பெற்றுள்ளது.

விண்வெளியில் அதிக நாட்களை கழித்த 2-வது அமெரிக்க வீரர் என்ற சாதனையை சுனிதா வில்லியம்ஸ் படைத்துள்ளார். சுனிதா வில்லியம்ஸும் பேரி வில்மோரும் விண்வெளியில் 286 நாட்களை கழித்துள்ளனர். அங்கு 12,13,47,491 மைல் தூரம் பயணித்துள்ளனர். 4,576 முறை பூமியை சுற்றி வந்துள்ளனர். சுனிதா 62 மணி நேரம் 6 நிமிடங்கள் விண்வெளியில் நடந்துள்ளார். இதன்மூலம் அதிக நேரம் நடந்த முதல் பெண் என்ற சாதனை படைத்துள்ளார். ஒட்டு மொத்தமாக அதிக நேரம் விண்வெளியில் நடந்தவர்கள் பட்டியலில் 4-ம் இடம் பிடித்துள்ளார்.

இப்படி நாசாவுக்கும், இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர் என்பதால் இந்தியாவுக்கும் பெருமை சேர்த்துள்ள சுனிதா வில்லியம்ஸ் முதன்முறையாக சக வீரர் வில்மோருடன் இணைந்து ஊடகங்களுக்குப் பேட்டியளித்துள்ளார்.

அதில் அவர் கூறியிருப்பதாவது: விண்வெளியில் இருந்து இந்தியாவைப் பார்க்கும்போது ஆச்சரியமாக இருந்தது.

ஒவ்வொரு முறை நாங்கள் இமயமலை மேலே பயணித்தபோதும் புட்ச் வில்மோர் சில அற்புதமான புகைப்படங்களை எடுத்தார். இமயமலை இந்தியாவுக்குள் வழிந்தோடுவதுபோல் ஒரு வியத்தகு காட்சியைத் தந்தது. இந்தியாவை விண்வெளியில் இருந்து பார்க்கும் போது மும்பையில் இருந்து குஜராத் வரை இரவில் ஒளிர்ந்த மின் விளக்குகள் பிரம்மாண்டமாகக் காட்சியளித்தன.


ஒரு நாள் நான் எனது தந்தையின் சொந்த நாட்டுக்கு வர விரும்புகிறேன். இந்தியா ஒரு சிறந்த நாடு. அற்புதமான ஜனநாயகம்.

ஆக்சியம் மிஷனுடன் இணைந்து விண்வெளிக்குச் செல்லவிருக்கும் இந்திய வீரரை நினைத்து பெருமிதம் கொள்கிறேன்.

விண்வெளி ஆராய்ச்சிகளில் இந்தியா தனியார் நிறுவனங்களுடன் இணைந்து மேற்கொள்ளும் முயற்சி பாராட்டத்தக்கது. எதிர்காலத்தில் விண்வெளி ஆராய்ச்சியில் இந்தியாவுக்கு உதவ தயாராக இருக்கிறேன்.

# கழிவறையில் வாழும் சீன பெண்!

**பெய்ஜிங், ஏப்.2:**



சீனாவின் ஹுபெய் பகுதியை சேர்ந்தவர் யாங் (18). இவர் தற்போது ஹுனான் மாகாணம், ஜுஜோவ் நகரில் உள்ள பர்னிச்சர் கடையில் பணியாற்றி வருகிறார். அவரது மாதம் வருமானம் ரூ.31,776 ஆகும். ஜுஜோவ் நகரில் ஒரு வீட்டின் வாடகை ரூ.9,500 முதல் ரூ.21,000 வரை உள்ளது.

யாங் பெறும் ஊதியத்தில் பாதியை அவரது பெற்றோருக்கு அனுப்புகிறார். மீதமுள்ள ஊதியத்தில் அவரால் வீட்டு வாடகை கொடுப்பது கடினம். இந்த சூழலில் பர்னிச்சர் கடையின் கழிப்பறையை வாடகைக்கு தருமாறு கடை உரிமையாளரிடம் யாங் கோரினார்.

அவரது வறுமை சூழலை அறிந்த கடை உரிமையாளர் கழிப்பறையை ரூ.588 மாத வாடகைக்கு அளித்தார். தற்போது இளம்பெண் யாங், கழிப்பறை மற்றும் அதனை ஒட்டிய சிறிய பகுதியில் வாழ்ந்து வருகிறார்.

இதுகுறித்து அவர் கூறியதாவது: நான் வாங்கும் ஊதியத்தில் என்னால் வாடகைக்கு வீடு எடுக்க முடியவில்லை. பர்னிச்சர் கடையின் கழிப்பறை, எனது வீடாக மாறிவிட்டது. பகலில் வாடிக்கையாளர்கள் வருவார்கள். எனவே கழிப்பறை மற்றும் அதை ஒட்டிய பகுதியில் இருக்கும் எனது பொருட்களை மொட்டை மாடியில் வைத்து விடுவேன். கடை மூடிய பிறகு கழிப்பறை பகுதிக்கு வந்துவிடுவேன். இங்குதான் சமையல் செய்கிறேன், துணி துவைக்கிறேன், தூங்குகிறேன்.

நான் எனது குடும்பத்தை பிரிந்து ஜுஜோவ் நகரில் தனியாக வசித்து வருகிறேன். எனது ஊதியம் குறைவு. எனது பாதுகாப்பையும் கருத்தில் கொண்டு கடையின் கழிப்பறையில் வாழ்க்கை நடத்துகிறேன்.

நான் பெறும் ஊதியத்தில் எனது பெற்றோர், தம்பி வாழ்கின்றனர். தம்பியின் கல்வி செலவுக்கும் நானே பொறுப்பு. மீதமிருக்கும் ஊதியத்தை மாதந்தோறும் சேமித்து வருகிறேன். நிச்சயம் ஒருநாள் ஜுஜோவ் பகுதியில் சொந்த வீடு வாங்கி குடியேறுவேன்.

இவ்வாறு யாங் தெரிவித்தார்.


# ரம்ஜான் நாளில் பாலஸ்தீனர்கள் படுகொலை



**காசா, ஏப்.2:**

மார்ச் 31 அன்று உலகம் முழுவதும் உள்ள இஸ்லாமியர்கள் ராம்ஜான் கொண்டாடினர். இனப்படுகொலைக்கு உள்ளாகி வரும் பாலஸ்தீனர்களும் சிதைக் கப்பட்ட காசா கட்டட இடிபாடுகளுக்கு இடையே தொழுகை நடத்தினர். இந்த ரம்ஜான் நாளன்றும் இஸ்ரேல் ராணுவம் தனது இனப்படுகொலை தாக்குதலை நிறுத்தாமல் தொடர்ந்து குண்டுகளை வீசி வந்தது. இந்த கொடூரத் தாக்குதலில் குழந்தைகள் பெண்கள் என சுமார் 35 பாலஸ்தீனர்களை இஸ்ரேல் படுகொலை செய்தது.


# மியான்மர்: தொழுகையின் போது பலியான துயரம்



**மியான்மா, ஏப்.2:**

மார்ச் 28 மியான்மரில் நிலநடுக்கம் ஏற்பட்ட போது தொழுகையில் இருந்த சுமார் 700 முஸ்லிம்கள் பலியாகியுள்ளனர் என்ற சோகமான செய்தி வெளியாகியுள்ளது. இதனை அந்நாட்டின் முஸ்லிம் அமைப்பு தெரிவித்துள்ளது. நிலநடுக்கத்தின் போது சுமார் 60 மசூதிகள் முழுமையாகவோ பகுதியாகவோ இடிந்துள்ளன. நிலநடுக்கத்தில் 1,700 பேர் பலியாகியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள சூழலில் இந்த 700 நபர்கள் உள்ளடங்குவார்களா என அதிகாரப்பூர்வமாக தெரிவிக்கப்படவில்லை.

# 30 லட்சம் ஆப்கானியர்களை வெளியேற்ற திட்டம்



**இஸ்லாமாபாத், ஏப்.2:**

இந்த ஆண்டு 30 லட்சம் ஆப்கானிஸ்தான் மக்களை நாட்டை விட்டு வெளியேற்ற பாகிஸ்தான் திட்டமிட்டுள்ளது. தாமாக முன் வந்து வெளியேறுவதற்கான காலம் மார்ச் 31 உடன் முடிவடைந்து விட்டதால் இவ்வாறு அறி வித்துள்ளது. போதிய ஆவணங்கள் இன்றி அந் நாட்டில் உள்ள ஆப்கானியர்களை 2023 முதல் பாக் அரசு வெளியேற்றி வருகின்றது. கடந்த 18 மாதங்களில் சுமார் 8,45,000 ஆப்கானியர்கள் பாகிஸ்தானை விட்டு வெளியேறியுள்ளனர். தற்போது 30 லட்சம் ஆப்கானிஸ்தான் மக்கள் அந்நாட்டில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

# குழந்தைகளுக்கு எதிரான வன்முறைகள் சூடானில் அதிகரிப்பு




சூடானில் குழந்தைகளுக்கு எதிரான வன் முறைகள் அதிகரித்துள்ளன. 2024 இன் முதல் காலாண்டுடன் ஒப்பிடும் போது சூடா னில் குழந்தைகளின் இறப்பு விகிதம் 83 சதவீதம் அதிகரித்துள்ளது என ஐ.நா.வின் குழந்தைகள் நிதியம் கடந்த வாரம் தெரி வித்துள்ளது. உள்நாட்டு போரின் காரணமாக குழந்தைகள் படுகொலை செய்யப்படுவது, உடல் பாகங்களை இழப்பது, பாலியல் வன்கொடுமை என மோசமான பாதிப்புகளுக்கு உள்ளாகின்றனர்.


# ஜெலன்ஸ்கிக்கு மீண்டும் மிரட்டல் விடுத்த டிரம்ப்

அமெரிக்காவுடனான கனிம ஒப்பந்தத்தி லிருந்து ஜெலன்ஸ்கி பின்வாங்க முயற் சிக்கிறார் என டிரம்ப் குற்றம் சாட்டியுள்ளார். அப்படி அவர் பின் வாங்கினால் அது அவருக்கு சிக்கல் களை உருவாக்கும். மிகப் பெரிய பிரச்சனைகளை உருவாக்கும் என எச்சரித்துள்ளார். உக்ரைனின் கனிம வளங்களில் 50 சதவீதத்தை கொடுக்க ஜெலன்ஸ்கி ஒப்புக்கொண்டார். அதையடுத்து அந்த ஒப்பந்தம் மீண்டும் மறுவடிவமைப்பு செய்யப்பட்டு கையெழுத்தாக உள்ளதாக அமெ ரிக்க தரப்பில் கூறப்பட்டு வந்த நிலையில் டிரம்ப் ஜெலன்ஸ்கியை எச்சரித்துள்ளார்.

# தாய்லாந்தில் கட்டிய 30 மாடி கட்டிடம் தரைமட்டம்: சீன கட்டுமான நிறுவனத்தின் 5 பேர் கைது

**பாங்காக், ஏப்.2:**

தாய்லாந்தில் கடந்த 28-ம் தேதி நிலநடுக்கம் ஏற்பட்டது. அப்போது அந்த நாட்டின் தலைநகர் பாங்காக்கில் 30 மாடி கட்டிடம் இடிந்து தரைமட்டமானது.



பாங்காக்கில் பல்வேறு உயரமான கட்டிடங்கள் உள்ளன. நிலநடுக்கத்தின்போது சுமார் 95 சதவீத உயரமான கட்டிடங்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை. ஆனால் 30 மாடி கட்டிடம் இடிந்து தரைமட்டமாகி உள்ளது. தாய்லாந்து அரசின் தணிக்கை துறைக்காக இந்த 30 மாடி கட்டிடம் கட்டப்பட்டு வந்தது. சீனாவை சேர்ந்த ‘சைனா ரயில்வே எண் 10 இன்ஜினீயரிங் குரூப்’ என்ற நிறுவனம் டெண்டர் எடுத்து கட்டுமான பணிகளை மேற்கொண்டு வந்தது. கட்டிடத்தின் திட்ட மதிப்பு ரூ.529.57 கோடி ஆகும். இதில் தாய்லாந்து அரசின் தணிக்கை துறை அலுவலகங்கள், ஓட்டல்கள் உள்ளிட்டவை கட்டப்பட்டு வந்தன.

இதுகுறித்து தாய்லாந்து உள்துறை அமைச்சர் அனுடின் சார்ன் விரகுல் கூறியதாவது: சீன நிறுவனத்தின் கட்டுமானம் குறித்து விசாரிக்க உயர்நிலைக் குழு அமைக்கப்பட்டு உள்ளது. இந்த குழு 7 நாட்களில் அரசிடம் அறிக்கையை தாக்கல் செய்யும். குழு அளிக்கும் பரிந்துரைகளின் படி சீன நிறுவனம் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

பாங்காக்கில் பல்வேறு பழைய கட்டிடங்கள் நிலநடுக்கத்தை தாங்கி நிற்கின்றன. ஆனால் புதிதாக கட்டப்பட்ட கட்டிடம் இடிந்து நொறுங்கியிருப்பது கட்டுமானத்தின் தரம் குறித்து பல்வேறு சந்தேகங்களை எழுப்புகிறது. உயர் நிலைக் குழு சம்பவ இடத்தில் விரிவான ஆய்வு நடத்தும்.

இவ்வாறு அமைச்சர் அனுடின் சார்ன்விரகுல் தெரிவித்தார்.

பாங்காக் காவல் துறை மூத்த தலைவர் நோபாசின் பொன்சா வாத் கூறியதாவது: சம்பந்தப்பட்ட சீன நிறுவனத்தின் ஊழியர்கள், அங்கிருந்த முக்கிய கோப்புகளை எடுத்துச் சென்றதாகக் கூறப்படுகிறது. இதுதொடர்பாக 5 சீனர்கள் கைது செய்யப்பட்டு உள்ளனர். அவர்களிடம் தீவிர விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. கட்டுமானம் குறித்த டிஜிட்டல் விவரங்களையும் சீன நிறுவனம் அழித்திருப்பதாக கூறப்படுகிறது. இதுகுறித்து விசாரணை நடத்திவருகிறோம்.

சீன நிறுவனத்தின் அதிகாரிகள், ஊழியர்கள் கட்டிடம் இடிந்த இடத்துக்கு செல்ல தடை விதிக்கப்பட்டு உள்ளது. கட்டிடம் இடிந்தது தொடர்பாக காவல் துறை சார்பில் தனியாக விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

சீனாவின் முன்னணி கட்டுமான நிறுவனமான ‘சைனா ரயில்வே எண் 10 இன்ஜினீயரிங் குரூப்’ பாங்காக்கில் கட்டிய 30 மாடி கட்டிடம் இடிந்து நொறுங்கியிருப்பது சர்வதேச அளவில் பெரும் விவாதப் பொருளாகி உள்ளது. பல்வேறு நாடுகளில் சீன கட்டுமான நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட டெண்டர்கள் ரத்து செய்யப்பட்டு உள்ளன.